දිනමුරසු වාරමලර් பெப்.10-16,2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 446



## 'தடை தாண்டும்' படலம்!

## உத்தரவுக்காக காத்திருப்பு



## சாதாரணனின் அசாதாரண கடிதம்




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## கீதையும் பாரத தேசமும்

அறியாமை என்ற இருளை நீக்கி மனித குலத்திற்கு ஞான ஒளியைக் கொடுக்கக்கூடிய நாடு ஒன்று இருந்தால் அது 'பாரத தேசமே', ஆன்மீக மதிப்புடைய நூல்கள் தோன்றுவதற்கு வெகு காலத்திற்கு முன்பு வேதம், உபநியும், ஸ்ரீமத் பகவத் கீதை போன்ற இந்திய ஆன்மீக நூல்கள் தோன்றியிருந்தன. குர்-ஆன், பைபிள் போன்ற தர்ம நூல்களில் இருக்கின்ற அனைத்தும், மதிப்பு வாய்ந்த பழங்கால இந்திய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசம், காலம், மொழி மற்றும் சம்பிரதாயம் ஆகியவற்றைப் பொறுத்து மதங்கள் உருவாகின. தர்ம ஸ்தாபகர்கள், தர்ம போதகர்கள், தர்மத்தைப் பரப்புவோர் பகவானைப் பற்றிக் கூறி தர்மத்தை மட்டுமே வளர்த்தனர். ஆனால் ஆன்மீகத்தை வளர்க்கவில்லையென்பது மிகவும் வருந்தக்கூடியது. ஆன்மீகமும், தர்மமும் தனித்தனியாக உள்ளது. தர்மம் சிரத்தை மற்றும் சம்பிரதாயங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஆன்மீகமானது ஆத்ம ஞானம், பரமாத்மா ஞானம்,யோக சாஸ்திரம் மற்றும் மனிதத் தன்மைகளைத் தெரியப்படுத்துகிறது. கீதையானது ஜாதி, தர்மங்களைப் போதிப்பதில்லை. ஆனால் ஆன்மீக வழிகாட்டல் ஒன்றே கீதையின் அடிப்படைக் குறிக்கோள். ஆகையால் இங்கு நாம் கீதை ஞானம் காட்டிய ஒளியில் வேதம், உபநிடதங்களின் சாராம்சத்தைக் காண்கின்றோம். கீதையின் ஒவ்வொரு சுலோகமும் யோகத்தைத் தெளிவாக்குகிறது. கர்மயோகமே கீதாயோகமாகும்.

'ஓம் சாந்தி' பி.கு.விக்கி-கல்முனை.

# ஆன்மீகம்



## இதுதான் உலகம்

ஒரு சமயம் நபி (ஸல்) அவர்கள் வீதி வழியே சென்றுகொண்டிருந்தார்கள். தெருவின் ஓர் இடத்தில் செத்த ஆடு ஒன்று கேட்பாரற்றுக் கிடந்தது. இந்த ஆட்டின் உரிமையாளர்கள் எவ்வளவு கேவலமாக மதித்து இதனை வீசி ஏறிந்து விட்டார்கள் காரணம் என்ன என்று உங்களுக்கு தெரியுமா? என்று தோழர்களிடம் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். "செத்த ஆடு அற்பமானது என்ற காரணத்தினால் இதன் உரிமையாளர்கள் துச்சமாக மதித்து எறிந்து விட்டார்கள். என பதில் அளித்தார்கள். உடனே நபி (ஸல்) அவர்கள் ஆம் உண்மை தான் இந்த செத்த ஆட்டை நீங்கள் எப்படி மதிக்கிறீர்களோ, அப்படித்தான் இறைவனும் இவ் உலகை மதிக்கிறார் என்றார்கள்

அப்துல் ராசீக்-இறத்தோட்டை.

## காண்கிற தேவன்

ஆவி 21:14-19 சாராள் தனது அடிமைப் பெண்ணாகிய ஆகாரை துரத்தி விட்ட வேளையிலே அவள் தான் போகும் இடம் தெரியாமல் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள். அவள் எடுத்துக் கொண்டு போன அப்பமும் தண்ணீரும் செலவழிந்த பின்பு ஆகார் தனது பிள்ளையை ஒரு செடியின் கீழே விட்டு பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன் என்று எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள். கர்த்தர் பிள்ளையின் சத்தத்தை கேட்டார். தேவதூதன் வானத்திலிருந்து ஆகாரை கூப்பிட்டு ஆகாரே உனக்கு என்ன சம்பவித்தது பயப்படாதே பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தை கேட்டார். தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார். அப்பொழுது அவள் ஒரு தண்ணீர் துரவைக் கண்டு போய் துருத்தியிலே தண்ணீர் நிரப்பி பிள்ளைக்குக் குடிக்க கொடுத்தாள். கர்த்தர் அவாந்தர வெளியிலே ஆறுகளை உண்டாக்குவார் அதாவது வழியில்லாத இடங்களில் வழியைத் திறப்பார். முடியாதவைகளை முடியச் செய்வார். தான் தெரிந்துகொண்ட ஜனத்தின் தாகத்துக்கு வானாந்தரத்திலே தண்ணீர்களையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்க வல்லவர் நம் தேவன் ஏசாயா 43: 20

வி.கமலா,கல்கிஸ்ஸை.

## கவிதைப் போட்டி இல.446



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 16.02.2002

கவிதைப் போட்டி இல.446
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.443

### பரிசுக்குரிய கவிதை

### நெஞ்சம் உருக

போர் குதப்பித் துப்பியது
பூக்களையும் பிஞ்சுகளையும்
நீதி கேட்டு நடுத்தெருவில் நின்று
போருக்கு எதிராகப் போர்க் கொடி
தூக்குகின்றது பிஞ்சு ஒன்று.

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

**கவனம்**

கருவறையில்
கனாக்கண்ட சுகமல்ல
இது
பாசறைகளும்
பதுங்கு குழிகளும்
பரவிய தேசம்
பார்த்துச் செல்.

தனுஷன்-கொழும்பு-06




**இன்னும் உயர்த்து**

சிறுவனே கழுத்துவரை உயர்ந்த
சுலோகம் தலைக்கு மேல் உயர்ந்திருந்தால்
போரை நிறுத்துங்கள் எனும் வாசகம்
எம் நாட்டவருக்கும் தெரிந்திருக்குமல்லவா!

எஸ்.பகீரதன்-மட்டக்களப்பு.

**புரியாத போதும்**

எதைப் பிடித்திருக்கின்றேன்
தெரியவில்லை.
ஏதோ நடக்கின்றது
என் மனத்தை ஊனப்படுத்த
அது மட்டும் புரிகின்றது!

எம்.காமில்-பாணந்துறை.

**அபாய விளிம்பு**

பீதிக்குள் புதைந்த
பிஞ்சு முகத்தின் பின்னே
பூகம்பத்தின் இருப்பா
புன்னகையின் தெறிப்பா
யுத்தமே பதில் கூறு?

எம். நிர்மலன்-பியகம.

**வருங்காலம்**

வருங்காலம்
வசந்த மாக
இந்தப் பால்யப் பருவத்திலேயே
சுலோகம் சுமக்கின்றாயா?

எம்.எஸ்.எம். நஸார்-குளியாப்பிட்டி.

**நிறுத்த வேண்டும்**

யுத்த நிறுத்த காலத்திலும்
யுத்தத்தை நிறுத்துமாறு
வேண்டுகிறாயே (நிரந்தரமாக)
உன் வேண்டுகோளையாவது
ஏற்றுக் கொள்ளுமா? இரு தரப்பும்

ஏ.எஸ்.எம்.சறூக்-மூதூர்.

**மலரச்செய்யட்டும்**

யுத்த நிறுத்தமும்
மோதல் தவிர்ப்பும்
வேண்டாத போருக்கு
முற்றுப்புள்ளி வைத்து
மெய்யான சமாதானத்தை
மலரச் செய்யட்டும்.

அ.யாழினி-மட்டக்களப்பு.

**ஆணிவேர்?**

உன் விழியுள் ஊடுரும்
கலக்கத்தின் ஆணிவேர்
எங்கிருந்து தொடங்கிற்று
சின்னவனே-

யு.நிலாவாசன்-அக்கரைப்பற்று-08.

**வாழ்க்கைக்குள் போரா?**

வாழ்க்கைக்குள் போரா
போருக்குள் வாழ்வா
ஓய்வு கொடுத்து விடுங்கள்-நான்
ஓடி விளையாட வேண்டும்.

செல்வி.நில்கா-கல்முனைக்குடி.

**பகைத் தீ**

பகைத் தீ படர்ந்து விட்ட
நாட்டினிலே-உன்
பதாதைகளின் அர்த்தம்
அடிபட்டுப்போனது
ஆனாலும் நீ உயர்த்து
ஒரு பீனிக்ஸ் பறவையின் உறுதியுடன்

இ.கோகுலன்-திருநெல்வேலி.

**என் கன்னங்களில்...**

என் கன்னங்களில்
முத்தம் பதித்தவர்களை
சன்னங்களால் பறிக்க
யார் கொடுத்தார்கள் அதிகாரம்?

எ.ஃப் ஷானாஸ்-காலி.

# வாசக[ர்] சாலை

**என்றும் என்மனம் கவரும் தினமுரசே!**

நினைத்தால்கூட வரமுடியாமல் இருக்கும் எங்களுக்கு நினைத்தவுடன் ஓடிப்போய் வாங்குமளவுக்கு எமை தேடிவரும் முரசே!

வெளி தோற்றத்தில் எல்லோர் மனதையும் கவரும் உன்னுள்ளே அடக்கமாக ஆனால் அட்டகாசமாக வரும் அத்தனை ஆக்கங்களும் எல்லோர் மனதையும் கவர்ந்து முதல் வரிசையில் நிற்கும் ஒரே பத்திரிகை (முரசு) தினமுரசே இன்றுபோல் என்றும் எல்லோர் மனதையும் ஈர்த்து வைக்க என் வாழ்த்துக்கள் பல!

ஆ.யசோ-ஃபிரான்ஸ்(பரீஸ்)

❍❖❍

**ஆருயிர் முரசே!**

நீ ஸ்போட்ஸ் பற்றிய தகவல்களில் இன்னும் பல தகவல்களை தரவாழ்த்துகின்றேன். அத்துடன் உண்மைத் தொடர், எக்ஸ்ரே ரிப்போட் போன்றவற்றை நீ தொடர்ந்து தரவேண்டும். நீ ப்ளுபிலிம் டாக்டர் பிரகாஷ் போன்றவர்களின் காம உணர்வை தெரிவித்தாய் அதே போன்று இன்னும் இப்படியான பல தகவல்களை தர பணிந்து வேண்டுகிறேன்.

நிதிபன்-யாழ்ப்பாணம்.

**என்னுயிர் தினமுரசே!**

வாரம் தோறும் நீ சுமந்து வரும் ஒவ்வொரு அம்சங்களும் என்னை சிந்திக்க வைக்கின்றது. அதிலும் சிறுகதைகள், அரசியல் கட்டுரைகள், தொடர் கதைகள், சினிமா செய்திகள், தேன் கிண்ணம் ஏன் இப்போது உலகம் வாழ் தமிழ் மக்கள் பரபரப்புடன் வாசிக்கும் பெண் பித்தன் டாக்டர் பிரகாசின் உண்மையான தகவல்கள் மொத்தத்தில் முரசில் வரும் அனைத்து அம்சங்களும் என்னை கவர்ந்தது. வாழ்க தினமுரசு இன்னும் பல நூறாண்டுகள்.

கே.உதயச்சந்திரன்-அவிசாவளை.

❍❖❍

**என்றும் தித்திக்கும் முரசே!**

எமக்கு சந்தோஷம் தருவதென்றால் அது நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் தான். அனைத்து நெஞ்சங்களையும் குஷி படுத்தும் உன் சேவை வளர பல உள்ளங்கள் சார்பாக வாழ்த்துகிறேன்!

நஸ்லியா நௌசாட்-நிககொள்ள.



**என் அன்பு முரசே**

நீ முரசு 443ல் "உங்கள் பக்கத்தில்" வட்டகொடை சி.சிவகுமாரன் எழுதிய பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியை பற்றிய உண்மை சம்பவங்கள் முரசு 444லிலும் பிரசுரமாகியிந்தது. இது போன்ற வெளியுலகிற்கு வெளிவரா சம்பவங்களை மேன்மேலும் வெளியுலகிற்கு கொண்டுவர என்றும் வாழ்த்தும் வாசகன்.

ஹப்புத்தளை-பி.அசோக்.

❍❖❍

வாசகர் மனதை தொட்டு மலர்களின் இதழைத் தொட்டும் வாரமொரு இதழாய் வரும் தினமுரசே நீ சுமந்து வரும் அனைத்து விடயங்களும் இனிதிலும் இனிது. போராடும் நாடுகளின் சமாதானத்திற்கு உறுதுணையாய் நீ வழங்கிடும் சிந்தனை துளிகளும் மனிதனை மாற்றுமளவுக்கு நீ எல்லோர் மனதிலும் இடம்பிடித்துள்ளாய். இதுபோல் பல ஆண்டு பலர் மனதினை கொள்ளை கொண்டு நீடுழி வாழ்க.

எம்.அஜ்மீர்-சாய்ந்தமருது-08.

❍❖❍

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## விழிப்புணர்வை ஏற்படுத்திய இரு ஆக்கங்கள்

கடந்த இரு வாரங்களாக தினமுரசு "உங்கள்பக்கம்" பகுதியில் இடம் பெற்ற பண்டாரவளை மத்திய கல்லூரி பற்றி ஆக்கங்கள். உண்மையில் வரவேற்கத்தக்கன. இங்கு நடக்கும் அக்கிரமங்களை தட்டிகேட்க எவனும் இல்லையா என்ற ஏக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமைந்தது அவ்விரு ஆக்கங்களும். எழுதியவருக்கும் வெளியிட்ட தினமுரசுக்கும் பெறறோர்களாகிய நாம் கடமைப்பட்டுள்ளோம்.

எவ்வளவோ இன்னலுக்கு மத்தியில் நாங்கள் பிள்ளைகளை கல்வி கற்க அனுப்புகிறோம். ஆனால் பாடசாலையில் அவர்களைப் பற்றி அக்கறை இல்லாத அதிபர், ஆசிரியர்களை என்ன சொல்லியும் பிரயோசனம் இல்லை. இதற்காக கல்வி அமைச்சு வரை நடவடிக்கை எடுத்தாயிற்று. எங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. பலவிதத்தில் திறமையுள்ள மாணவர்கள் பலர் பாடசாலையை விட்டு வெளியேறிவிட்டனர். பலர் வெளியறேவும் இருக்கின்றனர்.

அவர்களின் திறமைகளை ஊக்குவிக்கும் பொருட்டு நடாத்தப்படும் மாணவர் மன்றம் இலக்கிய மன்றம், உயர்தர மாணவ ஒன்றிய வட்டங்கள், ஒன்றையேனும் முன்னின்று நடாத்த எவரும் இல்லை இங்கே.

ஒரு கல்லூரியின் செயற்பாடுகளை வைத்துதான் அக்கல்லூரி மதிப்பீடு செய்யப்படுகின்றது, என்பது உறுதியான உண்மை. ஆயினும் இதற்கான செயற்பாடுகளை முன்னின்று நடாத்த அதிபர் ஒருவித முயறசிகள்தானும் எடுக்காமல் இருப்பது விந்தையிலும் விந்தை. பின்னர் எப்படி கல்லூரிக்கு உதவி கிடைக்கும்? உயர்தர விஞ்ஞான பிரிவின் உயிரியல் பாடத்திற்கு ஆசிரியர் எவரும் இல்லை. அவருக்கு பதிலாக இன்னொரு ஆசிரியரை நியமிப்பதற்கு அதிபர் இதுவரை முயற்சி எடுக்கவில்லை என்பது வேதனை. அந்த பாடத்திற்கு.

பணம் கொடுத்து தனியார் வகுப்பிற்கு பிள்ளைகளை அனுப்பும் அளவிற்கு பல பெற்றோர்கள் முடியாத நிலையில் இருப்பது தான் உண்மை. ஏதோ பாடசாலைக்கு வந்தால் சரி. இருக்கையில் அமர்ந்துவிட்டு மாத சம்பளத்தை வாங்கிகொண்டு வீட்டுக்கு செல்லும் நிலமை உருவாகி உள்ளது. கல்வியை ஆதரிக்காத, வளர்ச்சியை ஊக்குவிக்காத எந்த சமுதாயமாவது முன்னேறுமா?

இப்படியாக ஒரு சமூகம் முன்னேறுவதற்கு ஆவன செய்யாத அக்கறை இல்லாதவர்கள் இருந்து என்ன, இல்லாவிட்டால் என்ன? பாடசாலை நேரத்தில் வகுப்பில் பாடம் எடுக்காது நகரத்தை சுற்றும் ஆசிரியர்கள், கையொப்பம் இடுவதற்கு வருகின்றவர்கள், இவர்களைப் பற்றி எந்த அக்கறையும் இல்லாத அதிபர், உடனடியாக இவர்களைப் போன்றவர்களை அற்புறப்படுத்துவதுதான் ஒரு நல்ல முடிவுக்கான தீர்வாகும்.


**(இந்தக் கடிதம் பல பெற்றோர்கள் சார்பாக அனுப்பப்பட்டிருந்தது)**

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772,கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# சுவிஸ், ஜேர்மனியில் வசிக்கும் இலங்கை தமிழர்களை ஏமாற்றும் குடிவரவு அதிகாரிகள்

## 35 ஆயிரம் ரூபாவுக்கு ஒருவழிப் பயண கடவுச்சீட்டு விநியோகம்




சுவிற்சர்லாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில் அண்மைக் காலத்தில் அகதி அந்தஸ்து (காட்) கிடைத்த சிலர் இலங்கை கடவுச் சீட்டை பெற விண்ணப்பித்த போது சகல நாடுகளுக்குமான கடவுச் சீட்டுக்கு பணம் அறவிட்டு விட்டு ஒரு வழிப் பயண கடவுச் சீட்டை மாத்திரம் வழங்கும் மோசடிகுறித்து பரவலான புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

சுவிஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளில் இலங்கையில் இருந்து சென்று சுமார் 5வருடங்களாக எந்த வித சட்ட அங்கீகாரமுமின்றி வசிக்கும் குடியேற்ற வாசிகளுக்கு அண்மைக்காலமாக அகதி அந்தஸ்துக்கான அனுமதிப் பத்திரம் அந்த நாட்டு அரசாங்கங்களினால் வழங்கப்பட்டு வருகிறது.

சுமார் 5000 இலங்கையர்கள் இவ்வாறான அனுமதியைப் பெறவுள்ளனர். இந்த அனுமதி அட்டையை பெறுவதற்காக இலங்கை கடவுச் சீட்டை சமர்ப்பிக்குமாறு சுவிஸ் குடிவரவு அமைச்சு கேட்டிருக்கிறது.

சட்டவிரோத குடியேற்றக் காரர்களாகவே ஐரோப்பாவுக்கு சென்றதனால் பலரிடம் இலங்கைக் கடவுச்சீட்டு இல்லை.

சுவிஸில் அகதி அந்தஸ்து பெறுவதற்காக வேண்டி தற்போது பலர் இலங்கை கடவுச் சீட்டைப் பெற முயற்சிக்கின்றனர்.

கடந்த இரண்டு வருடங்களாக கொழும்பு அதிகாரிகளினாலும் சுவிஸிலுள்ள இலங்கை தூதரக அதிகாரிகளினாலும் அங்குள்ள இலங்கைத் தமிழர்களுக்கு கடவுச் சீட்டு வழங்குவது இழுத்தடிக்கப் பட்டு வந்தது.

தற்போது இலங்கை கடவுச் சீட்டு வழங்க தூதரக அதிகாரிகள் ஆரம்பித்திருக்கிறார்கள்.

சகல நாடுகளுக்குமான கடவுச் சீட்டுக்கென 640 சுவிஸ் பிராங் (சுமார் 35000 ரூபாய்) அறவிடப் படுகின்றது.

ஆனால் இலங்கைக்கு திரும்பி வருவதற்கான ஒரு வழி கடவுச் சீட்டே வழங்கப் படுகின்றது. இந்த கடவுச் சீட்டை வைத்திருக்கும் ஒருவர் கொழும்பு வந்தால் கட்டுநாயக்காவுக்குள் பிரவேசித்ததும் அவரது கடவுச் சீட்டில் செல்லுபடி அற்றது என்ற முத்திரை குத்தப்படுகிறது. மீண்டும் புதிய கடவுச் சீட்டைப் பெறுமாறு சுங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சுவிஸிலுள்ள ஒருவர் கனடா செல்ல வேண்டுமாயின் அவர் தனது ஒரு வழிக் கடவுச் சீட்டு மூலம் கொழும்பு வந்து இங்கு சகல நாடுகளுக்குமான புதிய கடவுச் சீட்டொன்றைப் பெற்று மீண்டும் சுவிஸ் சென்று அங்குள்ள கனேடிய தூதரகமூடாகவே அவர் கனடா செல்ல முடியும்.

இந்த நிலையினால் அந்த நாடுகளில் உள்ள ஆயிரக் கணக்கான இலங்கைத் தமிழர்கள் பாதிப்புக்குள்ளாயிருக்கிறார்கள். அதிகாரிகளிடம் இது குறித்து விசாரித்தால் அலட்சியமான பதில் வழங்கப் படுவதாக பலர் கவலை தெரிவித்தனர்.

ஜெர்மனி சுவிஸ் ஆகிய நாடுகளில் உள்ள இலங்கைக்கான தூதரக அதிகாரிகளும் கொழும்பு குடிவரவு அதிகாரிகளும் கூட்டாகவே இந்த மோசடியில் ஈடுபடுவதாக நம்பப்படுகின்றது. ■

## பல்கலைக்கழகங்களில் பாரிய நிதி நெருக்கடி

பல்கலைக்கழகங்களில் அன்றாடத் தேவைகளுக்குக்கூட பணம் இல்லாதளவு பாரிய நிதி நெருக்கடி காணப்படுவதால் பல்கலைக் கழகங்கள் தொடர்ந்து செயல்படமுடியாதளவு இக்கட்டான சூழ்நிலை தோன்றியிருக்கிறது.

பல்கலைக்கழக ஊழியர்களுக்கான சம்பளப் பணம் தவிர்ந்த வேறெந்த கொடுப்பனவும் பல மாதங்களாக கிடைக்காத நிலையில் நிர்வாகத்தைக்கொண்டு நடத்துவதில் பலத்த சிரமம் எதிர்நோக்கப்படுவதாக தெரிவிக்கப் படுகின்றது.

பல்கலைக்கழகங்களுக்கு கல்வி மற்றும் கல்விசாரா உபகரணங்களை விநியோகம் செய்யும் நிறுவனங்களுக்கும் தனிநபர்களுக்குமான கொடுப்பனவுகள், கட்டட நிர்மாண கொடுப்பனவுகள் என்று பல கொடுப்பனவுகள் மாதக்கணக்கில் வழங்கப்படாததினால் அத்தகையவர்கள் பல்கலைக்கழகங்களுக்கான தமது சேவையை இடை நிறுத்தியுள்ளனர்.

திறைசேரியிலிருந்து பணம் கிடைத்ததும் இந்தக் கொடுப்பனவுகள் உடனடியாக வழங்கப்படும் என்று பல உபவேந்தர்களினால் கொந்தராத்துக் காரர்களுக்கு எழுத்துமூலம் உறுதியளிக்கப் பட்டிருக்கிறது.

திறைசேரியினால் பல்கலைக் கழகங்களுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை இன்னும் கிடைக்கவில்லையென பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## குருமண்வெளியிலிருந்து 11 பேர் புலிகளின் பயிற்சிக்காக!

மட்டக்களப்பு குருமண்வெளி என்ற இடத்திலிருந்து 11 தமிழ் இளைஞர்கள் புலிகள் இயக்கத்தினால் ஆயுதப் பயிற்சிக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள். கடந்த 29ம் திகதி குருமண்வெளியூரைச் சேர்ந்த ஒருவர் மகிழூர் என்ற இடத்தில் புலிகளின் கூட்டமொன்று நடைபெற இருப்பதாகக்கூறி இளைஞர்களை அங்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அங்கு நடைபெற்ற குறுகிய நேர போதனையின் பின்னர் அதில் கலந்துகொண்ட இளைஞர்களுள் 11 பேர் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் நோய்வாய்ப்பட்டிருந்த 3 இளைஞர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். இது குறித்து பொலிஸிலோ, ஐ.சி.ஆர்.சியிடமோ பெற்றோர் எவரும் முறைப்பாடு தெரிவிக்கவில்லை. சில பெற்றோர் தங்களது பிள்ளைகளை மீட்டுத் தருமாறு குருமண்வெளி அதிரடிப்படை முகாமுக்கு வந்து தெரிவித்ததாகவும் எனினும் முறைப் படியான புகார்களை எழுதிக் கொடுக்கவோ, ஐ.சி.ஆர்.சி. யிடம் தெரிவிக்கவோ அச்சப்படுவதாகவும் குருமண்வெளி முகாம் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை வாழைச்சேனையில் இருந்து பயிற்சிக்காக புலிகளால் அழைத்துச் செல்லப்பட்ட 2 இளைஞர்கள் அங்கிருந்து தப்பி வந்து சேருநுவர காவல் நிலையத்தில் கடந்த 31ம் திகதி இரவு சரணடைந்திருக்கிறார்கள். ■

## சட்ட விரோதப் பயணம்! நடுக்கடலில் அனர்த்தம்!

சட்டவிரோத குடியேற்ற வாசிகளை இத்தாலிக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் அனுப்பும் படகுகள் மூலம் கொண்டு செல்லும் நபர்கள் கடற்படையினரிடம் சிக்குவதை தவிர்ப்பதற்காக புதிய கடற்பாதைகளை கண்டறிந்து அவற்றினூடாக பயணத்தை மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு புதிய பாதையில் சென்ற படகொன்றே கடந்த 3ம் திகதி மாத்தறைக்கு அருகில் உள்ள தென்பகுதிக்கடலில் பாறையுடன் மோதி விபத்துக்குள்ளானது.

நீர்கொழும்பு சிலாபம் பகுதியிலிருந்து சுமார் 170 பயணிகளுடன் இத்தாலி நோக்கிச் சென்ற வள்ளம் தெவிநுவர என்ற இடத்தில் பாறை ஒன்றுடன் மோதியதில் கடலில் கவிழ்ந்தது. இந்த அனர்த்தத்தில் கொல்லப்பட்டவர்களில் 20க்கும் மேற்பட்டவரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

மேலும் 20க்கும் மேற்பட்ட சடலங்கள் கடலில் ஆங்காங்கு மிதப்பதை அவதானித்ததாக உள்ளூர் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமேல் மாகாண கரையோரங்களில் இருந்து வழமையாக இத்தாலிக்கு செல்லும் படகுகள் தென்பகுதி கடல் வழியை பயன்படுத்துவதில்லை. அண்மைக்காலமாக சட்டவிரோத குடியேற்றக் காரர்களை ஏற்றிச்சென்ற வள்ளங்கள் சில கடற்படையினரிடம் சிக்கியதையடுத்து இந்த புதிய வழி மூலம் பயணம் மேற்கொள்ள எத்தனிக்கப்பட்டிருக்கிறது.

தென்பகுதி கடலில் காணப்படும் பாறைகள் குறித்து போதிய அனுபவம் இல்லாதவர்கள் மேறபடி வள்ளத்தை செலுத்தியமையே விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என்று பொலிஸார் நம்புகின்றனர்.

இந்த அனர்த்தத்தில் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள், எத்தனை பேர் உயிர் தப்பினார்கள் என்ற விபரங்கள் எதனையும் உறுதியாக அறியமுடியாதுள்ளது. வள்ளத்தில் இருந்து குதித்து நீந்தி உயிர் தப்பியவர்கள் தலைமறைவாகியுள்ளனர். மீனவர்களால் மீட்கப்பட்ட சிலர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தப் பயணத்திற்காக நீர்கொழும்பைச் சேர்ந்த ஒரு வர்த்தகருக்கு 2 இலட்சம் ரூபாய் வழங்கியதாக உயிர் தப்பிய ஒருவர் கூறியிருக்கிறார். இது தொடர்பாக வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த 10 வர்த்தக பெரும்புள்ளிகளை பொலிஸார் தேடி வருகின்றனர். ●

## வரிவசூலிப்பை எதிர்த்து முஸ்லிம்கள் ஹர்த்தால்!

### தங்களுக்குத் தொடர்பில்லை என புலிகள் மறுப்பு

திருகோணமலை-கிண்ணியா, மற்றும் மூதூர் முஸ்லிம் பகுதிகளில் புலிகளால் மேற்கொள்ளப்படும் வரிவசூலிப்பையும் கப்பம் பணம் பெறுவதற்காக முஸ்லிம்கள் கடத்தப்படுவதையும் கண்டித்து கடந்த வியாழன் வெள்ளி ஆகிய தினங்களில் கடையடைப்பும் பூரண ஹர்த்தாலும் நடத்தப்பட்டது.

யுத்த நிறுத்தமும், மோதல் தவிர்ப்பும் கடைப்பிடிக்கப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழ்நிலையில் முஸ்லிம் பகுதிகளுக்குள் வரும் புலிகள் தாம் விரும்பியவர்களிடம் கப்பம் பெற்றுக் கொண்டு அல்லது கப்பப் பணம் பெற முடியாதவிடத்து ஆட்களைக் கடத்திக் கொண்டு செல்கின்றனர்.

சில நாட்களுக்கு முன்னர் மூதூர் கிண்ணியா பகுதிகளிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான கால்நடைகள் வாகனங்கள் என்பனவற்றையும் முஸ்லிம் பொதுமக்கள் சிலரையும் புலிகள் கடத்திச் சென்று கப்பம் பெற்றனர்.

சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலையிலும்கூட முஸ்லிம்கள் மீதான கெடுபிடிகளைப் புலிகள் அதிகரித்துள்ளனர். அதனாலேயே ஹர்த்தால், கடையடைப்புப் போராட்டத்தை நடாத்தி நாம் அனுபவிக்கும் தொல்லைகளை வெளி யுலகுக்கு எடுத்துக் காட்ட முன்வந்தோம் என்று மூதூர் கிண்ணியாப் பகுதி முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை முஸ்லிம் பகுதிகளில் புலிகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் உள்ளூரிலும் வெளிநாட்டிலும் வெளியானதை அடுத்து புலிகளின் கிழக்குத் தலைமை கடந்த மூன்றாம் திகதி அறிக்கையொன்றை வெளியிட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; கப்பம் பெறும் நடவடிக்கைக்கும் நமது இயக்கத்திற்கும் எந்தவித தொடர்புமில்லை. புதிய அரசும் தாமும் சமாதான முயற்சிகளில் ஈடுபடும் இவ்வேளையில் அதனைக் குழப்புவதற்கு முயலும் தீய சக்திகளே இவ்வாறான செயல்களில் தமது பெயரைப் பயன்படுத்தி ஈடுபடுகின்றன.

முஸ்லிம்களின் கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்து விட்டு பணம் கொடுக்காது செல்லுதல், கப்பம் பெறுதல், கொள்ளையடித்தல், நகைகளை அபகரித்தல், போன்ற சம்பவங்களைப் பற்றி எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான அனுமதியை நாம் எவருக்கும் வழங்கவில்லை. நாம் இதனைக் கண்டிப்பதோடு விழிப்பாய் இருக்குமாறும் 'தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்" என்றும் கூறப்பட்டுள்ளது. ■

## புலி உறுப்பினர் கிணற்றில் விழுந்து மரணம்!

புலிகளின் சிறப்புப் படையணியைச் சேர்ந்த ஒரு போராளி கிணற்றில் தவறுதலாக வீழ்ந்து பலியானதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

கிளிநொச்சியில் நடந்த இந்த சம்பவத்தில் இராமசாமி அம்பிகை பாலன் எனும் புலி உறுப்பினரே பலியானவராகும். அரசும் புலிகளும் கடைப்பிடித்து வரும் மோதலற்ற சூழ் நிலையில் அகால மரணமான முதலாவது புலி உறுப்பினர் இவராவார். ■

# முரசம்

**சுதந்திர தினத்தில் ஏன் எமது தேசிய வீரர்களை கௌரவிக்கவேண்டும்**

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

வழமை போலவே அரசாங்க தலைவர்களின் வசீகரமான வாழ்த்துச் செய்திகள் மரியாதை அணிவகுப்புகள், பீரங்கி வேட்டுக்கள் போன்ற ஆடம்பர ஏற்பாடுகளுடன் 54வது சுதந்திரத்தினத்தையும் கொண்டாடியாகிவிட்டது.

இப்படியொரு தினத்தை கொண்டாடுமளவு நாம் சுதந்திரமாகவும் சௌபாக்கியமாகவும் வாழ்கின்றோமா என்ற கேள்வி முதலில் எழுப்பப்படவேண்டும். இல்லையென்பதுதான் பதில்.

அப்படியாயின் எம்மை, இந்த நாட்டை இத்தகையதொரு நிலைக்கு இட்டுச் சென்றவர்கள் யார்? தேசிய வீரர்களென எமது முன்னைய ஆட்சியாளர்கள் சிலரைக் கௌரவித்து சிலைகளுக்கு மாலை சூட்டுகிறோமே அவர்கள் உண்மையில் அந்தப் பூமாலைகளுக்கு தகுதியானவர்கள்தானா?

எமக்கு சுதந்திரம் வேண்டித் தந்து கடந்த 54 வருடங்களாக எம்மை ஆட்சி செய்தவர்கள் ஒரு நாடென்ற வகையில் சமூக பொருளாதார ரீதியில் எங்களுக்கு ஈட்டித்தந்த வெற்றிகள் என்ன என்று சிந்திக்கும்போது மிகவும் கவலைக்குரிய பதிலொன்றே கண்முன் தோன்றுகின்றது.

சுதந்திரம் பெற்று அரைநூற்றாண்டுக்கு பின்னரும்கூட உலகின் மிகவும் வறிய நாடுகளின் பட்டியலில் நாம் முன்னிலையில் இருக்கிறோம். இன்றைக்கும்கூட இந்த நாட்டில் சுமார் 20 இலட்சம் குடும்பங்களின் மாதாந்த வருமானம் 1000 ரூபாவைவிட குறைவானது. இதேயளவு இளைஞர், யுவதிகள் தொழிலற்று இருக்கிறார்கள்.

சிறுவர் போஷாக்கின்மை ஆசியாவிலேயே இலங்கையில்தான் அதிகம்.

மனிதனின் அடிப்படை வாழ்வியல் வசதியான தண்ணீருக்கும் மின்சாரத்திற்கும் மக்கள் படும்பாடு சொல்லித் தெரியவேண்டியதில்லை. கல்வியும், சுகாதாரமும், போக்குவரத்தும் பெயரளவில் மட்டுமே சமூக நல திட்டங்களாக இருக்கின்றன.

எமது ஆட்சியாளர்கள் மூன்றாம் தர அரசியல்வாதிகளாக இல்லாமல் உண்மையான இராஜதந்திரிகளாக இருந்திருப்பார்களாயின் எமது பிரச்சனையில் பாதிக்குமேல் எப்போதோ தீர்ந்திருக்கும். அப்படியாயின் எம்மை இந்த நிலைக்கு இட்டுச்சென்ற தலைவர்களைத்தான் நாம் கடந்த திங்கட்கிழமை தேசிய தலைவர்களாக கொண்டாடி மகிழ்ந்தோமா?

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# 'தடை தாண்டும்' படலம்!

இனப்பிரச்சனை தீர்வு முயற்சியின் போது இலங்கை அரசியலில் இரண்டு பாரம்பரிய கருத்துருவங்கள் நிலவுகின்றன.

முதலாவது புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானத்தீர்வு காண்பதே பிரச்சனையைத் தீர்க்க இருக்கும் ஒரு வழி என்பது, மற்றையது யுத்தத்தைத் தவிர இனப்பிரச்சனைக்கு மாற்றுத்தீர்வு கிடையாது என்பது இந்த இரண்டு கருத்துக்களுக்காகவும் வாதிடுகின்றவர்கள் தங்களை நியாயப்படுத்த வாதங்களை முன்வைத்திருக்கிறார்கள்.

புலிகள் ஒரு பலம்வாய்ந்த இராணுவ அமைப்பு. அவர்களுடன் போரிட்டு அந்த இயக்கத்தை முற்றாக ஒழித்துக் கட்டுவது முடியாத காரியம். ஆதலினால் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதே பொருத்தமான வழியென ஒரு பிரிவினர் கூறுகின்றனர்.

புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு. அவர்களுடன் பேச்சு நடத்துவதில் பிரயோசனமில்லை. முழுப் பலத்தையும் ஒன்றுதிரட்டி யுத்தம்செய்வதே பிரச்சனைக்கான இறுதித்தீர்வு என்பதே இன்னொருதரப்பின் வாதம்.

தற்போது அரசாங்கம் இதில் முதலாவது கருத்தை கொண்டிருக்கிறது. அதனால் புலிகளுடன் பேச முயற்சி எடுத்து வருகிறது. அதே நேரம் இரண்டாவது கருத்தைக் கொண்டிருப்பவர்களின் அழுத்தம் அரச தரப்பை தீவிரமாக சிந்திக்கவும் வைத்திருக்கிறது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான பேச்சுவார்த்தை முன்னேற்றகரமாக போய்கொண்டு இருக்கிறதென்றே இரு தரப்பினராலும் வெளியிடப்படும் அறிக்கைகளில் கூறப்படுகின்றது. நோர்வேகுழு புலிகளையும் அரசாங்கத்தையும் பொது இணக்கப்பாடு ஒன்றின்பால் இட்டுச்செல்ல முயற்சிகளை மேற்கொண்டும் வருகின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் இரு தரப்பும் கைச்சாத்திடலாமென பரவலாக தெரிவிக்கப்பட்டு வருகின்றது. உண்மையில் எம்.ஓ.யூ. ஒன்று சம அந்தஸ்துடைய இரு அமைப்புக்களுடைக்கிடையில் கைச்சாத்திடப்படுவதே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச வழிமுறை.

ஜனநாயக ரீதியிலான அரசாங்கம் ஒன்றிற்கும் பயங்கரவாத அமைப்பு என பெயரிடப்பட்டிருக்கும் ஒரு இயக்கத்துக்குமிடையில் செய்துகொள்ளப்படும் உடன்படிக்கை புரிந்துணர்வு உடன்படிக்கையென அழைக்கப்படுவதில்லை.

இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு நோர்வே அரசாங்கம் யதார்த்தமானதொரு தீர்வை இரு தரப்பிற்கும் முன்வைத்திருக்கிறது. அதன்படி புலிகள் தமது பிரச்சனையை நோர்வேக்குத் தெரிவிப்பார்கள். அரசாங்கம் தனது பிரச்சனையை தனியாக நோர்வேயிடம் சமர்ப்பிக்கும். இவை இரண்டையும் ஆராயும் ஒஸ்லோ அதிகாரிகள் இரு தரப்பாலும் ஏற்கக்கூடிய பொதுவான உடன்பாட்டு ஆவணமொன்றை தயாரிப்பார்கள்.

இதில் எந்தவொரு தரப்பும் கைச்சாத்திடமாட்டாது என்று தெரியவருகிறது. நோர்வேயை சாட்சியாக வைத்து இந்த உடன்பாடு மீறப்படாமல் இரு தரப்பாலும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதே தற்போதைய ஏற்பாடு.

எவ்வாறெனினும் இது தொடர்பில் இறுதி உடன்பாட்டை எட்டமுடியாதவாறு புலித்தடை குறுக்கிட்டு நிற்கிறது. புலிகள் தம்மீதான தடை நீக்கப்படவேண்டுமென உறுதியாக இருக்கிறார்கள். அரசாங்கம் தற்காலிகமாக மாத்திரமே தடையை தளர்த்தலாம் என்ற அபிப்பிராயத்தை மட்டுமே வெளியிட்டு வருகிறது. இவற்றோடு ரோந்து நடவடிக்கைகள் இராணுவத்தை முகாம்களுக்கு முடக்கி வைத்தல் போன்ற சில விடயங்களும் இறுதி உடன்பாட்டை எட்டுவதில் தடையாக இருக்கின்றன. மேலும் போர் நிறுத்தத்தை புலிகள் முறித்துக்கொள்வதாயின் அதனை குறைந்த பட்சம் ஏழு நாட்களுக்கு முன்னராவது அறிவிக்கவேண்டுமென அரசாங்கம் நோர்வேயிடம் சமர்ப்பித்திருக்கும் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எவ்வாறெனினும்புலிகளுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துகொள்வதாயின் ஐரோப்பிய யூனியன் போன்ற மிகப் பலம் வாய்ந்த ஒரு மேல்நாட்டு அமைப்பின் உத்தரவாதமின்றி அத்தகையதொரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடக்கூடாதென அரசாங்க உயர் மட்டத்தில் கருத்து நிலவுகிறது.

புலிகள்மீதான தடை உள்நாட்டில் நீக்கப்பட்டால் அது தமது நாடுகள் அவ்வியக்கம் மீது விதித்திருக்கும் தடையை எந்தவிதத்திலும் பாதிக்காது என்று அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பல நாடுகள் உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளன.

புலிகளும் இந்த சமாதான சூழலில் தம்மீதான தடையை தளர்த்திக்கொள்வதற்கு அல்லது அதனை இயல்பாகவே செயலிழக்கச் செய்வதற்கு பெரும் முயற்சி எடுக்கின்றனர் என்பது தெளிவான உண்மை. இதற்கு சிறந்த உதாரணம் அன்ரன் பாலசிங்கத்தின் சுகயீனத்தைக் காரணம்காட்டி இந்தியா வில் பேச்சு நடத்தவேண்டுமென புலிகள் முன்வைத்த கோரிக்கையாகும்.



இந்தியா இதனை திட்டவட்டமாக மறுத்துவிட்டதென்பது வேறு விடயம். ஒரு வேளை இந்தியா இதற்கு சம்மதித்திருக்குமாயின் அந்த நாடு புலிகள்மீது விதித்திருக்கும் தடை ஒரு வேடிக்கைக்குரிய விடயமாக மாறியிருக்கும்.

புலிகள் இந்தியாவிலிருந்து கொண்டு இலங்கை அரசுடன் பேசினாலோ அல்லது பேச்சுக்குரிய வழிவகைகளை இந்தியா செய்து கொடுத்தாலோ புலித்தடை அர்த்தமற்றதாகிவிடும். இதனை தெரிந்துகொண்ட இந்திய அரசாங்கம் மறுத்து விட்டது.

அடுத்த விடயம் புலிகள்மீதான தடையை இலங்கை அரசாங்கம் நீக்கினால் அது வெளிநாடுகளில் அந்த இயக்கம்மீதான தடையை

**எம்.பி.எம். பர்ஸான்**

பாதிக்காது எனக் கூறப்படுவது.

இங்கே சட்டரீதியிலான பிரச்சனை எதுவும் இல்லை. உண்மையில் இலங்கை அரசாங்கம் புலிகளை தடைசெய்வதற்கு பல வருடங்களுக்கு முன்னரே இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் அந்த இயக்கத்தை தடை செய்துவிட்டன. ஆதலால் உள்நாட்டில் தடை போடுவதும் அதை நீக்குவதும் மற்றைய நாடுகளுக்கு ஒரு பிரச்சனையில்லைதான். ஆனால் இங்கே தார்மீக ரீதியிலான ஒரு சிக்கல் நிலை தோன்றுகிறது. புலிகள் இலங்கையில்தான் போராடுகிறார்கள். அவர்களை இலங்கை அரசாங்கமே தடைசெய்யாதபோது அமெரிக்காவில் ஏன் தடை என்று அந்த நாட்டிலுள்ள புலி ஆதரவாளருக்கு கேள்வி எழுப்பும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

இஸ்ரேல் உருவாக்கப்பட்ட பதிதில் அந்த நாட்டை அங்கீகரிக்க மறுத்துவந்த பலஸ்தீன தலைவர்கள் கடுமையான சர்வதேச அழுத்தங் காரணமாக அதனை அங்கீகரித்தார்கள்.

பலஸ்தீனர்களே இஸ்ரேலை அங்கீகரிக்கும்போது கொழும்பில் இஸ்ரேல் நலன் காக்கும் நிலையம் அமைவது பற்றி இலங்கை முஸ்லீம்களுக்கு என்ன பிரச்சனை வேண்டிக் கிடக்கிறது, என்று முன்னொரு சந்தர்ப்பத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. உள்நாட்டில் புலிகள்மீதான தடைநீக்கத்தையும் இதே கோணத்தில் பார்க்க முடியும்.


**புலிகள் இடக்குமுடக்கான கோரிக்கை களை முன்வைத்து அரசாங்கத்தை சங்கடத்தில் ஆழ்த்தி அதனை சாட்டாக வைத்து பேச்சுவார்த்தையை முறித்துக்கொள்ள முடியாதபடி அவர்களை சர்வதேச அழுத்தத்திற்குள் சிக்கவைக்க ரணில் காய் நகர்த்துகிறார்.**

**தமிழ் பிரதேசங்களில் பொது மக்கள் ஊடாக அரச எதிர்ப்பு கருத்துக்களை வலுப்பெறச் செய்து தம்மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியாதவாறு மக்கள் மூலமாக உருவாக்கப்படும் சர்வதேச அழுத்தத்திற்குள் அரசாங்கத்தை சிக்கவைக்க பிரபாகரன் காய்நகர்த்துகிறார்.**


உள்ளூரில் புலிகள்மீதான தடை எந்தவித இராணுவ நலன்சார்ந்ததுமல்ல அது முற்றிலும் அரசியல் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானமென்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். ஆனால் அந்த தடையை நீக்க அரசாங்கம் ஆழமாய்ச் சிந்திக்கிறது. தாங்கள் பேச்சுவார்த்தைக்கு வர சர்வதேச அழுத்தம் எந்த வகையிலும் காரணமல்ல என்று தமிழ்ச்செல்வன் கூறிவருகிறார். ஆனால் தமது இயக்கம்மீதான தடையை நீக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்துகிறார். இங்கேதான் இருதரப்பினரதும் முரண்பாடும் நிலவுகிறது. எப்படி இருந்தாலும் இந்த தடை விவகாரம் இரு தரப்புக்கும் புலிவாலைப் பிடித்த நிலைதான்.

## அதிகரிக்கும் பதற்றம்

தற்போது வடகிழக்குப் பிரதேசங்களில் பொதுமக்கள் போராட்டங்கள் பரவலாக நடைபெறுகின்றன. இது அந்தப் பகுதிகளில் ஓரளவு பதற்றமான சூழ்நிலையும் தோற்றுவித்திருக்கின்றது.

யாழ் குடாநாட்டில் மீனவர்கள் நடத்திய போராட்டம் சுதந்திர தினத்தைக்கூட கொண்டாட முடியாத அளவு தீவிரத் தன்மையைக் கொண்டிருந்தது. அவர்களது கோரிக்கை தமது மீன்பிடி கடல் எல்லையை விஸ்தரிக்க வேண்டும் என்பதுதான். இந்தக் கோரிக்கைக்குள் அரசாங்கத்துக்கெதிரான கோஷமே முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கிறது. பேச்சுவார்த்தை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் பேரணி ஒன்று அண்மையில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இடம் பெற்றது. இதுவும் அரச எதிர்ப்பு சாயலையே கொண்டிருந்தது.

புலிகள் இடக்குமுடக்கான கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்தை சங்கடத்தில் ஆழ்த்தி அதனை சாட்டாக வைத்து பேச்சுவார்த்தையை முறித்துக்கொள்ள முடியாதபடி அவர்களை சர்வதேச அழுத்தத்திற்குள் சிக்கவைக்க ரணில் காய் நகர்த்துகிறார்.

தமிழ் பிரதேசங்களில் பொதுமக்கள் ஊடாக அரச எதிர்ப்பு கருத்துக்களை வலுப்பெறச் செய்து தம்மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியாதவாறு மக்கள் மூலமாக உருவாக்கப்படும் சர்வதேச அழுத்தத்திற்குள் அரசாங்கத்தை சிக்கவைக்க பிரபாகரன் காய் நகர்த்துகிறார்.

இவ்விரு இராஜ தந்திர நகர்வுகளுக்கு மத்தியிலும் அகப்பட்டிருக்கும் சமாதானம் எதை சாதிக்குமென்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

அண்டை மண்டலத்திலிருந்து

# சாதாரணன் எழுதுவது....



திருமிகு கஜேந்திரகுமார் அவர்களுக்கு,

இண்டைக்கும் என் அடங்கமாட்டாத ஆச்சயத்துக்குரிய உங்கள் சாதனைக்கு மரியாதை செலுத்தவும் மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தவுமெனவே இந்தக் கடிதத்தை எழுத முடிவெடுத்தேன்.

என்னைப் பொறுத்தவரை இந்த இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பக்கட்டத்தில அதிர்ச்சியையும் வியப்பையும் ஒரேயடியாய்த் தந்த விசயங்கள் ரெண்டு.

ஒண்டு, ஆனானப்பட்ட அமெரிக்காவுக்குள்ள அந்த வர்த்தக நிலையக் கட்டிடங்களுக்கு இடையில பின்லேடன் நடத்தின பிளேன் பாய்ச்சல்...

அடுத்தது, ஆனானப்பட்ட எங்கட யாழ்ப்பாணச் சனத்துக்கு நீங்கள் குடுத்த அல்வா...

சனத்தைத் தெரியாது,சனத்தின்ர பிரச்சினை தெரியாது,சனம் பேசும் மொழியும் சரிவரத் தெரியாது, நேற்றுவரை யாழ்ப்பாணம் எந்தத் திக்கில் எண்டும் அறிய ஆர்வப்பட்டதில்லை... அது அப்பா பிறந்த ஊரும் இல்லை... அப்பாவின் அப்பா பிறந்த ஊர் அவ்வளவே.

இவ்வளவு தூர தூரங்களில் இருந்து ரிமோட் கொண்ட்ரோலில எம்பியா வந்த சாதனை லேசான விளையாட்டில்லை. இந்த நூற்றாண்டுக்கே நீங்கள்தான் முன்னுதாரணம்.

ஆப்கானிஸ்தான்தான் குகை ஒண்டுக்குள்ள இருந்து அமெரிக்க மக்களுக்குப் பின்லேடன் குடுத்த பேதிக்கு எப்பனும் குறைஞ்சதில்லை, நீங்கள் எட்ட இருந்து காட்டிய விளையாட்டும்.

அந்த அழிவுகளோட ஒப்பிடுறதாய் நினைக்கக் கூடாது. அந்த இரு வித்தையையும் கண்டுதான் நான் வியக்கிறன்.

மக்கள் ஆர்? மண் எது? மண்ணின் வரலாறு எது? மக்களின் வாழ்நிலை என்ன? அந்த மக்கள் வாழ்ந்துவரும் முறை என்ன? தேவை என்ன? எதுவும் தெரியாமலே கம்பஸ் பொடியள் சிலற்றை உற்சாகம் இருந்தால் கதிரை ஒண்டை எடுக்கிறது வலு சிம்பிள் எண்டு இனி வரப்போற ஆக்களுக்கும் காட்டித் தந்த முதல் மனிதர் நீங்கள்தான்!

குமாரண்ணை...அதுதான் உங்கட அப்பா...எவ்வளவு ஆடிப்பார்த்தவர். எம்.பி.சீற் ஒண்டுக்காக எத்தினை காலம் ஏங்கியிருந்தவர்...

எழுவத்தேழாமாண்டு எலக்சனில, இவையெல்லாம் ஏதோ தமிழீழம்தான் தீர்வெண்டு மேடைமேடையாய்த் தாடி வைச்ச வண்ணை. காசி ஆக்களை ஏத்திப் பேசிக் கொண்டிருக்க தானும் தன்ர மேடையளில எல்லாம் 'ஹைப்பார்ட் மணிய'த்தைக் கூட ஏத்தி 'இந்தா இவரும்தான் தாடி வைச்சிருக்கிறார். அந்தக் கள்ளருக்குப் போடுறதெண்டால் இவருக்கும் போடுங்கோ' எண்டு போராட்டத்தின் ஆரம்பக்கட்டத்தையே கொச்சைப் படுத்திப் பேசினதால... எண்டைக்கும் இவர் எம்.பி. ஆகேலாதெண்டு ஒதுக்கி வைச்சிட்டுது சனம். தானாய் விளங்கி வாக்களிச்ச சமூகம் கடைசிவரை குமாரண்ணைக்கு அந்த வாய்ப்பைக் குடுக்கேலை.

ஒரு டசின் பென்ஸ் காரும், உலகமெல்லாம் தோட்டந் துரவுகளும் இருந்தென்ன? பாளிமெண்டில போய்க் குந்த ஒரு சீற் தராத கோவத்தில என்னென்னவெல்லாம் திட்டித் தீர்த்தது மனுசன்.

கூட்டணிக்காரர் பொடியளுக்கு சப்போர்ட்டாய்ப் பேசுகினம் எண்ட கோவத்தில போராடுற பொடியளையும் எடுத்தெறிஞ்சு எள்ளி நகையாடினவர். கடைசிக் காலத்திலதான் விளங்கிக் கொண்டவர். பொடியளுக்கும் கூட்டணிக்கும் நடுவில இருக்கிற ஒரு இடைவெளியில தான் புகுந்து கொள்ள இடமிருக்கெண்டதைக் 'கப்'பெண்டு பிடிச்சார்.

கொழும்பு ஆட்சிக்காரர்களிடத்தில் அவருக்கும், அவரது கணக்கில்லாப் பெருஞ் செல்வத்துக்குமிருந்த குடும்ப நட்பால், சிங்கத்தின் குகைக்குள்ளிருந்தே உறுமும் வேங்கையென 'சீற்'றுக்கு வேண்டிய செகசால வித்தையைக் கடைசி நேரத்தில கண்டறிந்தார்.

கொழும்பில் அரச உயர் மட்டமெல்லாம் அவருடைய சினேகிதங்கள். சிறிமாவுக்குக்கூட அவர் பெறாத மகன் எண்டு செல்லம்.

"எனக்கு ரெண்டு மகன்மார், ஒருவர் சுதுபுத்தா (வெள்ளை மகன்) மற்றவர் களுபுத்தா (கறுப்பு மகன்) என்று கொஞ்சும் அளவு சிறிமாவுக்கு அவர் அன்புச் செல்வம்!

குமாரண்ணை கெம்பினார் தமிழ் உள்ளமெல்லாம் புல்லரிக்க!

அவர் கொன்னைத் தமிழ் நாவில் வீரம் புகுந்து விளையாடியது.

நாளும் பொழுதும் அவர் பேப்பரிலும் ரீவியிலும் வீரக்கதை விடுவார். நல்லது கெட்டது அறியாமல் நாமிருந்த வாழ்வுகெட்டு, நாயிற் கடையோமாய் ஆனது ஏன் எண்டு புரியாமல் நொந்து நூலாகிப் போயிருந்த வேளையிலே.

ஒரு தமிழனாகிலும் உருவாடிக் காட்டுறான் எண்டு ஒரே புளுகம் எங்களுக்கு.

விதியை நொந்து வீழ்ந்துகிடக்கும் வேளையிலும் கொழும்பில குமாரின் நடப்புகளால் நமக்கே வந்த நடப்பாய் குஷிப்பட்டுக் கிடந்தம்.

உதாரணத்துக்கு-

செக் பொயின்றுகளெல்லாம் ஐடெண்டி கார்ட் காட்டி, அவர்கள் ஹமிச்சம் தவிர்த்துக் கழரும் ஒரு கள்ளன் பொலிஸ் ஆட்டக் கந்தாயம் நமக்கு.

இந்த உளைச்சலுக்கு எப்ப விடிவெண்டு நாங்கள் ஏங்கிக் கிடக்க,

குமாரண்ணை ஒரு செக்பொயின்டில் ஐடெண்டி கார்ட் காட்ட மாட்டேன் எண்டு அடம்பிடிச்சு நிக்க, பாதுகாப்புத் தளபதியோ ஜனாதிபதியோ போனடிச்சு அவரை விடச்சொல்ல, "இல்லை என்னை 'அரெஸ்ற்' பண்ணு" எண்டு அவர் நாண்டுகொண்டு நிக்க, இதென்னடா வம்பு எண்டு பாதுகாப்பு அதிகாரியளே வந்து குமாரண்ணையைக் கெஞ்சிக் கூத்தாடி வீட்டுக்குக் கூட்டிப்போக...

இதை அடுத்தநாள் செய்தியில அறியும் எங்களுக்கு என்ன ஒரு சிலுசிலுப்பு!

(தொடர்ச்சி 8ம் பகத்தில்)

# செக்ஸ் டாக்டரும் தமிழ் பத்திரிகைகளின் வக்கிரங்களும்

முதலில் ஒரு பெரும் ஓட்டல் முதலாளி ராஜகோபால், பெண்கள் விஷயத்தில் ரொம்ப வீக்கான மனிதர். தனது நிறுவனத்தில் பணி புரிந்த ஒரு பெண்ணை தன்னையே திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தி, தோல்வியடைந்து, பின்னர் அந்தப் பெண்ணின் கணவரைக் கொன்று விட்டார் என்று குற்றச்சாட்டு எழுந்தது.

அடுத்து இணைய தளத்தில் செக்ஸ் வீடியோ படங்களை விநியோகித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சென்னையைச் சேர்ந்த டாக்டர் பிரகாஷ் விவகாரம். தமிழ் வார, மாத இதழ்களுக்கு ஏகக் கொண்டாட்டம்.

வராத செய்திகளை, பின்னணிகளை எளிய நடையில் எழுதி, பல்வேறு மோசடிகளை அம்பலப்படுத்தி, தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்திருக்கின்றது அந்தப் பத்திரிகை.

வார இதழாக வந்து இப்போது வாரமிரு முறையாக வெளியாகும் அப்பத்திரிகைதான், பெண்கள் பலாத்காரம் செய்யப்படுவது போன்ற செய்திகளை நிரம்ப விவரங்களுடன், வர்ணனைகளுடன் வெளியிடும். கூடவே கவர்ச்சிகர படங்களும் புகைப்படங்களும். அத்தகைய கட்டுரைகளை படிக்கும்போது, பலாத்காரத்தில் இருக்கும் கொடுமை மறைந்து போய், பாலியல் உணர்வுகளே மேலோங்கியிருக்கும்.




விதவிதமாக எழுதி, புகைப்படங்களைப் பிரசுரித்து தங்கள் விற்பனையைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றன அவை.

எதை வேண்டுமானாலும் எழுதலாம், யாரைப்பற்றி வேண்டுமானாலும் எழுதலாம், எத்தகைய புகைப்படங்களை வேண்டுமானாலும் பிரசுரிக்கலாம் என்றதொரு நிலைமை இன்று. கேட்டால் போலீசார் வழக்கு பதிவு செய்து விட்டார்கள், அதைப் பற்றிய பின்னணி தகவல்களைத் தருவது எங்கள் கடமை என்கிறார்கள்.

விலாவரியாக சம்பந்தப்பட்டவர்களைப் பற்றி எழுதுவதனால் அவர்களுடைய வாழ்க்கையே பாதிக்கப்படக்கூடும் என்று அவர்கள் நினைப்பதேயில்லை.

பொதுவாக ஆங்கிலப்பத்திரிகைகள் தாம் அரை நிர்வாணப் படங்களையோ அல்லது செக்ஸ் சம்பந்தப்பட்ட விஷயங்களையோ பிரசுரிக்கத் தயங்குவதில்லை. தமிழ் இதழ்கள் சற்று பழமைவாதத்தில் ஊறியவை. குடும்ப பத்திரிகைகளாகக் காட்டிக்கொள்ளுபவை. விரசமான விஷயங்களை ஒதுக்கிவைப்பவை என்ற பொதுவானதொரு கருத்து உண்டு. இப்போது எல்லாமே தலைகீழ். கவர்ச்சிப்படங்கள் வெளியிட்டு வந்த ப்ளிட்ஸ், இல்லஸ்ட்ரேடட் வீக்லி போன்றவை இப்போது நின்றுவிட்டன. இன்டியா டுடே, அவுட்லுக் போன்றவை முழுக்க முழுக்க அரசியல் செய்திகளைத் தாங்கி வருகின்றன. நாளேடுகள் எப்போதாவது ஒரு முறை ஓரிரு கவர்ச்சிப்படத்தை வெளியிடுகின்றன. மற்றபடி பத்திரிகைகளில் செக்ஸைத் தேடுவோருக்கு தமிழ் இதழ்தான் நல்ல தீனி போடுகின்றன.

முதலில் குமுதம் வார இதழ்தான் இளைஞர்களைக்கு வருவதற்காக விதவிதமாக பெண்களின் கவர்ச்சிப்படங்களை பயன்படுத்தத் துவங்கியது. இன்றும் சற்று தாராளமாகவே செக்ஸ் சம்பந்தப்பட்ட விஷயங்கள் அவ்விதழில் பிரசுரமாகின்றன. மற்றபடி கல்கி, ஆனந்த விகடன் போன்றவை அந்தப்பக்கம் போவதில்லை.

அதிகப் பணம் செலவழித்து இன்டர்நெட்டில் செக்ஸை அனுபவிக்க முடியாதவர்களுக்கு கைகொடுப்பது புதிதாகத் தோன்றியிருக்கும் செய்திப்பத்திரிகைகள்தாம். செய்தியில் எங்கே வந்தது செக்ஸ் என்று கேட்கக்கூடாது. கொடுமையே அதுதான். செய்திகளை பரபரப்பாக வெளிவிடுவதாக சொல்லிக்கொண்டு, ஆபாசப் படங்களையும் செய்திகளையும் அள்ளிவிடுகிறார்கள்

இந்தப்போக்கிற்கு முதலில் பிள்ளையார் சுழிபோட்டதே ஜீனியர் விகடன்தான். பாரம்பரியம் மிக்க குடும்பப் பத்திரிகை என்று விளம்பரப்படுத்திக்கொள்ளும் ஆனந்த விகடன் நிறுவனத்தினர்தான் ஜூனியர் விகடனையும் வெளியிடுகின்றனர். தமிழ்நாளேடுகளில் வெளி

ஜூனியர் விகடனின் வெற்றியைக் கண்டு பிரமித்துப்போய், மற்றவர்களும் அதே பாணியில் பத்திரிகைகளை கொண்டுவரத் தொடங்கினர். அப்படி வந்தவற்றில் பல முடங்கிப் போயின. மிஞ்சி நிற்பவை நக்கீரனும் நெற்றிக்கண்ணும் தான்.

குமுதத்தில் வரும் கவர்ச்சிப்படங்களும் ஏ ஜோக்குக்களும் போதாதென்று அந்த நிறுவனமும் புலனாய்வுப் பத்திரிகை ஒன்றை தொடங்கியிருக்கிறது. மற்றவற்றைவிட ஒரு படி மேலே போய் செக்ஸை பிரதானப்படுத்துகிறது குமுதம் ரிப்போர்ட்டர் என்ற அப்பத்திரிகை. இருந்தாலும் தன்னைத் தமிழினக் காவலனாகவும், விடுதலைப்புலிகளின் அபிமானியாகவும், பிராமணர்களால் நடாத்தப்படும் ஜூனியர் விகடனைவிட, தங்களுடையதுதான் வெகுஜனப் பிரதிநிதி என்றும், ஜெயலலிதாவின் பரம வைரி என்றும் காட்டிக்கொள்ளும் நக்கீரன் தான் இன்று ஜூ.விக்கு பெரும் சவாலாக விளங்குகிறது. இந்த வியாபாரப் போட்டி ஒரு புறம் இருக்கட்டும். இவையெல்லாமே ஒரு விஷயத்தில் தெளிவாக இருக்கின்றன. சமூக நீதிபற்றி வாய் கிழிய பேசினாலும், செக்ஸைப் பயன்படுத்தி, காசு பார்ப்பதில் தவறில்லை என்று அவை அனைத்தும் நினைக்கின்றன.

பொதுவாக சினிமா செய்திகள், அல்லது பெண்கள் மீதான வன்முறை போன்றவையே பாலியல் உணர்வுகளைத் தூண்ட உதவுபவை. இப்போது சரவணபவன் ராஜகோபால் மற்றும் டாக்டர் பிரகாஷ் விவகாரங்கள் இப்பத்திரிகைகளுக்கு பெரிய வரப்பிரசாதமாக அமைந்துவிட்டன.

## கானகன்

கடந்த வாரம் பிரகாஷின் தயாரிப்புக்கள் சில அப்படியே நெற்றிக்கண்பத்திரிகையில் வெளியாயின. ப்ளூ பிலிம்தான். பெண்கள் அமைப்பொன்று உயர் நீதிமன்றத்தில் முறையிட, அந்தக் குறிப்பிட்ட வாரத்து பிரதிகளெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன. அது அசரவில்லை. அடுத்த வாரமும் அதே போன்ற படங்களை வெளியிட்டது.

பிரகாஷின் தயாரிப்புக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்திக்கும் போலீசாரே தங்களுக்கு வேண்டிய நிருபர்களுக்கு அவற்றைக் கொடுத்து உதவுகிறார்கள். எல்லோருக்கும் நல்ல வருமானம் போலிருக்கிறது.

பிறிதொரு பெண்கள் அமைப்பு இப்படி தரக்குறைவாக செய்திகளையும் படங்களையும் வெளியிடும் பத்திரிகைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தி, அவற்றை பகிரங்கமாக எரிக்கவும் செய்தனர்.

(தொடர்ச்சியை 17ம் பக்கத்தில் பார்க்கவும்)

# மலையக மாணவர்களுக்கு ஏன் இந்த நிலை...?

## 'அறிக்கை அரசியலால்' மட்டும் பயன் கிடைக்காது!

சமீப காலமாக மலையக பாடசாலைகளில் அதிகளவான ஒழுங்கீனங்கள் மற்றும் நிதி மோசடிகள் நடந்து வருவதும் அவை சம்பந்தமான செய்திகள் பத்திரிகைகளில் வெளிவருவதும் உடனடியாக அதனை மறுத்து சம்பந்தப்பட்ட பாடசாலையைச் சேர்ந்தவர்கள் அறிக்கைகள் விடுவதும் அதிகரித்து வருகின்றது.

நெருப்பில்லாமல் புகையாது என்பார்கள். சில சம்பவங்கள் விடயங்கள் சரியான சாட்சிகள் இல்லாமையினால் உண்மையானவையாக இருந்தும் அவை அடிபட்டுப் போய் விடுகின்றன. இன்று மலையகத்தில் பிரபலமாக இருக்கும் பல கல்லூரிகளில் தோட்டப்புற மாணவர்களுக்கு இடம் கொடுக்கப்படுவதில்லை. தோட்டப்புற பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரம் வரை கற்று திறமை சித்தியடைந்திருந்தாலும் அவர்கள் மிக சுலபமாக இந்த கல்லூரிகளில் நுழைய முடியாது. அப்படியே நுழைவதாக இருந்தாலும் அவர்களால் அதிகளவு பணம் செலவழிக்க முடிவதில்லை. வசதிக்கட்டணம் ஒரு புறமிருக்க கட்டட நிதி, அபிவிருத்தி சபை கட்டணம் அப்படி இப்படியென்று பெரிய தொகை வந்துவிடும். இவற்றிற்கெல்லாம் ரசீதுகள் கொடுக்கப்படுவதும் உண்மைதான். ஆனால் இந்த நிதி முறையாக பயன்படுத்தப்படுவதில்லை. இப்பணத்தில் பெருமளவு மோசடி, ஊழல் நடப்பதுதான் உண்மை. செலவழிக்கப்படும் பணத்திற்கு சரியான முறையான கணக்குகள் கிடையாது. நிர்வாக சபையின் அனுமதியின்றி அதிகளவு நிதி கையாளப்படுகின்றது. இவற்றிற்கெல்லாம் மேலாக இத்தகைய கல்லூரியின் அதிபர்கள் சிலர் அரசியல்வாதிகளின் முழு ஆதரவுடன் செயல்படுவதால் இவர்கள் யாருக்கும் பயப்படுவதில்லை. கல்விக்கூடங்களில் அரசியல் தலையீடுகள் அதிகரிப்பதனால்தான் அவற்றின் கல்வித்தரம் வெகுவாக பாதிப்படைகின்றது. ஊழல்கள் மோசடிகள், மற்றும் அடாவடித்தனங்கள் அதிகரிக்கின்றன. கல்வி கற்கவரும் மாணவர்களின் ஒழுக்கமும் இதனால் பாதிக்கப்படுகின்றது. மலையக மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் முதலில் இப்படியான குறைகள் யாவும் களையப்பட வேண்டும்.

மலையக மக்கள் கல்வியில் மேம்பாடடைய வேண்டுமென்பதற்காக அரசாங்கம் செலவழிக்கும் பணம் உரிய முறையில் பயன்படுத்தப்படுவதில்லை. அவை இடைத்தரகர்கள் மற்றும் சில அரசியல் வியாபாரிகள் கைகளுக்கு போய் விடுகின்றன. சில கல்வித் திணைக்களங்களில்கூட இப்படியான நிதி மோசடிகள் நடந்து வருவதை பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிகின்றது. எனவே-மலையகக் கல்வியில் அக்கறையுள்ளவர்கள் அனைவரும் இனி வரும் காலங்களிலாவது இப்படியான தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வெறும் அறிக்கைகளை மட்டும் வெளியிட்டு நேரத்தினை வீணாக்காமல் சம்பந்தப்பட்டவர்கள் நேர்மையுடன் நடந்துகொள்ள வேண்டுமென மலையக மாணவர்களின் பெயரால் கேட்டுக்கொள்கிறோம்.

பாலா.சங்குப்பிள்ளை–அட்டன்.

# இப்படித்தான் மின்சாரம் தரப்போகிறார்களா?

தற்போது அமுலில் இருக்கும் மின்சார நெடிக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க அரசாங்கம் தன்னாலான அத்தனையையும் செய்து பார்க்கிறது.

பொதுவாக இந்தப் பிரச்சனையைத் தீர்க்கவென எடுக்கப்படும் நடவடிக்கையெனும்போது என்ன நினைப்பீர்கள்? வெளிநாட்டிலிருந்து மின் பிறப்பாக்கிகளை கொள்வனவு செய்வது நீண்டகால மின் உற்பத்தித் திட்டங்களை அமுலாக்குவது எண்டுதான் நாம் நினைப்போம். ஆனால் இவற்றை விட வித்தியாசமான வழிமுறையை அரசாங்கம் கையாண்டு பார்க்கிறது.

இந்த மிலேனியம் யுகத்தில் ஒரு நாட்டை ஆட்சிசெய்யும் அமைச்சர்கள், தலைவர்கள் இப்படியெல்லாம்கூட நடந்துகொள்வார்களா என்று நினைக்கும்போது அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை.

மந்திர தந்திரங்கள் செய்து மழையைவரவழைத்து இந்த நாட்டின் மின் நெருக்கடியை தீர்க்க முடியும் என்று இந்த துறையோடு சம்பந் தப்பட்ட முக்கிய அமைச்சர் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறார். இதன் பயனாக காரியத்தில் இறங்கிய அமைச்சர் மழையை வரவழைத்து மின் உற்பத்தி நிலையங்களில் தண்ணீரை சேகரிக்க கதிர்காமப் பகுதி தேவாலயமொன்றின் பூசகரின் உதவியை நாடியிருக்கிறார்.

கதிர்காமம் வெடிகிட்டி கந்த என்ற இடத்தில் இதற்கான பூஜை கடந்தமாதம் 1ம் திகதி முதல் 3ம் திகதிவரை நடைபெற்றிருக்கிறது.

இந்த பூஜை முடிவடைந்து ஓரிரு நாட்களில் சில இடங்களில் கடுமையான மழை பெய்தது. (இது வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கத்தினால் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.) ஆனால் நீர் மின் உற்பத்தி நிலையங்களில் சிறிதளவும் மழை கிடைக்கவில்லை. இதனை அடுத்து அமைச்சரின் உத்தரவின் பெயரில் குறிப்பிட்ட பௌத்த மதகுருவுக்கு சொகுசு வாகனங்கள் வழங்கப் பட்டு அவர் நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரது பயணத்திற்கான சகல செலவுகளும் இலங்கை மின்சார சபையினாலேயே ஏற்கப்பட்டது.

இந்த மத குரு கடந்த 4ம் திகதி முதல் தொடர்ச்சியாக இரு வார காலம் விக்டோரியா கொத்மல, லக்ஷபான, சமநலவெவ என்று பல நீரேந்துப் பகுதிகளுக்கும் சென்று தனது மந்திரத்தை ஜெபித்திருக்கிறார். இவற்றுக்கான முழு செலவும் மின்சார சபையினுடையது.

இத்தனைக்கும் இந்த மதகுரு சிறுமியொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் அவர் மீது தொடுக்கப்பட்ட வழக்கு இன்னமும் விசாரணையில் இருக்கிறது.

நாட்டில் நிலவும் மின்சார நெருக்கடியை தீர்ப்போம் என்று ஐ.தே.க தலைவர்கள் உறுதியாகக் கூறினார்கள். அமைச்சர் கரு ஜெயசூரியா 6 மாதத்திற்குள் மின்சாரம் தருவதாக வாக்களித்திருக்கிறார். இந்த மதகுருவின் வாக் குறுதி மந்திரத்தை நம்பித் தான் தரப்பட்டதா?


## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ட ீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் முழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா."

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?
வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?
இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya. 052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



## சிங்கையில் இலங்கையர்களுக்கான மங்களகரமான திருமண சேவைகள்

அகில உலகில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமணசேவை சிறந்த முறையிலும் சமய முறைப்படியிலும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மேலும் எங்கள் சேவைகளில் பதிவு திருமணம் தங்கும் இடவசதி போக்குவரத்து வசதியுடன் குறித்தநேரத்தில் சிறந்த முறையிலும் நிறைவான சேவைக்கு நீங்கள் விரும்புவதை பெறுவதற்கும் நாணயம், நேர்மை, செயல் திறன் மிகுந்த துரித சேவைகளுக்கும் எங்களை அழைக்கவும்.
அரசாங்க அனுமதிபெற்ற எங்கள் சிங்கப்பூர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

S.மோகனதாஸ்–R.பரமசிவம்
LAVENDER WEDDING SERVICE
BLK-808 FRENCH ROAD
#01-159 SINGAPORE 200 808
TELEPHONE NO: (HP) 65-92714294
T.P &FAX 65-2946580
65-3720592
E-MAIL VS BOY @ HOT MAIL.COM.

எமது வாடிக்கையாளர்களுக்கான ஒரு சேவைகளை பூர்த்தி செய்கின்றோம். உலகில் அனைத்து பாகங்களில் இருந்து சிங்கைக்கு வருவதற்கான விமானபயண சீட்டுகளை பெற்று தருகின்றோம் கீழ்காணும் எங்கள் நிறுவனத்தை தொடர்பு கொள்ளவும்.

இலங்கை தொடர்புக்கு:
A.ரமேஸ்
(T.P) 01-259344

லண்டன் தொடர்புக்கு
திரு.சுரேஸ்குமார்
(HP) 44-77-63343591

கனடா தொடர்புக்கு:
திரு மோகன ராஜ்
(HP) 1416-8586413 (5.P.M)
1416-2867936

பிரான்ஸ் தொடர்புக்கு:
திரு ரவி
(HP) 33 623589520
331 536204787



சுவிஸ் பேர்ண் மாநகரில்.

## Suji Jewellery Works

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

K. Thurai
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.
T.P. 0041-31-8191837

உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.



## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப்பதிவு செய்து திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவர் அவர்கள் வசதிகேற்ப செய்து தரப்படும். இலவச விமானநிலைய வாகன வசதி, இலவச காலை உணவு, சலுகை கட்டணத்தில் வாடகை கார்.

மேலதிக விபரத்திற்கு:-

LINGAM WEDDING SERVICE
10, Anson Road # 15-14 International Plaza, Singapore. 079903
Tel: Appu, கை தொலைபேசி எண்:
அப்பு, 00,65 97514941 Tel. Fax:- 0065 2857494.
E.mail: Sakun @Singnet Com.Sg



## C.D.C. CRASH COURSE

STEWARDS/ COOKS FOR SHIPS

HOTEL SCHOOL

- Food & Beverage Service
- Front Office
- House Keeping
- Montessori Teacher Training
- Hotel Maintenance
- Cookery
- Dress Designing
- Spoken English

JULISTON
FACULTY FOR LEISURE HOSPITAITY MANAGEMENT

7, Sri Gunaratne Mawatha, Panadura. Tel : 074-281556



## ஆரோக்கிய வாழ்வுக்கோர் ஆயுர்வேத இயற்கை மருத்துவம்

சுவிஸ் நாட்டின் இயற்கை வைத்தியர் சங்கம் (NVS), மாற்றீட்டு மருத்துவர்கள் சங்கம் (EMR) ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்று பின்வரும் வைத்திய முறைகள் கீழுள்ள முகவரியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ★ ஆயுர்வேத மருத்துவ ஆலோசனைகள்
- ★ ஆயுர்வேத 'தெரப்பி' முறைகள்
- ★ ஏழுநிலை மசாஜ் (முதுகு வலி)
- ★ ஒற்றைத்தலைவலி மசாஜ்
- ★ பிராணசக்தி மூலம் சிகிச்சை
- ★ கிசு உப்பு மருத்துவம்
- ★ அதிர்வு முறையிலான சீன மருத்துவம் (அலர்ஜி)

அனேகமான மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள் இவற்றுக்கான செலவினை ஏற்றுக்கொள்கின்றன. (பெண்களுக்கான தனி மருத்துவ பிரிவும் உண்டு)

தொடர்புகளுக்கு:- Dr.இளங்கோ ஏரம்பமூர்த்தி ( ஆயுர்வேத இயற்கை வைத்தியர்)
Dip.in Ayurvedischer Medizin, A.Mitglied NVS, Praxis Ayurveda Siddha, Bellevuestr.12
3095 Spiegel b.Bern, Switzerland

Tel.031 9742021 Nat.0764112021
Fax. 031 9742024


## தினமுரசு சந்தா விபரம்

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 2600 | ரூ.1350 | ரூ.700 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3100 | ரூ.1550 | ரூ.800 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2075 | ரூ.1050 | ரூ.600 |
| உள்ளூர் | ரூ. 740 | ரூ.375 | ரூ.200 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

அலசுவது-இராஜதந்திரி

# இராணுவத்தில் புலிகள்

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட மகாநாடொன்றில் உரையாற்றியிருந்தார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்த அம்மகா நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் இராணுவத்தில் இணைத்துக்கொள்வதற்குத் தாம் விரும்புவதாக தளபதி லயனல் பலகல்ல கூறியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவத்தில் இணைத்துக்கொள்ளும் எண்ணம் இராணுவத் தளபதி பலகல்லவுக்கு இருக்கலாம். ஆனால் இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழர்கள் இராணுவசேவைக்கோ அல்லது பொலிஸ் சேவைக்கோ எவ்வகையிலும் புத்தம் புதியவர்களல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ்ஷாரது ஆட்சிக் காலத்தில் தமிழரான ஜெனரல் அன்டன் முத்துக்குமார் இலங்கை இராணுவத்தின் முதலாவது இலங்கைத் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். இலங்கையின் கடற்படையில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரது நெருங்கிய உறவினரான ராஜன் கதிர்காமர் முன்னால் தளபதியாகப் பணியாற்றியிருந்தார்.

விமானப்படையிலும் பல்வேறு உயர் பதவிகளில் விமானிகளாகவும், அதிகாரிகளாவும் வடக்கு-கிழக்குத் தமிழர்கள் பணியாற்றியிருந்தனர்.

பொலிஸ் சேவையில் அடிமட்டத்தில் இருந்து மேல்மட்டம் வரை தமிழர்கள் சகலவிதமான பதவிகளையும் வகித்தனர். அத்துடன் திறமைசாலிகளான அதிகாரிகளாகவும் சேவையாற்றியிருந்தனர்.

ஆனால் காலப்போக்கில் இனவாதம் இலங்கையின் பாதுகாப்புச் சேவையையும் விட்டுவைக்கவில்லை. தமிழர்கள் பாதுகாப்புச் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவதில் பாரபட்சம் காட்டப்பட்டது. சேவை மூப்பு, திறமை என்பவற்றின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதில் சிங்களவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது.

இதன் காரணமாக புதிதாக பாதுகாப்புச் சேவையில் சேர்வதற்கு தமிழர்கள் முன்வரவில்லை. அத்துடன் ஏற்கனவே பாதுகாப்புச்சேவையில் பதவிவகித்தோரும் அதிருப்தியினால் விரைவாகவே ஒய்வுபெற்றனர்.

இலங்கையின் முப்படை, பொலிஸ் என்பவை இன்று பெரிதும் சிங்களவர்களையே உள்ளடக்கியதாகவும், அவற்றின் செயற்பாடுகள் அனைத்துமே சிங்கள மொழியையே முதன்மைப்படுத்தியதாகவும் இருக்கின்றது.

கடந்த இரு தசாப்தகாலத்தில் இலங்கையின் பாதுகாப்புச் சேவையில் எந்தவொரு தமிழ்மகனாலும் ஊளத்திருப்தியுடன் சேவையாற்ற முடியாமலேயே இருந்துவந்தது.

இராணுவத்தளபதி இலங்கை இராணுவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் சேர்த்துக்கொள்ளும் தமது விருப்பத்தை வெளியிட்டிருந்தார்.

இலங்கையைப் பொறுத்தவரை தற்போது இனரீதியான இருவேறு ஆயுதப்படைகள் இருப்பது போன்ற நிலையே காணப்படுகின்றது.

அத்துடன் அவற்றுக்கிடையே யுத்த நிறுத்தம் அமுலிலிருப்பது போன்றே தற்போதைய சூழ்நிலையும் விளங்குகின்றது.

விரல்விட்டு எண்ணக்கூடியளவு உறுப்பினர்களோடு ஒரிரு கைத்துப்பாக்கிகளுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு உருப்பெற்றது.

தற்சமயம் ஒரு பெரும் இராணுவமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு விளங்குகின்றது. பீரங்கிப் படை, கவச வாகனங்கள் எறிகணைகள், மற்றும் முழுமையான இராணுவமொன்றுக்கு நிகரான விதத்தில் அனைத்து நவீன ஆயுத தளபாடங்களையும் எல்.ரி.ரி.ஈ. அமைப்பு கொண்டுள்ளது.

தரையில் மட்டுமல்லாது, கடலிலும் கடற்புலிகள் அணி என்ற பிரிவையும் புலிகள் வைத்துள்ளனர். விமான எதிர்ப்பு அணியும் புலிகளிடம் இருப்பதுடன் கடந்தகால யுத்தங்களில் பல விமானங்கள், வேறு வானூர்திகள் என்பனவும் எல்.ரி.ரி.ஈ. அமைப்பினால் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தன.

இது தவிர 1987ம் ஆண்டுமுதல் 1989ம் ஆண்டுவரை ஓர் அந்நியப் படையான இந்தியப்படையுடனும் துணிகரமாகவே சண்டையிட்டு அப்படையை இலங்கையிலிருந்து வாபஸ் பெறவைப்பதிலும் எல்.ரி.ரி.ஈ. அமைப்பு வெற்றிபெற்றிருந்தது.

இலங்கை ஒரு சிறிய தீவு, உலகில் உள்ள அனைத்து நாடுகளும் இலங்கையின் அழகையும், மக்களையும் பெரிதும் விரும்புகின்றனர்.

தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கி இனங்களும் இந்து, பௌத்த, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களும் மிக ஆரோக்கியமாகவே இலங்கையில் வளர்ச்சி பெற்றுள்ளன.

இருப்பினும் முற்று முழுதான இன அன்னியோன்யத்தை இலங்கையில் காண முடியாதுள்ளது.

இலங்கையில் ஒரு அருவருக்கத்தக்க கட்டத்தை எட்டியுள்ள இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு கடந்த காலங்களில் உரிய விதத்திலான சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தற்போது பொதுஜன ஐக்கியமுன்னணி ஜனாதிபதி ஆட்சியையும் ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற ஆட்சியையும் கொண்டிருக்கும் ஒரு புதிய அரசியல் சூழ்நிலையில் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இம் முயற்சிக்கு உதவ சர்வதேச சமூகமும் முன்வந்துள்ளது. ஆயினும் தென்னிலங்கையின் சில அரசியல் சக்திகள் கடந்த காலங்களில் போலவே மீளவும் இனவாத சுயரூபத்தை வெளிக்காட்டத் தொடங்கியுள்ளன.

ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னனி தமிழீழ விடுதலை புலிகளுக்கெதிரான பிரசாரத்தை



மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் மீளவும் சமாதான-சக வாழ்வுக்கு வேட்டு வைக்கும் கைங்கரியத்தில் ஜே.வி.பி. இறங்கியுள்ளது.

இராணுவ ரீதியாக மட்டுமல்ல; அரசியல் ரீதியாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் எவ்வகையிலும் விலக்கி வைக்கப்பட முடியாதவர்கள்.

கடந்த வாரம் கிழக்குமாகாணத்தில தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்து பத்தாயிரத்துக்குமதிகமான மக்கள் மாபெரும் பேரணியை நடத்தினர். இப்பேரணியில் எல்.ரி.ரி.ஈ. அமைப்புடன் பேச்சுக்களை நடத்தி சமாதானத்தை ஏற்படுத்துமாறு கோஷமெழுப்பினர்.

கிழக்கில் இடம்பெற்ற பேரணி வெறுமனே தமிழ் மக்களின் விருப்பத்தை மட்டும் பிரதிபலிக்கவில்லை. யுத்தச் சூழ்நிலையினால் நிறையவே பாதிப்புக்களை அனுபவித்து வருகின்ற மக்களின் உணர்ச்சி வெளிப்பாடாகவும் அப்பேரணி அமைந்திருந்தது.

பூகோள ரீதியாக நாளுக்கு நாள் மாறிவருகின்ற அரசியல், சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகளில் மொழி, மதம், சாதி, நிறம் போன்ற வேறுபாடுகள் வலுவிழந்து வருகின்றன.

சங்க காலப் புலவர் கனியன் பூங்குன்றனார் குறிப்பிட்ட "யாதும் ஊரே யாவரும் கேளிர்." அதாவது எவருக்கும் எந்தநாடும் சொந்தமானது; யாவரும் ஒருவருக்கொருவர் உறவினர் என்ற கோட்பாடே வலுப்பெற்று வருகிறது.

பூகோள மயப்படுத்தப்பட்டுவரும் கைத்தொழில், பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக நாடுகளும், மக்களும் ஒருவரை யொருவர் அனுசரித்து வாழும் சர்வதேச குடும்பம் என்ற நிலைப்பாடே வியாபித்து வருவதாக இருக்கின்றது.

இலங்கையில் இனரீதியான கெடுபிடிகள் இருந்து வருகின்ற போதிலும் மூவின மக்களும் ஒருவரோடு ஒருவர் புரிந்துணர்வுடன் வாழுகின்ற சூழ்நிலைகள் இன்றுங்கூட இருந்து வருகின்றன.

அரச நிறுவனங்களில் பாரபட்சங்கள் காட்டப்பட்டபோதிலும் அரசசார்பற்ற தனியார் நிறுவனங்களில் இனவேறுபாடுகளற்ற தன்மைகள் பேணப்படுவதாகவும் இருக்கின்றன.

இருப்பினும் திருப்தியளிக்கக் கூடிய விதத்திலோ அல்லது பரிபூரணமாக துவேஷமனப்பாங்கற்ற சூழலிலோ சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையே புரிந்துணர்வ காணப்படுவதாக இல்லை.

இராணுவத்தளபதி தமிழீழ விடுதலைப் புலிகளை ஆயுதப்படைகளில் சேர்ப்பது பற்றிக் குறிப்பிட்டிருந்தார். ஏற்கனவே இராணுவ ரீதியாகத் திறமைகளை வெளிப்படுத்தி சிறந்த கட்டுக் கோப்புடன் இருந்துவருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இராணுவத் தளபதி கொண்டிருக்கின்ற நல்லபிமானத்தையே ஆயுதப்படைகளில் புலிகளையும் சேர்த்துக் கொள்ளும் அவரது விருப்பம் வெளிப்படுத்துகிறது.

இதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாகவே எப்போதும் சுட்டிக்காட்ட விரும்பவோருக்கும் பலத்த அடி வீழ்ந்துள்ளதையே அறிய முடிகிறது.

இன்றைய இராணுவத்தளபதி லயனல் பலகல்ல மட்டுமல்ல, கடந்த இருபது வருடகாலத்தில் அவருக்கு முன்பிருந்த தளபதிகள் பலரும் கூட எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் இராணுவ பலத்தை வியப்புடன் நோக்கியதோடு, இராணுவத் தீர்வை விட, அரசியல் தீர்வே இலங்கையின் இனப்பிரச்சனைக்கு உகந்தது என்பதையும் திட்டவட்டமாகவே கூறியிருந்தனர்.

இலங்கையில் சுமார் மூன்று வருடகாலம் வடக்கு-கிழக்கில் நிலை கொண்டிருந்த இந்தியப் படையின் சிரேஷ்ட தளபதிகள்கூட தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ ரீதியான திறமைகளைப் பாராட்டியிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளது அரசியல் நிலைப்பாடு மற்றும் அது தொடர்பான உறுதிப்பாடு என்பவையே அவர்களது இராணுவ அணுகுமுறைகள் வாயிலாக வெளிப்பட்டு நிற்கின்றன.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்கொண்டு நிற்கும் இராணுவத்தின் தளபதி ஜெனரல் பலகல்ல இராணுவத்தில் புலிகளை சேர்ப்பதில் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்ற சமூக விரோதச் சக்திகளிலிருந்தும் வேறுபட்டவர்கள், உணர்வுபூர்வமாக தமது இனத்துக்காகப் போராடுபவர்கள் என்பது நிரூபணமாகியுள்ளது. இந்நிலையில் அரசியல் கோதாவில் இருப்போரும் தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்றழைக்கும் போக்கை மாற்றி, அரசியல் நீரோட்டத்திலும் எவ்வித தடைகளுமின்றி அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டியதே தற்போது இன்றியமையாததாகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



**நமது போராட்டம்** ஆரம்பம் முதலே சிலருக்கு நல்ல லாபம் தரும் யாவாரம். உதுல எங்களின்ர பத்திரிகை யாவாரி மாரும் அடக்கம். தமிழ் சனத்தின்ர நாடி நரம்பை முறுக்கேத்துற மாதிரி தேசிய வாதம் பேசிக் கொண்டிருக்கும் தலைவரின் படம் போட்டு பேப்பர் விற்கிற காலம் போய் இப்போ தலைவர் கையில பேப்பரைக் கொடுத்து அதைப் படம் பிடித்துக் காட்டுற அளவு காலம் முன்னேறிடுச்சு. யாவாரஞ்செய்றவை உந்தமாதிரி ஏதாவது 'டெக்னிக்' கையாண்டு பார்க்குறது சகஜம் எண்டாலும் தலைவர் உந்தளவு இறங்கி வந்து போஸ் கொடுக்கிறார் எண்டு நினைக் கைக்க சங்கடமாக்கிடக்கு. முன்பு வன்னிக்குப் போன எரிக் சொல்ஹெய்மையே சந்திக்க 'நேரம் இல்லாதவர்' இப்போ போர் நிறுத்தம் என்றபடியால் ஒய்வுல இருக்கிறார் எண்டு நினைக்கிறன்.

***பிள்ளையாரை*** கொண்டு போய் களுத்துறையில சிறை வச்சிட்டு வந்திருக்கிறார் மகேஸ்வரர். புரியல்லியே... களுத்துறை சிறையில இருக்குற தமிழ்க் கைதிகளுக்கு அங்கு கோயில் கட்டி திறந்து வச்சிருக்கிறார். நமது அமைச்சர் சிறையில இருக்கிற இளைஞர்களையெல்லாம் வெளியில எடுப்பன் எண்டல்லோ தேர்தலுக்கு முன்னர் சொல்லித் திரிந்தவர். இப்போ அமைச்சராகி அங்கே போய் கோயில் கட்டுறார் எண்டால் உந்த தமிழ் பொடியளை நிரந்தரமா களுத்துறையில வைக்கத்தான் நம்மவருக்கு ஐடியாவோ...!

**இதுவும் மிஸ்டர்** யூ.பி.பற்றிய செய்திதான் உந்த ஆள் குடாநாட்டில செய்யுற கருப்புச்சந்தை பிஸினசால் சனம் படுற பாடு ஒரு பக்கம் கிடக்க இப்போ ஆட்டைக்கடிச்சு மாட்டைக்கடிச்சு பிறகு வேறெதையோ கடிச்ச மாதி அமைச்சரின்ர பிஸினஸால் பாடசாலை பிள்ளைகளின்ர படிப்பிலயும் மண் விழத் தொடங்கியிருக்கு. குடாநாட்டுக்கு பாடப்புத்தகம் போகவேண்டிய கப்பலில் தினசரி உருளைக்கிழங்குதான்போகுதாம். அதனால அங்கு ஜனவரியில போய்ச்சேர வேண்டிய புத்தகமெல்லாம் கொழும்பில தேங்கிக் கிடக்குது. யாழ்ப்பாண கல்வி அதிகாரி ஒருத்தர் கண்ணீர் விடாத குறையாக "சொல்லுறார் படிப்பை பற்றி தெரிஞ்சவைக்குத்தானே தம்பி புத்தகத்தின்ர அருமை புரியும். உந்தாளுக்கு உருளைக் கிழங்குதான் உலகம்"

***சுதந்திர தினத்தைக்கூட*** இருட்டில கொண்டாட வேண்டிய நிலைக்கு நாடு முன்னேறிடுச்சு! தேர்தலுக்கு முன்னர் பேசிய வீர வசனங்கள் செயல் வடிவம் பெற்றதாத் தெரியல்ல. வாழ்க்கைச் செலவு றொக்கெட் வேகத்துல ஏறிக்கொண்டு போகுது. உந்த மாதிரி நிலைமைக்கெல்லாம் அம்மையார் யுத்தத்தை காரணம் சொன்னார். இப்போது அமைதி நிலவுது அப்படியிருந்தும் சாமான் விலையேறுவது? ரணில் புதிதாக ஏதும் செய்வார் என்ற எதிர்பார்ப்பு கொஞ்சம் கொஞ்சமாக நழுவிக்கொண்டு போகுது. பழைய ஐ.தே.க. ஆட்சியில் முக்கிய பொறுப்புக்களில் இருந்துவிட்டு அம்மையார் அதிகாரத்துக்கு வந்ததும் நாட்டை விட்டு ஓடிய கொழுத்த ஊழல் பேர் வழிகள் பலர் தமது முன்னைய பொறுப்புக்களுக்கு திரும்பியிருக்கிறார்கள். முன்னர் நிதியமைச்சின் செயலாளராக இருந்து பல கோடி ரூபாயுடன் 94ல் தலைமறைவான பாஸ்கர லிங்கத்தை மறத்திருக்க மாட்டீர்கள்! அவர் மீண்டும் நிதி அமைச்சின் ஆலோசகராக வந்திருக்கிறார். 17 வருடம் ஆட்சி செய்த பழைய ஐ.தே.க.தான் இப்போதும் ஆட்சிக்கு வந்திருக்கிறதா?.

# உண்மைத் தொடர் 41

ஜெர்மனியின் தலை நகரான பேர்லினை நோக்கி ரஷ்யப் படைகள் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தன. ஜெர்மன் இராணுவத்தின் முன்னரங்க நிலைகள் தகர்க்கப்பட்டு இறுதிக்கட்ட சண்டையில் ரஷ்யா தன்னை முழுமையாக ஈடுபடுத்தியிருந்தது.

1945ம் ஆண்டு ஏப்ரல் 25ந் திகதி பெர்லின் நகரை ரஷ்யப் படைகள் சூழந்து கொண்டு விட்டன. விமானங்கள் குண்டுமாரி பொழிந்து கொண்டு இருந்தன. எந்த நேரத் திலும் ரஷ்யப் படைகள் பெர்லின் நகருக்குள் புகுந்து விடலாம் என்கிற நிலை.




எதிரிகளிடம் யுத்தக் கைதியாய்ப் பிடிபட்டால் தன் நிலை என்னவாகும் என்பதை உணர்ந்தான் ஹிட்லர்.

எதிரிகளிடம் சிக்குவதைவிட தற்கொலை செய்து கொள்வதே மேல் என்ற முடிவுக்கு வந்தான்.

தன் முடிவைக் காதலி ஈவா பிரவுனிடம் தெரிவித்தான்.

**தற்கொலைக்கு முன் திருமணம்**

ஹிட்லரின் முடிவைக் கேட்டு, ஈவா பிரவுன் திடுக்கிடவில்லை.

"வாழ்விலும் உங்களுடன் இருந்தேன். சாவிலும் உங்களுடன் தான் இருப்பேன். உங்களுடன் நானும் தற்கொலை செய்து கொள்வேன்" என்றாள்.

காதலியின் உண்மையான அன்பைக் கண்டு ஹிட்லர் நெகிழ்ந்து போனான்.

"பிரவுன்! உன் அன்பு என்னைப் பிரமிக்கச் செய்கிறது. நீ என்னிடம் எது வேண்டுமானாலும் கேள். தருகிறேன்" என்றார்.

"என்னை உயிருக்கு உயிராக நேசித்தீர்கள். நான் பாக்கியசாலி. இதுவரை உங்கள் காதலியாக இருந்த நான், சாகும்போது உங்கள் மனைவியாகச் சாக விரும்புகிறேன். இதுதான் என் கடைசி ஆசை" என்றாள் பிரவுன்.

இந்த வேண்டுகோளை ஹிட்லர் ஏற்றுக் கொண்டான்.

ஏப்ரல் 27ந் திகதி ஹிட்லரின் பிறந்தநாளை யொட்டி பாதாள அறையில் விருந்து நடந்தது. ஹிட்லரின் உயிர் நண்பனான கோயபல்ஸ் மற்றும் ராணுவ தளபதிகள் வந்திருந்தனர். ஹிட்லருக்கு பிறந்த நாள் வாழ்த்துப் பாடலை ஈவா பிரவுன் பாடினாள்.

மறுநாள், ஏப்ரல் 28ந் திகதி. ஹிட்லர்-ஈவா பிரவுன் திருமணம் நடந்தது.

அன்று காலையிலேயே, தன் அறையை அலங்கரிக்குமாறு உதவியாளர்களுக்கு ஹிட்லர் உத்தரவிட்டான். அதன்படி அறை அலங்கரிக்கப்பட்டது. சட்டப்படி திருமணப் பதிவ செய்ய நகரசபை அதிகாரி அழைக்கப்பட்டார்.

திருமணப் பதிவு பத்திரத்தில் ஹிட்லரும், ஈவா பிரவுனும் கையெழுத்திட்டனர். கோயபல்சும், மற்றொருவரும் சாட்சிகளாக கையெழுத்திட்டனர்.

பிறகு விருந்து நடந்தது. ஹிட்லரின் நண்பர்கள் மது அருந்தினார்கள். ஹிட்லர் தேனீர் அருந்தினான். தங்கள் வாழ்க்கை இன்னும் சில நாட்களில் முடியப் போகிறது என்பதை அறிந்திருந்த அவர்கள், கவலையை மறக்க ஆடிப்பாடினார்கள். விடிய விடிய கேளிக்கைகள் நடந்தன. காலை 6 மணிக்குத்தான் ஹிட்லரும், ஈவாவும் படுக்கச் சென்றனர்.

**உயில்**

காலை 11 மணிக்கு, தன் உயிலை எழுதும்படி மனைவி ஈவாவிடம் கூறினான் ஹிட்லர்.

அவன் கூறக்கூற, ஈவா எழுதிய உயில் வருமாறு:

"வாழ்விலும், தாழ்விலும் என்னோடு இருந்து என் இன்ப-துன்பங்களில் எல்லாம் பங்கு கொண்ட ஈவா பிரவுனை என் வாழ்வின் கடைசிக் கட்டத்திலாவது மணந்து கொண்டு கௌரவிக்க வேண்டுமென்று முடிவு செய்தேன். அதன்படி மணந்து கொண்டேன்.

நாங்கள் இறந்த பிறகு, எந்த ஜெர்மன் நாட்டு மண்ணுக்காகக் கடந்த 12 ஆண்டு காலமாகப் பாடுபட்டு வந்தேனோ, அந்த ஜெர்மன் மண்ணிலேயே என்னையும், ஈவாவையும் உடனே எரித்து விட வேண்டும். இதுவே என் கடைசி ஆசை.

என் சொத்துக்கள் எல்லாம் எனக்குப் பிறகு என் கட்சிக்கு சேர வேண்டும். கட்சி அழிந்து விட்டால் நாட்டுக்குச் சேர வேண்டும்."

இதுவே ஹிட்லரின் உயில்.

**தளபதிகள் கூட்டம்**

அன்று மாலை தன் தளபதிகள், அமைச்சர்கள், அந்தரங்க உதவியாளர்கள் கூட்டத்தை ஹிட்லர் கூட்டினான்.

அந்தக் கூட்டத்தில் அவன் பேசியதாவது :-

"ஜெர்மனி நாட்டு மக்கள் எப்போதும் போராடிக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கொஞ்சமும் கிடையாது. சமாதானத்தையே விரும்புகிறேன்.

போருக்குக் காரணம் நானல்ல. யூதர்கள் தான்.

ஜெர்மனி நாட்டு மக்களின் வீரத்திற்கும், தேசபக்திக்கும் இந்தப் போர் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. இன்று இல்லா விட்டாலும் நாளை ஜெர்மனி வெற்றி பெறும்.

இந்தப் போரில் நான் இறக்க நேர்ந்தால், மகிழ்ச்சியுடன் மரணத்தைத் தழுவவேன். ஒரு போதும் எதிரிகளின் கையில் சிக்கி அவமானம் அடைய மாட்டேன். இது உறுதி."

இவ்வாறு ஹிட்லர் கூறினான்.

**இறுதிச் சாசனம்**

பின்னர், நாட்டுத் தலைவர் என்ற முறையில் மக்களுக்கு இறுதிச் சாசனம் ஒன்றை எழுதினான்.

அந்தச் சாசனம் வருமாறு:



"முதல் உலகப் போரில் ஒரு சாதாரணப் போர் வீரனாகக் கலந்து கொண்டவன் நான். அது நடந்து 30 ஆண்டுகள் ஓடி விட்டன.

ஜெர்மனி மண்ணின் மீதும், மக்கள் மீதும் நான் கொண்ட பற்றும், பாசமும்தான் என்னை வழி நடத்தின.

கடந்த 30 ஆண்டுகளாக என் சக்தி முழுவதையும் என் தாய் நாட்டின் மேன்மைக்காகச் செலவிட்டிருக்கிறேன்.

இந்தப் போருக்கு நானே மூலகாரணம் என்று யாரும் நினைக்க வேண்டாம். ஏனென்றால் போர் வெறி கூடாது, ஆயுதக் குறைப்புச் செய்ய வேண்டும் என்று நானே வலியுறுத்தி இருக்கிறேன்.

முதல் உலகப் போருக்குப் பிறகு இப்படி இரண்டாவது உலகப் போர் மூளும் என்று நான் சற்றும் நினைக்கவில்லை. எப்படியோ போர் மூண்டு விட்டது.

இந்தப் போரினால் நம் நாடு சந்தித்த பயங்கர விளைவுகள், நாசமாக்கப்பட்ட பிரமாண்டமான மாளிகைகள், தரைமட்டமாக்கப்பட்ட கலையம்சம் மிக்க நினைவுச் சின்னங்கள் யாவும் நம் மீது உலக நாடுகள் நடத்திய கோரத்தாக்கு தலை நம்முடைய பிற்கால சந்ததி யினருக்கு உணர்த்திக் கொண்டு இருக்கும்.

இந்தப் போருக்குக் காரணமானவர்களைப் பார்க்கும் போதெல்லாம் ஒவ்வொரு ஜெர்மனிய இளைஞனுக்கும் உணர்ச்சியும், எழுச்சியும் ஏற்படும்."

இவ்வாறு இறுதிச் சாசனம் எழுதிக் கையெழுத்திட்டான் ஹிட்லர்.

**(ஹிட்லர் வருவான்..)**

## "கடத்தல் காரர்களுடன் பேசப்போகிறேன்..."

## தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பத்திரிகையாளரின் மனைவி தெரிவிப்பு

**வோ**ல் ஸ்ட்றீட் ஜர்னல் என்ற அமெரிக்கப் பத்திரிகையின் இந்திய பாகிஸ்தான் நிருபர் டானியல் பேர்ல் என்பவர் பாகிஸ்தான் தீவிரவாதிகளினால் கடத்தப் பட்டிருக்கிறார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இவரைக் கடத்திச் சென்ற பாகிஸ்தான் ஆயுதக் குழுவான கௌரவத்தை மீட்கும் தேசிய இயக்கம் என்ற அமைப்பு இவரை விடுதலை செய்ய வேண்டுமாயின் கியூபாவிலுள்ள தீவில் தடுத்துவைக் கப்பட்டிருக்கும் அல்கய்தா சிறைக்கைதிகள் சித்தரவதை செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்றும் அங்குள்ள பாகிஸ்தான் கைதிகள் மீண்டும் தமது சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்று நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர்.



சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் அல்கய்தா கைதிகள் மீது அமெரிக்கா சித்தரவதை செய்தால் பத்திரிகையாளர் டானியலை கொலைசெய்யப்போவதாக இந்த அமைப்பு அச்சுறுத்தியிருக்கிறது.

இவரை கைதுசெய்து சங்கிலி பிணைக்கப்பட்ட நிலையில் தலையில் துப்பாக்கியொன்று அழுத்தியவண்ணம் தடுத்துவைத்திருக்கும் புகைப்படம் ஒன்றை தீவிரவாதிகள் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு ஈ-மெயில் மூலம் அனுப்பி வைத்துள்ளனர்.

இவர் எங்கு தடுத்துவைக்கப் பட்டிருக்கிறார் என்பது குறித்து எந்தத் தகவலையும் கண்டறிய வாஷிங்டன் புலனாய்வாளர்களால் இன்னும் முடியவில்லை.

இதேவேளை டானியல் பேர்லை விடுதலை செய்யுமாறு கோரி கடத்தல் காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக அவரது மனைவி மரியான் பேர்ல் தெரிவித்திருக்கிறார்.

பிரான்ஸ் தொலைக்காட்சிக்கு ஞாயிறன்று அளித்த பேட்டியில் யாரோ செய்த கொலைக்கு அப்பாவிகளைப் பழிதீர்ப்பது தவறான செயல் என்று கடத்தல் காரர்களுக்கு விளக்குவேன் என மரியான் கூறுகிறார்.

6 மாத கர்ப்பிணியான இந்தப் பெண் தான் கடத்தல் காரர்களை சந்திக்க விருப்பம் கொண்டிருப்பதாக பாகிஸ்தானில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றிலும் கடிதம் எழுதியிருக்கிறார். இவரும் ஒரு பத்திரிகையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் டானியல் பேர்லின் கடத்தலுடன் சம்பந்தப் பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 6 பேரை திங்கட்கிழமை இரவு லாகூர் பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புபட்ட மற்றும் இருவரின் பெயர்களையும் பாகிஸ்தான் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

(5ம் பக்கத் தொடர்ச்சி )

*நாங்கள் செய்யேலாததை எல்லாம் திரையில ரஜினி செய்யிறதைப் பாத்து என்ன நினைவு வருமோ அப்பிடி ஒரு மனநிறைவு!*

*நாங்கள் பிறகும் றோட்டில அப்பிடியே நடுங்கி நடுங்கித்தான் போகவேணும். ஆனாலுமென்ன, குமாரண்ணை எண்டு ஒரு தமிழன் இருந்தார். அவர் செய்தியளைக் கேட்டு நாங்கள் கிறுகிறுத்துப்போக.*

*சாக்கடைக்குள்ள கிடந்து நிலாவைப் பாக்கிற மாதிரி உங்களையும் பாக்கிறதுக்கு.அப்பாவைப் போல நீங்களும் எங்கட இயலாமையைச் செய்து காட்டுகிற ஹீரோவா வேஷம் போட வேணும். இல்லாட்டில் அவற்றை இடத்தை ஆரும் யாவாரிமார் நிரப்புற மாதிரி ஆயிடும்.*

*உங்களுக்கான உசாரைத் தருவதுதான் இந்தக் கடிதத்தின் நோக்கம்.*

*எலக்சன் அறிவிச்சபிறகு யாழ்ப்பாணத்தைப் பாக்க பலாலிக் காம்புக்குள்ள இருந்து பரக்கப் பரக்க முழிச்சபடி நீங்கள் வந்ததைப் பாக்கேக்க எனக்குச் சந்தேகம். குமாரண்ணையின்ர தெனாவட்டு உங்களிட்ட மிஸ்ஸிங் எண்டு.*

*சின்ன வயசுதானே? கெதியில பழகிக் கொள்ளுவியள்.*

*உங்களையும் சனத்துக்குத் தெரியாமல், சனத்தையும் உங்களுக்குத் தெரியாமல்... இஸ்ரேல்காரனுக்கு ஈக்குவலாய்ப் பேசப்படுற எங்கட சனத்தின்ர எம்.பியாகி இருக்கிறீங்கள். நீங்கள் விண்ணன் எண்டு காட்ட வேணும். இல்லாட்டில், எங்கட சனத்தைப் பற்றிய மற்றவையின்ர அபிப்பிராயம் மாறிப்போகும். "அரசியல் தற்குறிகள்" எண்டு ஆரும் பழிக்க இடமாகும். அவதானம் எண்டு சொல்லவே இந்தக் கடிதம். மற்றபடி, வாழ்த்துக்களுடன்.*

***சாதாரணன்***

# ஜெ.

## எழுச்சிக்குப் பின்னால்....

**பி**டாரியைச் சிலிர்த்துக் கொண்டு ஒரு சிங்கம் கர்ஜிக்கிற படத்தை எந்தப் புத்தாண்டு வாழ்த்து அட்டையிலாவது பார்த்திருக்கிறீர்களா?

பத்து வருடங்களுக்கு முன் ஒரு புத்தாண்டு சமயம் தம் நண்பர்களுக்கு ஜெயலலிதா அனுப்பிய வாழ்த்து அட்டையில் அந்தக் கம்பீர சிங்கத்தைப் பார்த்தவர்கள் மிரண்டு போனார்கள். 'என்ன அர்த்தம் இந்தப் படத்துக்கு' என்று அவர்கள் கேட்டதற்கு ஜெயலலிதா சொன்ன பதில்: "இனி இந்தச் சிங்கம் மாதிரிதான் நான் எழுந்து நிற்கப் போகிறேன்!"

அரசியலில் காலூன்றும் நேரத்திலேயே பல எதிரிகள் தோன்றி ஒரு சின்ன தப்பு செய்ய மாட்டாரா என்று அ.தி.மு.க. சீனியர்களே கண்ணுக்குப் பன்னீர் விட்டுக்கொண்டு கவனித்து வந்த நேரத்தில்தான், ஜெயலலிதா ஒரு சிங்கமாக எழுந்து நிற்பது என்று முடிவு செய்தார். அதை பகிரங்கமாக அறிவித்ததில்தான் முதல் முறையாக அவரது துணிச்சல் மற்றவர்களுக்குப் புலப்பட்டது. அந்தத் துணிச்சல்தான் இன்று வரை அவரது விசிட்டிங் கார்டாகவும் இருக்கிறது!

"பலர் சொல்வதுபோல் இளவயதில் அவர் அதிகம் கஷ்டப்பட்டதாக நான் நினைக்கவில்லை. கட்சி அரசியலுக்கு வந்த பிறகுதான் அவருக்குக் கஷ்டங்களே வர ஆரம்பித்தன.

அ.தி.மு.க.வின் கொள்கை பரப்புச் செயலாளர் பதவியை அவர் தாமாகவே ராஜினாமா செய்தார் என்றால், அதற்குத் தரப்பட்ட 'ப்ரஷர்' கொஞ்ச நஞ்சமல்ல. அத்தனையையும் மீறி அவர் வளர்ந்தார் என்றால் 'இதுதான் அரசியல்' என்பதை அவர் உளமார புரிந்து கொண்டதால்தான்" என்றார் அ.தி.மு.க.வின் மூத்த தலைவர் ஒருவர்.

ஜெயலலிதாவின் வளர்ச்சி குறித்துப் பேசும்போது சுவாரசியமாக ஒரு கதை சொல்கிறார்கள்.



அவருக்கு மிகவும் வேண்டிய சில நண்பர்கள்.

"ஜெயலலிதாவின் வெற்றிக்கெல்லாம் அவரது ஜாதக அமைப்புதான் காரணம் என்று இன்றும்கூட கட்சிக்குள் பேசுபவர்கள் உண்டு. பல வருடங்களுக்கு முன்பு- அவர் நடிகையாக இருந்தபோது, ஒரு பேட்டியில் அவரது தாயே 'ஜாதகப்படி என் மகளின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்' என்று சொல்லிவிட இவருக்குப் பொறுக்கவில்லை. "நான் ஜாதகத்தை நம்பி இல்லை. என் வெற்றிக்கு, கடுமையான உழைப்பை மட்டுமே நம்பியிருக்கிறேன்" என்று அந்தக் கணமே பளிச்சென்று கூறிவிட்டார்!"

தன் ஆளுமையைப் பிறர் முந்துவதை விரும்பாத குணம், எதிலும் உறுதியான முடிவெடுக்கும் இயல்பு-இந்த இரண்டும்தான் அவரது சிறப்புக் குணங்கள் என்கிறார்கள் அவரை நன்கு அறிந்தவர்கள்.

"அது அரசியலில் ஜெ.அடியெடுத்து வைத்து, தேர்தலையும் சந்தித்த ஆரம்ப சமயம். தேர்தல் ஆலோசனைக் கூட்டம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. தனது தெளிவான, தீர்க்கமான யோசனைகளை அவர் விறுவிறுவென்று சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது கட்சிக்கு அப்பாற்பட்ட ஆனால் செல்வாக்கு உள்ள ஒரு நபர் எதற்கோ சந்தர்ப்பவசமாகக் குறுக்கிட்டுப் பேச கொதித்துப் போனார் ஜெயலலிதா.

அருகில் ஒரு கரண்டி இருந்தது. அதை எடுத்து அந்த நபரின் தலையில் ஒன்று போட்டார்! அவ்வளவுதான். திக்கு முக்காடிவிட்ட அவர், பிறகு வாய் திறக்கவேயில்லை!"

நிறைய படிக்கும் வழக்கம்தான் அவரது இந்த அசாத்தியத் தன்னம்பிக்கைக்குக் காரணம் என்பது அவருக்கு நெருங்கியவர்களின் முடிவு.

"அவர் ராஜ்யசபா எம்.பி.யாக இருந்தபோது ஒருமுறை டெல்லி தமிழ்நாடு ஹவுஸில் அவருக்குத் தங்க இடம் தர மறுத்துவிட்டார்கள். வேறென்ன, உட்கட்சி எதிரிகள் சதி! பிறகு ஆர்.வெங்கட்ராமன் உதவியால் ஒரு நட்சத்திர ஓட்டலில் தங்கவைக்கப்பட்டார். அந்தச் சிறு உதவிக்கு எப்படி நன்றி சொன்னார் தெரியுமா ஜெயலலிதா? ஆர்.வி. ஜனாதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற பின்னர், சென்னையில் அவர் குடியிருக்க அரசு சார்பில் வீடு கொடுத்து மரியாதை செய் தாரே, நினைவிருக்கிறதா?" என்கிறார் ஒரு அ.தி.மு.க. அமைச்சர்.

பெரிய ஆட்களுக்குத்தான் என்றில்லை. அ.தி.மு.க. தலைமை அலுவலகத்துக்குச் செல்லும் வழியில் ஒரு மூதாட்டியும் அவரது இளம் பெண்ணும் தள்ளுவண்டியில் சோற்றுக் கடை நடத்திக் கஷ்டஜீவனம் செய்து கொண்டிருந்தார்கள்.



சமீபத்தில் ஒருநாள் அவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துப் போய் அந்தப் பெண்ணின் திருமணத்துக்கு 50,000 ரூபாய் உதவி செய்தது பல கட்சிக்காரர்களுக்கே கூடத் தெரியாது!

இதே போல ஜெயலலிதாவின் நேர்மைக்கு எடுத்துக்காட்டாக ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார். சினிமா பிரமுகர் ஒருவர்.

கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் தயாரித்து இயக்கிய ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருந்தார். ஜெயலலிதா வேறொரு தயாரிப்பாளர். "கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் தரும் சம்பளத்தை விட இரு மடங்கு தருகிறேன். எங்கள் படத்தில்தான் நடிக்கணும்" என்று அழைப்பு விடுத்தார்.

அதற்கு ஜெ.வின் பதில்: "கே.எஸ்.கோபாலகிருஷ்ணனைப் போல இரண்டு மடங்கு பணம் உங்களால் தரமுடியும். ஆனால் அவரைப் போல உங்களால் படம் எடுக்க முடியுமா?"

இன்றைக்கு மாநிலம் முழுவதும் அவரைப் பற்றிய பேச்சுதான். ஒரு தனி மனுஷியின் கஷ்டங்கள். போராட்டங்கள். வெற்றிகள். தி.மு.க அரசு தொடுத்த வழக்குகள் ஒவ்வொன்றிலிருந்தும் அடுத்தடுத்து அவர் விடுதலையாவது சென்டிமென்டாக மக்கள் மனத்தைத் தொட்டிருப்பதைத் தெளிவாக உணர முடிகிறது. அ.தி.மு.க. காரர்களே மனசுக்குள் பிரமிக்கும் விஷயம் இது.

ஆனால், வெளிப்படையாகப் பேச அச்சப்படுகிறார்கள். காரணம், இனம் புரியாத பயங்கள்.

"மேடத்தைப் புரிஞ்சிக்கறது கஷ்டம் சார். தன்னை ஏன் சி.எம். ஆக்கினாங்கன்னு பன்னீர்செல்வத்துக்கே இன்னும் புரியலைன்னா பார்த்துக்குங்க!" என்று சிரித்தபடி சொன்னார் ஒரு எம்.எல்.ஏ.

ஒரு பா.ஜ.க. பிரமுகர் நம்மிடம் சொன்னது இது:


"1998ல் அ.தி.மு.க. எங்களுடன் கூட்டணியில் இருந்த நேரம். ஒசாமா பின்லேடனால் இந்தியாவுக்கு ஆபத்து வரும் என்று அப்போது ஜெயலலிதா சொன்னபோது பலபேர் சிரித்தார்கள். இன்றைக்கு உலகமே சிரிப்பாய் சிரிக்கிறது! அவரது தீர்க்க தரிசனம்தான் எங்கள் மேலிடத்துக்கு அவரிடம் பிடித்த விஷயம். அவர் எதிரணியில் இருந்தால்கூட நட்பு பாராட்ட இதுவே காரணம்."

ஆனாலும், சசிகலாவுடனான அவரது இறுகிய நட்பு, நகைகள், புடைவைகள் மீது இருந்த அதிக விருப்பம், பிறகு ஏற்பட்ட அதிக வெறுப்பு, திடீர் கோபம், திடீர் சாந்தம் எனப் பல குணங்கள் இன்னும் அவருக்கு நெருக்கமான பலருக்கே புரிந்துகொள்ள முடியாத விஷயங்கள்தான்.

ஒரு அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சொன்னது போல, 'அவர் ஓர் அர்த்தமுள்ள புதிர்முட்டை!'



# ஒரு வித்தியாசமான தத்தெடுப்பு



**செ**ன்னையில் வித்தியாசமான தத்தெடுப்பு விழா நடைபெற்றது. நாய், பூனை தத்தெடுப்பு விழா நடத்தியவர்கள் ப்ளூகிராஸ் அமைப்பினர். வாருங்கள் இலவசமாய் நாய், பூனைகளைத் தத்தெடுத்துச் செல்லுங்கள் என்ற ப்ளூகிராஸ் அறிவிப்பு வந்ததும் ரேஷன் கடையில் நிற்கும் க்யூ போல் கூட்டம் சேர்ந்து விட்டது.

"எங்க வீட்டுல பேச்சுத் துணைக்கு யாருமே இல்லை. ரொம்ப காலமாகவே ஒரு பூனைக் குட்டி வளர்க்கணும்னு ஆசை. எங்க வாங்குறதுனு தெரியாம இருந்தோம். எங்களுக்குப் படிச்ச மாதிரி ஒரு பூனைக்குட்டியை எடுத்துக்கிட்டோம்" என்கிறார்கள் சத்யமூர்த்தி தம்பதியினர்.

"அது என்ன பூனை? எல்லோரும் நாய்தானே வளர்க்கணும்னு நினைப்பாங்க?

"பூனைதாங்க நம்ம கூடவே இருக்கும். நாய் எங்கயாவது ஓடிட்டு சாப்பிடற நேரத்துக்கு வரும் என்கிறார் சத்யமூர்த்தி.

இரண்டு நாட்கள் வேளச்சேரியில் ப்ளூகிராஸ் வளாகத்தில் நடந்த இந்த தத்தெடுப்பு நிகழ்ச்சியில் பலதரப்பட்ட மக்களை சந்திக்க முடிந்தது. வயதானவர்கள், சிறுவர்கள், பெண்கள் எனப் பலர் வந்திருந்தனர். தத்து எடுப்பதற்கும் சில விதிகளை வைத்திருந்தார்கள் ப்ளூகிராஸ் அமைப்பினர். உதாரணமாக நிறைய சிறுவர்கள் நாய்க் குட்டிகளை தத்து கேட்டார்கள். ஆனால் அவர்களுக்கு தத்து கொடுக்கவில்லை. பெற்றோருடன் வந்தால் மட்டுமே தத்து தரப்படும் என்று கூறி விட்டார்கள்.



"இவங்க ஆசைப்பட்டு வாங்கிட்டுப் போவாங்க. அப்புறம் வீட்டுல திட்டினதும் ரோட்டுல விட்டுரு வாங்க" என்கிறார் நிகழ்ச்சி அமைப்பாளர்களில் ஒருவர். இங்கு தத்துக்கு காத்திருந்த பூனைகள், நாய்கள் எல்லாம் சாலைகளிலிருந்தும் வீடுகளில் வேண்டாம் என்று விரட்டப் பட்டவைகள்தான். நாய்க் குட்டிகளில் எல்லாம் தெரு நாய்கள் தாம். ஆனால் அல்சேஷன், பொமரேனியன் போன்ற ஜாதி நாய்களில் குட்டி இல்லை. பெரிய நாய்களாகவே இருந்தன.

"ஜாதி நாய்க்குட்டிகளை யாரும் தெருவில் போடுவதில்லை. ஆனால் ஜாதி நாய்களை வளர்த்து அவற்றுக்கு நோய் வரும்போது, அல்லது வயதானவுடன் துரத்தி விட்டுவிடுகிறார்கள். அதனால்தான் இங்கிருக்கும் ஜாதி நாய்கள் வளர்ந்தவையாக இருக்கின்றன" என்கிறார் ப்ளூகிராஸ் பொறுப்பாளர் எஸ்.ராகவன்.

"இப்படி பெரிய நாய்களை தத்து எடுத்தால் புதிய வீட்டில் பழகுமா?"

"அப்படி பழகக்கூடிய நாய்களை மட்டுமே தத்து கொடுக்கிறோம். மற்றவற்றை கொடுப்பதில்லை" என்கிறார் ராகவன்.

தனது பத்து வயது மகனுடன் வந்திருந்தார் ராஜேந்திரன். "வீட்டுல படிக்காம வெளியே போய் விளையாடுறான், வெளியே போகாதேனா, வீட்டுல விளையாட ஒரு நாய்க் குட்டி வாங்கித் தா என்றான். இங்கே கூட்டி வந்து விட்டேன், என்கிறார் ராஜேந்திரன்.

நிகழ்ச்சி நடந்த இரண்டு நாட்களில் நூற்றுக்கும் மேற்பட்ட நாய்களும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பூனைகளும் தத்து எடுக்கப்பட்டன. யாராலும் தத்தெடுக்கப்படாத பூனைகளும் நாய்களும் நிகழ்ச்சி முடிந்து வெளிவரும்போது நம்மை பரிதாபமாய் பார்த்தன.

## சிவசக்தி பாண்டியனின் 'ஆறுபடை வீடு'

'வான்மதி', 'கடல்பூக்கள்' உட்பட ஏழு வெற்றிப்படங்களைத் தயாரித்துள்ள சிவசக்தி பாண்டியனின் 8வது படமாக வெளிவருகிறது 'ஆறுபடை வீடு'.

முரளி-தேவயானி ஜோடியாக நடிக்கும் இப்படத்தில் வடிவேல், ராஜீவ், சார்லி உட்பட பலர் நடிக்கின்றனர். திரைக்கதை வசனத்துடன் இயக்கும் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார் லோக் சந்தர்.

படத்தில் பெயருக்கு ஏறப முருகன் எழுந்தருளியிருக்கும் ஒவ்வொரு வீட்டையும் படம்பிடித்து வருகின்றனர். அண்மையில்முரளி-தேவயானி சம்பந்தப்பட்ட காட்சி ஒன்று 10 இலட்சம் பக்தர்களுடன் படமாக்கப் பட்டுள்ளது.



ஜோதிகா-ரம்பா-லைலா
படம்: த்ரீ ரோஸஸ்

விரைவில் திரைக்கு வரவுள்ள ரோஜா கூட்டம் வருஷமெல்லாம் வசந்தம் இரண்டிலும் ஒரு பொது தன்மையை கடை பிடித்துள்ளார்கள். படங்களின் இயக்குநர்கள்

## மினி சினி

* முன்பு சேரன், 'ஆட்டோகிராஃப்'-என்றொரு படத்தைத் துவக்கியதோடு நிறுத்தினாரே ஞாபகமிருக்கிறதா? அந்தப் படத்தை மறுபடியும் ஆரம்பிக்கிறார். படப்பிடிப்பு அடுத்த மாதம் துவங்குகிறது.

* 'கன்னியாதானம்' என்ற தெலுங்குப் படம்தான் 'லவ்வர்ஸ்' என மறு தயாரிப்பாகிறது தமிழில்.

* 'சப்தம்' படத்தின் நாயகி ரித்திகா 'தலைமுறை' படத்தில் நடித்தபோது லட்சுமி என்ற தன் உண்மையான பெயரிலேயே நடித்தார். பின்பு, ரித்திகா என மாற்றிக்கொண்டார். இப்பொழுது, ரத்திகா என்றொரு நடிகை வந்திருக்கிறார். இவர், நடிகை குட்டிபத்மினியின் மகள் ரத்திகா-ரித்திகா, பெயர்க் குழப்பத்தில் புலம்புகிறது திரைவட்டாரம்.

* தெலுங்கில் மிகப் பிரபலமான இயக்குநர் ராகவேந்திரா. 98 படங்கள் தெலுங்கில் இயக்கிய இவர், 99 வது படத்திற்கு தமிழுக்கு வருகிறார். படம் உன்னையே நேசிக்கிறேன்.

* 'அச்சம்தவிர்', 'ஒன் டு த்ரீ', 'த்ரீரோஸஸ்' என மூன்று படங்களில் நடித்து வருகிறார் ஜோதிகா.

* இருபது லட்ச ரூபாயில் மலையாளத்தில் எடுக்கப்பட்ட படம் 'கர்ணம்'. ஏறத்தாழ, ஒன்றரைக் கோடிக்கு மேல் வசூலாம்.

* டி.ஆரின் 'காதல் அழிவதில்லை' படத்தின் கதாநாயகி சார்மி. இவர், தமிழ் வாடையே அறியாத சுத்தப் பஞ்சாபி 'சார்மிங் பெண்'. டி.ஆர்., தன் வாழ்க்கையில் சந்தித்த மிகப் பெரிய போராட்டம்-இந்தப் பெண்ணுக்கு வசனம் சொல்லிக் கொடுத்தது தான்.

## சினிமாவில் ஆபா...

சினிமாவில் தணிக்கை செய்யப்பட்ட... ஆபாச காட்சிகளை சேர்த்து படம் வெளி... தாக கூறப்படும் புகார் மனுவை 4 வார... காவல்துறை ஆணையர் பரிசீலிக்க வே... என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்...

சென்னைச் சேர்ந்த எஸ்.சிவபிரசாத் ... உயர்நீதிமன்றத்தில் 'ரிட்' மனு ஒன்றைத் தா... துள்ளார். அதில், தணிக்கை செய்த பிறகு ... பாளர்கள் தங்களிடமிருக்கும் அதிநவீன வசதி... பிரிவியு தியேட்டர்களில் ஆபாச காட்சிகளை... பட அதிபர்களுக்கு படத்தை விற்கிறார்க... சினிமா சட்டம் 7வது விதிக்கு எதிரானது... எனவும் ரசிகர்களை உற்சாகப்படுத்தும் நோ... குடன் தணிக்கை செய்த பிறகு மீண்டும் ஆபாச காட்சிகளைச் சேர்த்த படத்தை விநியோகஸ்தர்களுக்கு வழங்குவது சட்ட விரோதமாகும். எனவே, இது பற்றி நடவடிக்கை எடுக்குமாறு மத்திய பிராந்திய தணிக்கை அதிகாரிக்கும், சென்னை காவல்துறை ஆணையாளருக்கும் புகார் கொடுத்தார். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தனது புகார் மீது நடவடிக்கை எடுக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் அவர் கூறியுள்ளார்.



## சினி விசிட்

## பிரசாந்தை நெகிழ வைத்த இளம் நடிகர்கள்

தமிழ் சினிமாவில் சம காலத்து ஹீரோக்கள் நட்புடன் இருப்பது அரிதான விஷயம்.

அதை உடைக்கும் விதமாக இந்தக் காலத்து இளம் தலைமுறை ஹீரோக்கள் ஒருவருக்கொருவர் நட்புடன் இருந்து வருகின்றனர். இதுசமீபத்தில் மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டது.

நடிகர் பிரசாந்த் சண்டைக்காட்சியின்போது காலில் அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். காலில் ஆபரேஷன் செய்யப்பட்ட நிலையில் கடந்த 2 வாரங்களாக தனியார் மருத்துவமனையில் அவர் இருந்தார்.

வீடு திரும்பிய பிரசாந்த்தை முன்னணி இளம் நடிகர்களான விஜய், சூர்யா, அருண்குமார் ஆகியோர் சென்று பார்த்து நலம் விசாரித்தனர்.

அக்கறையுடன் அவர்கள் தனது நலன் குறித்து விசாரித்தபோது பிரசாந்த் நெகிழ்ந்து விட்டாராம். அஜீத், விக்ரம் மட்டும்தான் இதில் மிஸ்ஸிங்.

இதேபோல், சீனியர் நடிகர்களான விஜயகாந்த், சத்யராஜ், நெப்போலியன், ஆனந்தராஜ், நிழல்கள் ரவி, பாக்யராஜ், விஜு சக்கரவர்த்தி, வெண்ணிற ஆடை மூர்த்தி, நடிகைகள் மஞ்சுளா, நிரோஷா, சிம்ரன், குஷ்பு ஆகியோரும் பிரசாந்தைச் சென்று பார்த்து அவருடைய உடல் நலத்தை விசாரித்தனர்.

பரவாயில்லை, நம்ம இளை தலைமுறைக்காவது ஒற்றுமையின் மகத்துவம் தெரிகிறது.

## மும்தாஜ் சங்கவியோடு லோறன்ஸ் ஆட்டம்

இரண்டு படத்திலுமே கதையோடு சம்பந்தமில்லாத பாடல் காட்சியை படமாக்கி சேர்த்திருக்கிறார்கள்.

வருஷமெல்லாம் வசந்தம் படத்தில் 'நான் ரெடி நீ ரெடியா' என்று சூடேற்றுகிறார் சங்கவி. அதேபோல் ரோஜா கூட்டம் படத்திற்காக 'சுப்பம்மா சுப்பம்மா சூலுரு சுப்பம்மா' என்று கலக்கல் ஆட்டம் போடுகிறார் மும்தாஜ். நம்ம இளவட்டங்களுக்கு வலை விரிப்பதற்காக சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ள இரு பாடல்களிலும் நாயகிகளை புரட்டி எடுக்கிறார் லோறன்ஸ்.

எதற்கும் ஒர் மச்சம் வேணுமப்பா.



கார்த்திக்-மீனா
படம்: காதலே சுவாசம்

## கமலின் 'பஞ்ச தந்திரம்'

பம்மல் கே.சம்பந்தம் பரவாயில்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. ஏற்கனவே ஒப்புக்கொண்டபடி 'நரன்' படத்தை ஆரம்பிக்கச் சொல்லி விட்டார் கமல். 'நரன்'ங்கிற டைட்டில் ரொம்ப உக்கிரமா இருக்கு. வேண்டாம் என்று சொன்ன கையோடு நரசிம்மான்னு பேர் வச்ச படம் பண்ணின திருப்பதிசாமி விபத்தில் இறந்ததை உதாரணம் காட்டியிருக் கிறார்கள் தயாரிப்பாளரின் நண்பர்கள். கமலுக்கு அதன்மீது நம்பிக்கை இல்லை என்றாலும் தயாரிப்பாளரின் வேண்டுகோளுக்கு 'யெஸ்' சொல்லிவிட்டார். 'நரன்' இப்போது 'பஞ்ச தந்திரம்' என்று மாறி விட்டது.

## விஜய்யின் பெருந்தன்மை

சமீபகால படங்களின் தோல்விக்கு என்ன காரணம் என்பதை அப்புறம் பார்ப்போம். ஒரு படத்தின் வெற்றிக்கு நடிகர் மட்டும் காரணமில்லை என்பதை முதலில் ஒப்புக் கொண்டிருக்கும் நடிகர் விஜய், தயாரிப்பாளர் ஜீவியைக் கூப்பிட்டு தனக்கு பேசப்பட்ட சம்பளத்திலிருந்து இருபது சதவிகிதம் குறைத்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறார். சபாஷ் விஜய்!

## சின்னத்திரைக்கு ஆதரவாக டி.ஆர்.

டி.வி.யை ஆதரிக்கும் பிரபலங்களில் முதலிடத்தில் இருப்பவர் டி.ராஜேந்தர். கூட்டமைப்புகளின் போக்கு பற்றி பகிரங்கமாகவே விமர்சித்துக் கொண்டிருக்கிறார். விஜய்காந்த் வளர்ந்திட்டார் அவருக்கு வேணா டி.வி. தேவையில்லாமல் இருக்கலாம் என் பையன் சிலம்பரசன் இப்பதான் ஹீரோவாக அறிமுகமாகிறான். அவனுக்கு கண்டிப்பா டி.வி. தேவை. காதல் அழிவதில்லை. படத்துக்காக ஊரு முழுக்க போஸ்டர் அடிச்சு ஒட்டியும் சரியா ரீச் ஆகல. அதுக்கான செலவும் அதிகம். இதுவே டி.வி.ல கொடுக்கலாம்னு சொல்லியிருந்தா என் படத்துக்கும் சிலம்பரசனுக்கும் எவ்வளவு பப்ளிசிட்டி கிடைச்சிருக்கும். நான் தனியாவே இதைக்கேட்பேன். கூட நாலு பேர் இருந்தால் இன்னும் நல்லா இருக்கும் என்று சொன்னதோடல்லாமல் அதுக்கான ஆட்களையும் தேடிக்கொண்டிருக்கிறார்.

## வாலிபன்...

பொதுவாக ஆயுளின் உச்சியை நோ... எழுத்தாளர்களின் பேனா முனை... நோக்கித்தான் செல்லும். ஆனால் கவி... முனையோ ஆயுள் ஏற ஏற காதல் ... பாடல்களை உமிழ்ந்து தள்ளிக்... கின்றது.

'லவ்வர்ஸ்' படத்திற்காக ... யிருக்கும் "ஆப்கான் தேசமெ... போனதடி ஆசை நெஞ்சமே.." ... மூலம் கற்பனையின் உச்சி... சென்று விட்டார்.



அஜய்-ரஞ்சனா
படம்: லவ்மேரேஜ்

## ஏதோ நினை... ஏதோ நடந்த...

விவரமான ஆளு ப... மும்தாஜைக் காட்டி ... பண்ணி விட்டார் தயாரி... வட்டங்களின் வருகை... அனைத்து விளம்பர... ஜிற்கே முக்கியத்துவம் ... படத்தில் விவகாரமான ... அதிகமாக இருக்கும் ... தாய்க்குலங்கள் திரை... வதை தவிர்க்கிறார்கள்...

இதனால், பதறிப்போ... தரப்பு அவசர அவசர... முதன்மைப்படுத்தி ... தேவயானிதான் நடிப்புலகின் ... பரம் செய்கிறார்களாம். தனக்கு ... பரம் போதாது என்ற கவலையில் ... இப்போது நிம்மதிப் பெருமூச்சு ...

எனினும் தாய்குலங்கள் திரைய... அலை மோதியதாய் தெரியவில்லை... விளம்பரம் பண்ணி என்ன? சரக்கி... ரசிகர் கூட்டம் அலைமோதும்.

**தயாரிப்பு : ப.ரா...**
**அர்ஹா...**


சூர்யா-ஸ்ருதிகா
படம்: ஸ்ரீ

திரையுலக மறுபக்கம் 224 | தமிழ்நாட்டிலிருந்து மயன்

# டிஸ்கஷன் பண்ணப்போனவர் டிஸ்டப்பானார்

தமிழ் திரையுலகு இப்போது வாரிசுகளின் கரங்களுக்கு கை மாறியுள்ளது. இந்த வாரிசுகளின் யுகத்தில் தன் வாரிசையும் அறிமுகம் செய்து வைத்தார், என்றுமே இளமை மாறாப் பொலிவுடன் விளங்கும் தந்தை நடிகர். அந்த வாரிசு நடிகரும் இடையிடையே திரையில் நாயகனாக தலை காட்டி வந்தாலும் திரையுலகில் தனக்கென தனி இடத்தை எட்டிப் பிடிப்பதில் பல சாவல்களை சந்தித்து வந்தார். ஆகவே, வாரிசு நடிகர் பாரிய எதிர்பார்ப்புடன் நடித்து அண்மையில் வெளிவந்த படம் ஒன்று தற்போது சக்கை போடு போட்டுக் கொண்டு இருக்கிறது. படத்தின் நாயகியாக 'மூன்று ரோஸ்'களில் ஓர் ரோஸ் நடித்திருந்தார்.

அந்த மூன்றெழுத்துப் படத்தின் வெளிப்புறப்படப்பிடிப்பை மேற்கொள்வதற்காக, படப்பிடிப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திற்கு அருகில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றில் நாயகனுக்கும், நாயகிக்கும் வெவ்வேறான அறைகளை 'புக்' பண்ணியிருந்தார் தயாரிப்பாளர்.

வெளிப்புற படப்பிடிப்பின், முதல் நாளே பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டிருந்தன. படப்பிடிப்பை முடித்துக்கொண்டு எல்லோரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு சென்றனர். அவ்வாறே, நாயகன், நாயகி ஆகியோரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஐந்து நட்சத்திர விடுதிக்கு வந்து சேர்ந்தனர்.

தனது அறைக்கு சென்ற நடிகருக்கு அன்று எடுக்கப்பட்ட காட்சிகளில் திருப்தி ஏற்படவில்லை. எனவே, அது பற்றி நடிகையுடன் சேர்ந்து 'டிஸ்கஸ்' பண்ண நினைத்தவர், குளியலறைக்குச் சென்று புது தெம்புடன் நடிகையின் அறைக்கு வந்தார்.

அறையின் கதவை தட்ட கதவு திறக்கப்பட்டது. உள்ளே நின்ற நடிகை குளியலறைக்கு செல்லத் தயாராக இரவு உடையில் காட்சியளித்தார். பகல் உடையில் பார்த்தாலே நமது இள வட்டங்களின் நாடி நரம்புகள் எல்லாவற்றையும் விறைக்க செய்யும் 'குல்பி' நடிகை அவர். இரவு உடையில் பார்த்தால் நடிகரின் நிலைமையை விளக்கவும் வேண்டுமா...???

எனினும் சுதாகரித்துக்கொண்ட நடிகர், என்ன 'நைட் ரெஸ்' இல் நிற்கின்றீர்களே? என்ற கேள்வியுடன் பேச்சை ஆரம்பித்தார். நடிகையும், தனது குல்பி சிரிப்பை முகத்தில் தவழவிட்டபடி "ஆம் குளிக்கப் போக ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன். குளித்து விட்டு வந்து விடுகிறேன். இந்தப் புத்தகத்தை படியுங்கள்" என்று புத்தகம் ஒன்றை கொடுத்து விட்டுப் பாய்ந்து சென்றார் குளியலறை நோக்கி....

வாயினுள் உமிழ்ந்து கொண்டிருந்த உமிழ் நீரை விழுங்கியபடி நடிகை கொடுத்துவிட்டு சென்ற புத்தகத்தை மேய்ந்து கொண்டிருந்தார் அந்த வாரிசு நடிகர். சில நிமிடங்களில தலையை தனது வெள்ளை நிற துவாயால் துவட்டிய படி குளியலறையில் இருந்து வெளிப்பட்டார். நடிகை. படப்பிடிப்பு பற்றி 'டிஸ்கஸ்' பண்ண என்று வந்த வாரிசு நடிகரை மேலும் 'டிஸ்ரப்' பண்ணினார். தலையை துவட்டிய படியே நடிகர் அமர்ந்திருந்த கட்டிலின் மறு முனையில் வந்தமர்ந்து நடிகருடன் பேச்சை ஆரம்பித்தார். நடிகை.

நடிகரோ.. தான் நினைத்து வந்ததை மறந்து கதையை வேறு வழியில் கொண்டு சென்றார். நடிகையின் நடிப்பை வர்ணித்தார். அழகை வர்ணித்தார், சிரிப்பை வர்ணித்தார் இவ்வாறு நடிகரின் வர்ணனை அளவு மீறிச் செல்லச் செல்ல, நடிகரின் வர்ணனைக்கு உட்பட்ட நடிகையின் ஒவ்வொரு அங்கமும் மெய் சிலிர்த்துக் கொண்டன. கட்டிலின் முனையில் இருந்த நடிகை தன்னை மறந்து நடிகர் இருந்த முனையை நோக்கி மெல்ல மெல்ல நகர்ந்து வந்தார். குல்பி சிரிப்பால் அலங்கரித்துக்கொண்டிருந்த நடிகையின் முகத்தில் வித்தியாசமான புன்னகை வழிந்தது. இருவரினது இதயங்களும் தங்களது இயக்க வேகத்தை இரட்டிப்பாக்கிக் கொண்டிருந்தன. நடிகரின் இதழ்கள் நடிகையின் இதழ்களோடு சங்காரம் செய்ய, நடிகையின் விரல்கள் நடிகரின் மேனியில் தொலைத்துவிட்ட முத்தைத் தேடி தேடுதல் வேட்டை நடத்திக் கொண்டிருக்கையில் கதவை தட்டும் சத்தம் இடியாய் விழுந்தது இருவர் செவிகளிலும். துடித்துப் பதைத்துக் கொண்டு கதவை திறந்தவர்களின் கண் முன் நின்றார் படத்தின் இயக்குநர். டிஸ்கஷன் நடத்த வந்தேன் என்று கூறியபடி-


கிரண்
படம்: ஜெமினி

முகப்பில்
விஜய்
பூமிகா-ஸ்ரீகாந்த்

## தமிழ் போ..போ... என்றது மலையாளம் வா.. வா.. என்கிறது

'பூப்பறிக்க வருகிறோம்', 'உன்னைத்தேடி', 'சீனு' போன்ற படங்கள் மூலம் தமிழில் முகங்காட்டிய மாளவிகாவிற்கு எதிர்பார்த்தளவு வரவேற்புக் கிடைக்கவில்லை. அத்துடன் பல கிசுகிசுக்களிலும் மாட்டிக்கொண்டார். இதனால் தமிழ்ப் பட உலகிலிருந்து காணாமல்போன மாளவிகா மலையாளப்பட உலகில் நுழைந்திருக்கிறார்.

மலையாள மெகா ஸ்டார் மம்முட்டியுடன் 'போபாண்டம்' என்ற படத்தின் மூலம் இணைகின்றார். தமிழில் பெரிய இடத்துக்கு வர முடியவில்லையே என்று கவலைப்பட்டவருக்கு மலையாளத் திரையுலகம் கைகொடுத்துள்ளது. எங்கிருந்தாலும் வாழ்க.

## மலையாள மாமனுக்கு வணக்கம்

ஏற்கெனவே கல்யாபானி என்ற மலையாளப்படத்தில் நடித்துள்ள பிரபு இப்போது 'மலையாளி மாமனுக்கு வணக்கம்' என்ற மலையாளப் படத்தில் நடித்து வருகிறார்.

இதில் மலையாளி மாமனாக ஜெயராம் நடிக்க ரோஜா, கஜாகார்த்திக் போன்றோரும் நடிக்கிறார்கள். ஒரு மலையாளக் குடும்பத்திற்கும் தமிழ்க்குடும்பத்திற்கும் இடையே நடக்கின்ற குடும்பப் பிரச்சனைதான் படத்தின் மையக்கரு. இதை இயக்குகிறார் இயக்குநர் ராஜசேனன்.

## குடியரசு தினத்தை கௌரவிப்பு

சென்னையில் கமலஹாசன் நற்பணி இயக்கத்தினர் 53வது குடியரசு தினத்தை முன்னிட்டு 125 ஏழைக் குழந்தைகளை அழைத்து பம்மல் கே. சம்பந்தம் படம் காண்பித்து அவர்கள் படிப்பிற்குத் தேவையான உதவிகளையும் வழங்கி அனுப்பியுள்ளனர்.



## பாடகராகிறார் 'சேது' புகழ் விக்ரம்

"பாடு....! படும் பாட்டையெல்லாம் பாருக்கே கேட்கும் படி."

சூர்யா நாயகனாக நடிக்கும் 'ஸ்ரீ' படத்தில் தனது பிறந்த நாள் வைபவத்தில் சூர்யா மேலே குறிப்பிட்ட பாடல் வரிகளில் ஆரம்பிக்கும் பாடல் ஒன்று பாடுவது போன்று ஒரு காட்சி படமாக்கப்பட்டது.

இந்தப் பாடலை படத்தின் இயக்குநர் புஷ்பவாசகன் எழுத, 'சேது' புகழ் விக்ரம் முதல் முறையாக பாடியுள்ளார்.

## காதோடு சொல்லுகிறோம்

'அழகிய லைலா' என திரைக்கு வந்து தொடைகாட்டி புகழ் பெற்ற நடிகை இப்போதெல்லாம் தனது தொடையை குறைத்துக்கொண்ட மகிழ்ச்சியில் இருக்கிறாராம். இதை பார்த்ததொப்பை நடிகை தனக்கும் அந்த ரகசியத்தை சொல்லும்படி கேட்கிறாராம். ஏனங்கோ உங்களது தொப்பைக்காக இளசுகள் தவிக்கிறதை அறியவில்லையே..?!

என்ன தான் இளம் நாயகர்களுடன் கட்டிப் புரண்டு டூயட் பாடினாலும், குஷிப்படுத்திய இயக்குநருடன் இருப்பதே ஒரு சுகம் தான் என்று நெருக்கமானவர்களிடம் புலம்புகிறாராம் 'பத்ரி'யின் நாயகி. ஏதோ யாருடன் சுகமாக இருந்தாலும் சரியம்மா டும் டும் கொட்டினால் தான் ஏதும் நிச்சயம்.

இரண்டெழுத்து 'பூ' நடிகை முதலீட்டாளர் ஒருவருடனான விவகாரத்தில் 4 லகரங்கள் செலுத்த வேண்டும் அல்லது கூண்டுக்குள் இருக்க வேண்டும் என தீர்ப்பு முடிவாகி இருக்கின்றது. ஆனால் பூ நடிகையோ லகரங்களை கொடுக்க மறுப்பதோடு, கூண்டுக்குப் போகவும் விரும்பவில்லையாம். எனவே மேல் முறையீடு செய்யவுள்ளாராம். நடிகைக்கு நேரமே சரியில்லை போலும். சாணேற முழம் சறுக்கிற கதைபோலத்தான் இருக்குது.


ஸ்ரீ

## பிரகாஷ்ராஜ் தயாரிக்கும் 'தயா'

சில வருடங்களுக்கு முன்பு தமிழில் 'அந்தப்புரம்' என்ற படத்தை மறுதயாரிப்புச் செய்தார் பிரகாஷ்ராஜ்.

பெரிய வரவேற்பு இல்லாவிட்டாலும் கூட நல்ல பெயரைப் பெற்றுத் தந்தது அந்தப்புரம். அதனைத் தொடர்ந்து படம் தயாரிப்பதில் உறுதியாக இருந்த பிரகாஷ்ராஜ் 'தயா' என்னும் படத்தை டூயட் மூவிஸ் சார்பில் தயாரிக்கின்றார்.



## சங்கமத் துறை....

# தேன் கிண்ணம்

### உனைத் தேடி

அளவு கடந்த
அன்புகளால் உன்
போர்வையற்ற அழகுகளை,
புகாரிடப்பட்ட ஒரு
பிரதேசத்தின் பகுதியான
இதயத்தின் ஓரிடத்தில்
உனக்காக வெளுத்துக்கட்டிய
இதய வீக்கம்
எக்கண மென்று
வெடித்துச் செதறுகிறது.
***
வந்திடுவாயோ, இக்கனமென்று
திசைகளெல்லாம்
ஏக்கம் கொண்ட மனதுடன்
வெறிச் சோடிய
வெற்றிட மாய் எப்போதும்
***
கூர்மையற்றுப் போகும்
என் பார்வையின்
பரிதாபங்களுக்கு,
கணிப்பீடு செய்து
பார்க்கிறேன் உன்
அழகுச் சிலையை.

என்.சுதாகர்-பொத்துவில்-10.

---

என் சோகங்கள்
எனக்குள்
சொந்தங்களாக மாறி
கற்பனைகள்
எல்லாம்
கரைந்து ஒழிகிவிட்டது...
பூக்களிலும்
தென்றல் ஓசையிலும்...
நான்
வந்து பார்க்கிறேன்!
கௌரவிக்கப்படும்
என்
பாக்களை..
உன்
எழில் மிஞ்சிய
எச்சங்களை
கவிதைகள்
புனிதப் படுத்தாது!
பிரிவு! சோகம் இசைத்து
கண்ணீர்
விடுகிறது...
சந்தைப் பூவிலாவதும்,
சலனக் காற்றிலாவதும்,
வந்து,
என்னை சந்தோசப்படுத்தி செல்...
எரிமலை வெடித்த
இதயம்.
உடைந்து போன மனசு...
எல்லாமே சங்கமிக்க!

கிண்ணியா-சமீரா கடாபி(சங்கம).

---

## தீர்ப்பை திருத்துங்கள்

ஓ...
நயாக்கரா தேசத்திற்குள்ளும்
ஒரு எரிமலை
இடிந்த கட்டங்களின்
எலும்புக் கூடுகள்
சிதைந்த உயிர்களின்
உறைந்த குருதிபடுக்கைகள்
சூழ்ந்து கொண்ட
புகை மேகங்கள்
பார்த்த போதும்
செய்தி கேட்ட போதும்
சிலுவை சுமந்து
ரணப்பட்டது உயிர்.
***
என்
கல்லறை தேசத்தில் கூட
உன்சோகத்தின்
பிரதிபலிப்பு என்
நாட்டின் மயானபூமிகளை
கடந்து மெல்ல
நகர்ந்த போது...
***
வறுமை சூனியம்
வலுமிழந்த குழந்தைகள்
மனமொடிந்த பெண்கள்
சாவகாசமாய் சண்டையிட
காத்திருக்கும் தலிபான்
வறுமையிலும் வெறுமையிலும்
குமுறி குமுறி
கொதித்துப் போன
அந்த பூமி.
***
அதையும் தாண்ட
உன் நாட்டு
பனிக்காலங்கள் குளிர்காய்ந்த
நெருப்புதுண்டம் ஈராக்
விதைத்ததை அறுக்கிறார்கள்
என்றபோது எங்கோ
வலித்தது.
***
உன் கரம்
நீண்ட பாலஸ்தீனம்
ஆடிப்பாடி மகிழ்ந்த போது
அவஸ்தை பட்டது மனது.
வாழ்க்கையின் வலி
தெரியாதவர்களா அவர்கள்?
உயிரின் விலை
புரியாதவர்களா அவர்கள்?
மரணம் மனிதத்திற்குமா?
***
ஓ...
இன்னும், இன்னும்
மரணம் நிறைந்த
மைலாய் பூமி
நெருப்பு மழை
கொட்டிய ஹிரோசிமா
நாகசாகியின் கல்லறைகள்
கண்டு உன்
ஆயுதகலாச்சாரம் அள்ளிகொட்டிய
குருதியில் தோய்ந்த
அட்சரேகை தீர்க்க ரேகை
கடந்து....
***
நீ
பரிசோதனைகள் நிகழ்த்திய
பாலைவனங்கள்
பள்ளத்தாக்குகள்
காடுகள் கடந்து
ஒரு நிமிசம்
எல்லாம் மறந்து
நெஞ்சம் பதற
நேச நார்களில்
எங்கள் உயிர்பூக்களை
தொடுத்து
ஒன்றாகத்தானே
உனக்காகத்தானே
ஓடி வந்து
கரம் கோர்த்தோம்
தோள் கொடுத்தோம்
கதறி கதறி
நீயழும் துயருக்கெல்லாம்
நாங்களும் தானே
சிலுவை சுமந்தோம்
இதயம் தொட்டு
பிரார்த்தித்தோம்.
***
இன்னும்கூட
என் தாயம்படும்
வேதனையின்
ஒரு துளியில்
சரி-உன் பங்கு
உண்டுதான்.
மறந்து தானே மனிதம்
பேணுகிறோம்.
***
தவறு செய்தவர்கள்
தண்டனைக் குரியவர்கள் தான்
அதனால்.... அதனால்...
இன்னுமொரு உலகப்போர்
வேண்டுமா?
ஏன் உங்கள்
பங்கு சந்தையில்
மனித உயிர்களுக்கு
மாபெரும் வீழ்ச்சியோ?
அரைப்பட்டினிக்கும் அவலத்திற்கும்
ஆயுளை அடகு வைத்திருக்கும்
அந்த சமூகத்திற்கு
இன்னும்
எத்தனை எத்தனை
முள் கிரீடங்கள்
கொடுப்பதாய் உத்தேசம்?
***
ஆனால்...ஆனால்...
உங்கள் கனிம வளத்திற்கும்
கணனி மயத்திற்கும்
அப்பாற்பட்ட கற்கால தேசம்
அவர்களுடையது.
அவர்கள் என்ன
செய்தார்கள்?
***
ஒரு புறம் உயிர்க்கொலைகளும்
மறுபுறம் உணவு பொட்டலங்களும்
எந்த ஆற்றங்கரையில்
அகழ்ந்தெடுத்த நாகரீகம்
இது?
***
அகிலமெல்லாம் அன்பைத்தானே
விதைத்தார்கள்
அல்லாவும் ஈசனும்
ஏசுவும் புத்தனும்
சிலரின் இருதயங்களில்
இன்னும் இன்னும்
ஏன் முட்களே
முளைக்கிறது?
***
மைலாய் போல்
ஹிரோசிமா போல்
ஈராக் பாலஸ்தீனம் போல்
ஆப்கானிஸ்தானும்
காலத்தின் கண்களில்
கண்ணீராய் வழிய
வேண்டாம்.
தீர்ப்பளித்து விட்டு
திருடனை தேடாதீர்கள்
தயவு செய்து
தீர்ப்பை திருத்துங்கள்
மண்ணகம் வாழ
வேண்டும்.

சு.துஷ்யவதனி,வவுனியா.

---



### நிம்மதி

காலத்தின்
கரையில் நின்று
வசந்தத்தைத்
தேடுகின்றேன்
காண்பதெல்லாம்
தென்றலாக
கண்களுக்குத்
தெரியவில்லை.
***
வீசுகின்ற தென்ற
லிலே
அசைகின்ற
மரங்களாய்
உள்ளமது
அசைகின்றது
நிம்மதியைத் தேடி
***
வளர்ந்து விட்ட
ஆலமரம்
விழுதுகள் இன்றி
தள்ளாடும் நிலையில்
தன் நிலை இழந்து
தவிக்கின்றது.
***
இதயம் அழுகின்றது
இரத்தக் கண்ணீராக
நடுவானில்
நட்சத்திரங்கள்
வான தேவதையை
அலங்கரிக்க
இன்னும் ஓர் உயிர்
தனிமையிலே
கண்ணீர்த்
துளிகளால்
வீதியை அலங்கரிக்க
உன்னிடம்
கேட்கின்றேன்
கொடுத்திடுவாயா?


ஏ.ஆனந்தராஜா-
மாலைதீவு.

---


### பேனா நண்பர்கள்



பெயர்:
ஆர்.றொலிஸ்கான்,
வயது: 18
முகவரி:
நொக்ஸ் வீதி,
மூதூர்-06.
பொழுது போக்கு:
பத்திரிகை,
பேனாநட்பு.



பெயர்: த.தயா
வயது: 20
முகவரி:
26, சிதம்பரபுரம்,
வவுனியா.
பொழுது போக்கு:
தொலைக்காட்சி,
கிரிக்கெட்.



பெயர்:
எம்.என்.எம்.ஹஸன்
வயது: 23
முகவரி:
மலேகொலணி,
அம்பாலந்தோட்டை,
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.

---




## முயற்சி வெற்றியின் பயிற்சி

**வா**ழ்க்கையை வளமுடன் வாழ்வதற்கு கட்டாயம் முயற்சி வேண்டும். முயற்சி வெற்றிக்கு வித்திடும் பயிற்சி. நம்முடைய முயற்சிக்கு ஆரம்பத்தில் மற்றவர்கள் வெறுக்கவும், மறுக்கவும் செய்வார்கள். துணையாகவும், இணையாகவும் வரத் தயங்குவார்கள்.

இதைக்கண்டு நம்முடைய முயற்சியை விட்டுவிடக் கூடாது. நம் உடலோடு பிறந்தது முயற்சி. நாம் தனியாக நின்று முயற்சி செய்து வெற்றி பெற முடியும். நம்மிடம் அளவிட முடியாத ஆற்றல் இருக்கிறது. அதனைப் பயன்படுத்தினால் வெற்றி நமக்கேதான்!

சிவாஜி தன்னுடைய முயற்சியினால் சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தினார். நெப்போலியன் தன் முயறசியினால் ஐரோப்பா முழுவதையும் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார். காந்திஜி முயற்சியினால் சுதந்திரத்தைப் பெற்றார்.

"முயற்சியுடையவர் விலக மாட்டார். விலகுகிறவர் முயற்சி செய்ய மாட்டார்" என்று எமர்சன் கூறுகிறார். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்று முதுமொழியும் கூறுகிறது. இந்தப் பரந்த பூமியில் எவருமே முட்டாள் இல்லை.

ஒவ்வொருவருக்கும் தனித்தன்மை இருக்கிறது. அந்தத் தனித்தன்மையைக் கண்டுபிடித்து அதற்கு ஏற்ப முயற்சி செய்தால் முன்னேற்றம் காணமுடியும்.

நேற்றுவரை செய்ய இயலாது என்ற நிலைபெற்று இருந்த ஒன்று இன்றைக்கு சர்வசாதாரணமாகி இருக்கிறது. எதற்கும் வரம்பு காட்டவே முடியாது. காரணம் கடின முயற்சிக்குப் பிறகு எதற்கும் விடை காண முடியும்!

இளமையிலேயே அமெரிக்க நாட்டுத் தலைவராக வர வேண்டும், அடிமைத் தளையை அகற்ற வேண்டும் என்ற உணர்வோடு முயற்சி செய்தார் லிங்கன். ஆனாலும் வறுமை அவரை வாட்டியது. கூலி வேலைக்குச் சென்றார்.

படகு ஓட்டினார். எடுபிடியாக இருந்தார். எங்கே இருந்தாலும், என்ன வேலையைச் செய்தாலும் முயற்சியை மட்டும் விடவே இல்லை; சட்டம் படித்தார். வாதாடுவதில் பயிற்சி பெற்று வழக்கறிஞராக மாறினார்.

இப்படி ஒவ்வொன்றாக முயற்சி செய்து கொண்டே இருந்தார். அதன் பயன் அமெரிக்கக் குடியரசு தலைவராக உயர்ந்தார். தொடர்ந்த முயற்சியே அவரை ஜனாதிபதியாக்கியது. நாமும் இப்படி முயலலாம் அல்லவா!

---

## இந்தவாரம் உங்கள் பலன்

10.02.2002தொடங்கி 16.02.2002வரை

### சோதிட மாமணி தில்லை

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்,) செய்தொழிலில் சிறு பிரச்சனையுண்டாகும். பொருள்வரவு, காரியானுகூலம் தடைப்படும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த நன்மைகள் வந்தடையும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி நிலை பெறுவர். விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**இடபம்:**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) தொழில் நிலை சிறப்பும், காரியானுகூலமும், பொருள் வரவும் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மைதரும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 05.

**மிதுனம்:**
(மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்,) தொழிலில் முன்னேற்றம், பொருள் சிறப்பு, பெரியோர் உதவி ஏற்படும். உத்தியோகத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் மறையும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள், மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 07.

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் சிறப்பு, பெரியோர் பகை, காரியங்களில் அனுகூலம், வெளியிடவாழ்க்கை உண்டாகும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புக்களுக்கு இடம்தரும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

**சிங்கம்:**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்,) தொழிலில் கஷ்டங்கள் தோன்றும். பொருள்வரவு தாமதமாகும். பெரியோர்களின் உதவியுண்டாகும். உத்தியோகத்தில் மாற்றங்களை சிலர் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 02.

**கன்னி:**
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை,) தொழில் சிறப்பு பொருள்வரவு, காரியானுகூலம் ஏற்படும். வெளியிட பிரயாணங்களை தவிர்த்துக் கொள்ளவும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் உண்டு. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 01.

**துலாம்:**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் கஷ்டங்கள் தீரும். பணவரவு, தேக ஆரோக்கியம் சிறந்து விளங்கும். உத்தியோக ரீதியாக இருந்து வந்த தடைகள் விலகும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும் விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்டநாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 04.

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் நிலை உயர்ச்சியும், பொருள்வரவும் உண்டாகும். எதிர்பார்த்த காரியங்களில் வார இறுதியில் தடையுண்டு. உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்வர். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### கிரக நிலை

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், புதன், |
| கும்பம் | - வெள்ளி. |
| மீனம் | - செவ்வாய் |
| இடபம் | - சனி. |
| மிதுனம் | - வியாழன், இராகு |
| தனு | - கேது. |

13.02.2002 இல் கும்ப சூரியன். சந்திரன் மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**தனு:**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்,) தொழில் நிலை முன்னேற்றம், காரியானுகூலம், பெரியோர் உதவி, பொருள் சிறப்புண்டாகும். உத்தியோக ரீதியாக மாற்றங்களை சிலர் எதிர்நோக்குவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள், குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 03.

**மகரம்:**
(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை,) தொழிலில் உயர்வும், காரியானுகூலம், கௌரவம் ஏற்படும். பணவரவு சுமாராக அமையும். உத்தியோகத்தில் இருந்து வந்த தடைகள் விலகும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

**கும்பம்:**
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்,) மனக்குறை நீங்கும். தொழிலில் உயர்ச்சியுண்டாகும். பெரியோர் உதவியுண்டாகும். உத்தியோகத்தில் சிலர் தடைகளை எதிர்கொள்வர். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.


**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி) முயற்சிக்களில் வெற்றியும், பெரியோர் உதவி பணவரவும் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் எதிலும் விழிப்புடன் செயற்படுவது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

# லேடீஸ் ஸ்பெஷல்

சத்யா

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## குழந்தைகள் மனம் மாற...



குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று. அவர்களை பக்குவமாக வளர்ப்பதே தாய்மார்களின் கடமை.

மூன்று வயதில் உங்கள் குழந்தைக்கு உங்களது அணைப்பு தேவைப்படுகிறது. அதே குழந்தைக்கு பத்து, பதினைந்து வயதாகும்போது அது சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும் என்று நினைக்கிறது.

இதை நீங்கள் புரிந்துக் கொண்டால் உங்கள் குழந்தைகள் உங்களை மிகவும் விரும்புவார்கள்.

ஒரு நாளின் சிறு பொழுதையாவது உங்கள் குழந்தையோடு செலவிடுங்கள். இல்லை என்றால் நம்மீது அம்மா-அப்பாவிற்கு அக்கறை இல்லை என்று பிள்ளைகள் எண்ணி விடுவார்கள்.

மேலும் உங்கள் குழந்தைகளின் சிறு சிறு செயல்களைகூட மனம் திறந்து பாராட்டுங்கள் புகழ்ச்சிக்கு மயங்காத குழந்தைகள் ஏதும் இல்லை.

ஒருபோதும் மற்ற குழந்தைகளோடு ஒப்பிட்டு உங்கள் பிள்ளைகளை திட்டாதீர்கள். இது அவர்களிடம் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி விடும்.

அன்பின் ஆற்றலுக்கு இணையாக உலகில் எதையும் குறிப்பிட முடியாது. அன்பால் எல்லாவற்றையும் சாதிக்கலாம். எனவே உங்கள் குழந்தைகள் தவறு செய்தல் அன்பாக கண்டியுங்கள், அன்பாக எடுத்துச் சொல்லுங்கள்.

வயது வந்த பெண்கள்-வீட்டில் அன்பு பாசம் குறையும் போது அதை வெளியில் தேட ஆரம்பிக்கிறார்கள். இதன் காரணமாக அவர்கள் தங்களுடன் நெருங்கி பழகும் வாலிபர்களுடன் காதல் கொள்கிறார்கள். வீட்டை விட்டு அவர்களுடன் ஓடிப்போக துணிகிறார்கள். வீட்டில் பாசம் அதிகமாக இருக்கும்போது பெரிய குழந்தைகளுக்கு இந்த எண்ணங்கள் அதிகமாக இருப்பதில்லை.

குழந்தைகள் பாசம் காட்டுபவர்களுக்காக எதையும் செய்ய தயாராக இருக்கிறார்கள்.

உங்களது அன்பான வார்த்தைகள் தான் உங்கள் குழந்தைகளிடம் நம்பிக்கையை விதைக்கும். அது அவர்களை சாதனையாளர்களாக மாற்றும்.

## செய்து பாருங்கள்

★ வேப்பம் பூவை ரசம் வைத்துச் சாப்பிடுவது மிகவும் நல்லது. அவ்வாறு சாப்பிட்டால் உடலில் ஏற்படும் அதிகப்படியான பித்தம் குறைகிறது. உடலில் உள்ள ஒரு சில கிருமிகளும் அழிந்துவிடும்.

★ குழந்தைகள் எதையாவது விழுங்கிவிட்டு அவஸ்தைப்படுவது இயற்கை. இதற்காகக் கவலைப்பட வேண்டாம். சர்க்கரை வள்ளிக்கிழங்கை வேகவைத்து சாப்பிடக் கொடுங்கள். முட்டை கோசைச் சமைத்துச் சாப்பிடக் கொடுங்கள். விழுங்கிய பொருட்கள் எதுவானாலும் மலத்தோடு வந்து விடும்.

★ அதிரசம் செய்யும் போது மாவுடன் சிறிது பேரீச்சம் பழத்தையும் சேர்த்தால் மிகவும் ருசியாக இருக்கும்.

★ இட்லிக்கு மாவு அரைக்கும் போது நான்கு அல்லது ஐந்து ஆமணக்கம் பருப்புகளை போடுங்கள். இட்லிப் போல் மிருதுவாக இருக்கும். உடம்புக்கும் சிறந்தது.

★ பாகற்காயை நறுக்கி அரிசி களைந்த நீரில் ஊற வைத்து, பிறகு சமைத்தால் கசக்காது.

★ வாழைக்காய்களை நீரிலேயே போட்டு வைத்தால் நாலைந்து நாட்களுக்கு பழுக்காமல் இருக்கும்.


## செல்வாஸின் 7

### சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** F

பெயர்:.......................

முகவரி:.......................

.......................

தொழில்:.......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16-02-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சல்வார்?
## குருணாகலை வாசகிக்கு அதிஷ்டம்!

**இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்**

செல்வி பாத்திமா,
தல்கஸ்பிடிய, குருணாகலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.






நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

"வேண்டாம்பா..." என்று அனிதா சொல்ல, அவள் பின்னால்...

"தொர்சாமி... போறா பார்றா சீமாட்டி.. ப்ளெசர் காரை வுட்டுட்டு, நம்ம ஆட்டோல வருது! என்னா சனங்கப்பா..." என்று அலுத்துக்கொண்டார் ஆட்டோக்காரர்.

அது திருவல்லிக்கேணி என்று அனிதாவுக்குத் தெரியும். ஒரு தடவை இங்கே வந்திருக்கிறாள்... சீதா ராமனின் அறைக்கு! இந்த வழியாகத்தான் போனதாக ஞாபகம். இப்போது அங்கே போய் பார்க்கலாமே என்றே தோன்றியது.

இந்தி சினிமா விட்டு, கண்களில் கலக்கத்துடன் முந்நூறு பேர் வெளியே உதிர்ந்து கொண்டிருந்தார்கள். பர்தா பெண்கள் அதிகம் இருந்தார்கள். பச்சை பெயிண்ட் அடித்த மசூதி தொழுகைக்கு கூப்பிட்டது. புறாக்கள் பறந்தன. எத்தனை வண்டிகள்! கார்களும் பஸ்களும் ஆட்டோக்களும் எந்த நியதிக்கும் கட்டுப்படாமல், கிடைத்த இடத்தில் புகுந்து முன்னேறிக் கொண்டிருக்க... அவளுக்கு ஒரு அச்சபீஸ் ஞாபகம் இருந்தது. அதன் எதிரில் இருந்த சந்தில் மெஸ் இருந்தது. அதனருகில் புறாக் கூண்டுகளாகப் பிரம்மச்சாரிகளுக்கென்றே கட்டப்பட்ட நிறைய வீடுகள்.

சீதாராமனின் ஜிலுஜிலு கைக்கிள் மாடிக்கு வந்திருந்தது. சீதாராமன், பாங்க் பரீட்சைக்காக மும்முரமாகப் படித்துக் கொண்டு இருந்தான். அனிதாவைப் பார்த்ததும் முதலில் நம்ப முடியாமல்...

"அனி, நீயா?" என்றான்.

"ஆமாம் சீதா..."

"மாப்பிள்ளை வந்திருக்காரா?"

"இல்லை..." என்றாள் அனிதா.

"நீ மாத்திரம் கார்ல வந்திருக்கியா? நீங்க ரெண்டு பேரும் வெளிநாடு போயிருக்கிறதான்னா சொன்னா! வா.. வா.. உக்காரு..."

ஸ்டூலைப் போட்டுச் செய்தித்தாள்களை ஒழுங்கு படுத்துகையில் சீதாவின் கைகள் நடுங்கின.

அறை சுத்தமாக இருந்தது. அலமாரிப் பலகைகளுக்கு நியூஸ் பேப்பர் படுக்கை போட்டு, புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி இருந்தான். அதன் மேல் சுவரில் சங்கராச்சாரியார் படம், மூகாம்பிகை படம், இவற்றுடன் ஒரே ஒரு சலுகையாக திவ்யபாரதி படம் இருந்தது. ரேடியோ மேல், அனிதாவும் வைரவனும் கல்யாணத்தில் எடுத்துக் கொண்ட போட்டோ. ஓரத்தில் சீதா நின்று கொண்டிருந்தான்.

"என்ன விஷயம்... கா்ல வந்தியா?"-சீதா கேட்டான்.

"ஆட்டோவில் வந்தேன்..."

"ஆட்டோலயா? உன் புருஷன் வீட்டுல பத்து கார் இருக்கு!"

"எதுவும் பிடிக்கலை சீதா" என்றாள் அனிதா.

"கல்யாணமான பத்தே நாள்லயா? உங்களுக்கு எப்ப கல்யாணம் ஆச்சு?"

"என்னவோ லோன்லியா இருந்தது."

"உங்க ஆத்துல எல்லாரும் காஞ்சிபுரம் போயிருக்கா. நானும் போறதா இருந்தது. ஜிம்பு போயிருக்கான். அவனுக்கு உங்க கம்பெனில வேலையாய்டுத்து தெரியுமோ?"

"தெரியும் சீதா.. உனக்கும் வேலை கொடுக்கலையா?"

"கொடுக்கறதா சொன்னார் வைரவன் சார்ஷ. நான் தான் உடனடியாக எதுவும் பதில் சொல்லலை! இப்போ இருக்கிற கனரா பாங்க்லேயே கொஞ்ச நாள் இருந்து பார்த்துட்டு, பாங்க் பரிட்சை பாஸ் பண்ணலைன்னா அவர் ஆபீஸ்ல சேர்ந்துரலாம்னு! என்ன சாப்பிடறே?"

"கொஞ்சம் தண்ணி கொடுத்தா போதும்.."

சீதாராமன், அனிதாவை நேராகப் பார்த்து "என்னவோ மனசில வெச்சுண்டு இருக்கே... சொல்லு அனி..."

அனிதாவின் கண்களில் நீர் மளமளவென்று உதிர, சீதாவுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. அவளைத் தொடத் தயங்கினான்.

"என்ன அனிதா... எதுக்காக அழறே? உலகத்திலேயே சந்தோஷமான பொண்ணு நீ தானே இருக்கணும்? உனக்கு என்ன குறை இந்தக் கல்யாணத்தில? என்ன.. மாப்பிள்ளை நம்ம ஜாதி இல்லைங்கிரதைத் தவிர வேறு என்ன குறை?"

"குறையே இல்லை சீதா... அதான் குறை..." என்றாள் அனிதா.

"நீ என்னவோ பிலாசபி பேசறே! நீ இங்க வந்திருக்கிறது உன் புருஷன் வீட்டுக்குத் தெரியுமோல்லியோ?"- சீதா கேட்க,

"தெரியாது..." என்றாள் அனிதா.

"போன் பண்ணி, கார் அனுப்பச் சொல்லவா?"

"இல்லை சீதா... வேண்டாம்!"

"அனிதா, நீ ஒரு மாதிரி வித்தியாசமா நடந்துக்கறே.. உனக்கு உடம்பு சரியில்லையா? தலைவலி ஏதாவதா... ஏன் ஒரு மாதிரி சோகையா இருக்கே?"

"தெரியலை சீதா... நான் சந்தோஷமாவே இல்லை..."

"பீச்சுக்குப் போகலாம்... வரயா?"-சீதா கேட்க,

"சரி..." என்றாள் அனிதா.

"சரி... கொஞ்சம் இரு. மல்லிகானு ஒரு பொண்ணு என்னைத் தேடிண்டு வருவா. இண்டர்நேஷனல் பாங்க்கிங் பத்தி நோட்ஸ் கொடுக்க வருவா. டபிள் எண்ட்ரி சிஸ்டத்தைப் பத்தி ஒரு அருமையான புஸ்தகம் வெச்சிருக்கா..." என்றான்.

சீதா, அருகே இருந்த ஸ்டவ்வில் டீ போட்டுக் கொடுத்தான்.

சுத்தமான கப்பில் டீ அருமையாக இருந்தது. மசாலா போட்ட முந்திரிப் பருப்பு பாக்கெட்டைத் திறந்து ஒரு மெலமின் தட்டில் வைத்து, "இதான் என்னால் கொடுக்க முடியும்.. சபரி மாதிரி!" என்றான் சீதா.

அனிதா அதை முழுவதும் சாப்பிட்டாள்.

"உனக்கு ரொம்பப் பசி போல இருக்கு. உனக்கு அதான் பிராப்ளம். வைரவன் வீட்டுச் சமையல் சரிப்படலையா? மெஸ்ல சாப்பிடலாம் வரயா... வத்தக்குழம்பும் வறுவலுமா?"

"அந்த வீட்டை விட்டு வெளியே வந்தப்புறம்தான் பசிக்கிறது, என்றாள் அனிதா.

அப்போது மல்லிகா என்ற அந்தப் பெண் உள்ளே வந்து, "சீதா.." என்று செல்லமாக அழைத்தாள். பஞ்சாபி ட்ரஸ் போட்டுக்கொண்டு, மெல்லிய உதடுகளுடன், கழுத்தில் நகை ஏதும் இல்லாமல் யுவதி.

"அனிதா... இதான் மல்லிகா என் கொலீக்! பாங்க்ல ரெண்டு பேரும் பரிட்சை எழுதறோம்...."-சீதா அறிமுகப்படுத்தினான்.

"நீங்க... தி.:.பேமஸ் அனிதா தானே?" என்று அனிதாவிடம் கேட்டாள் மல்லிகா.

"ஆமாம்..."

"சீ உங்களைப்பத்தி நிறைய சொல்லியிருக்காரு. உங்களைக் கல்யாணம் பண்ணிக்கற ஆர்வத்தில்தான் பாங்க் பரீட்சை எழுதத் தீர்மானிச்சதாகூட..."

"மல்ஸ் சும்மாரு..." என்று அதட்டினான் சீதா.

"நீங்கதான் அனிதா அவசரப்பட்டுட்டிங்க..." என்ற மல்லிகா.

"சீதா... அது என்ன முந்திரிப் பருப்பு? எனக்குத் தெரியாம ஒளிச்சு வெச்சிருக்கே? திஸ் இஸ் டூ பேட்!" என்றாள்.

அவர்கள் இருவரும் பாங்க்கிங் பரிட்சை பற்றிப் பேசிக் கொண்டிருக்க, அனிதா ஆர்வத்துடன் பார்த்தாள். ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் சரீர நோக்கமில்லாத மற்றொரு சிநேகிதமும் இருக்க முடியும் என்பது சந்தோஷமாக இருந்தது.

"மல்லிக்கு ரொம்ப ஆசை. ஒரு நாள் ஐ.ஏ.எஸ். பரிட்சை எழுதணும்பா... ஒரு நாள் அமெரிக்கா போகணும்பா... ஒரு நாள்..."

"சீ மாதிரி ஒரு தயிர்வடையைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு மூணு பொண் பெத்துக்கணும்னுகூட ஆசைப்படுவேன். பேர்கூட வெச்சுட்டேன்... ஸ்வேதா, ப்ரீதா, கீதா!" என்றாள் மல்லிகா.

"அனிதா... உங்களுக்குக் கல்யாணம் ஆகி எத்தனை மாசமாச்சு?"-மல்லிகா கேட்க.

"பதினஞ்சு நாள்..." என்றாள் அனிதா.

[அனிதா வருவாள்...]

# அடா என்ன அழகு!

ஒரு காட்டில் கம்பீரமான உடலமைப்பு கொண்ட கலைமான் ஒன்று இருந்தது. அது மிகவும் உல்லாசமாக அந்தக்காட்டில் சுற்றித் திரிந்தது.

ஒரு நாள்.

வயிறு நிறைய இலைதழைகளைத் தின்று விட்டு தண்ணீர் குடிக்க ஒரு நீரோடைக்கு வந்தது. நீர் குடிக்கும் போது, தண்ணீரில் பிரதிபலித்த தன் உருவத்தை ஒரு முறை பார்த்தது.

கலைமான் தன் உருவத்தை தண்ணீரில் பார்ப்பது இது முதன் முறை அல்ல. தினமும் சாப்பிட்டு விட்டு நீர் குடிக்கும் போதெல்லாம் பார்ப்பது தான். ஆனால் இன்று ஏனோ தன் உடலமைப்பை சற்று கவனம் எடுத்துப் பார்த்தது.

'வாவ்..! நான் எவ்ளோ அழகு! கொம்புகள் எனது கம்பீரத்தையும், ஆண்மையையும் வெளிப்படுத்துவதாக இருக்கின்றன. கண்களில் கூட காந்தம் போன்ற ஒரு ஈர்ப்பு சக்தி இருப்பதும் தெரிகிறது. ஆனால் இந்த நான்கு கால்களும், என் உடல்வாகுவிற்குப் பொருத்தமான கால்களே அல்ல. இப்படியா தட்டைக்குச்சி போல் ஒல்லியாக இருப்பது? சதைப் பிடிப்போடு சற்று பருமனாக இருந்தால் எத்தனை அழகாகவும், உடலிற்குப் பொருந்தக் கூடியதாகவும் இருக்கும். ச்சே... என்கால்களைப் பார்க்க எனக்கே பிடிக்கவில்லை. ஒரே அருவருப்பாக இருக்கிறது,' என்று குறைபட்டுக் கொண்டது கலைமான்.

அப்போது,

அதன்பின்னே மெலிதாக ஏதோ நடந்து வரும் ஓசையைக் கேட்கவே, கலைமான் திரும்பிப் பார்த்தது.

அங்கே..

கலைமானின் மேல் பாய்வதற்குத் தயாராக, வாயைத் திறந்தபடி ஒரு சிங்கம் நின்று கொண்டிருந்தது.

அவ்வளவுதான். அடுத்த கணம் கலைமான் ஒரு துள்ளுத் துள்ளி, வில்லில் இருந்து புறப்பட்ட அம்புபோல் பாய்ந்து ஓடத் துவங்கியது.

அதன்கால்கள் அசுர வேகத்தில் இயங்க, மான் காட்டை நோக்கிப் பறந்தது.

அதேசமயம், அகோரப்பசியுடன் இருந்த அந்த சிங்கம் கலைமானைப் பிடித்தே ஆக வேண்டும் என்ற நோக்கத்துடன் அதை விரட்டியது.

மானின் அசுர வேகத்திற்கு சிங்கமும் ஈடு கொடுத்தது.

சிறிது நேரத்தில் கலைமான் காட்டிற்குள் நுழைய சிங்கமும் நுழைந்தது.

அடர்த்தியான மரங்களின் இடையே புகுந்து புகுந்து கலைமான் ஓடியது. ஓடிக்கொண்டே ஒரு வினாடி பின்னால் திரும்பிப் பார்த்தது.

அப்போது,

கலைமான் ஒரு மரத்தின் மீது மோத, அடர்தியாக இருந்த மரத்தின் கிளைகளில், அதன் கொம்புகள் மாட்டின.

'இதென்னடா தொல்லை என்று முனகிய கலைமான். தனது கொம்புகளை, மரத்தின் கிளைகளில் இருந்து விடுவிக்க முயன்றது.

ஆனால் எவ்வளவு முயன்றும் அதனால் மரத்தில் சிக்கிக் கொண்ட தன் கொம்புகளை உருவி எடுக்க முடியவில்லை.

அது கடைசி கட்ட போராட்டத்தில் இருந்தபோது

சிங்கம் அதன்மீது பாய்ந்தது.

கலைமான் மரணிக்கும் தருவாயில் நினைத்தது.

'எத்தனை சுயநலக்காரன் நான். எனது கால்களை எத்தனை மோசமாய் நானே நினைத்து விட்டேன். என்னை சிங்கத்திடம் இருந்து இவ்வளவு தூரம் காப்பாற்றியது இந்தக் கால்கள் அல்லவா. இதைப் போய் தட்டைக் குச்சி அப்படி, இப்படி என்று வர்ணித்து விட்டேனே. பாழாய்ப் போன இந்தக் கொம்புகளை எத்தனை அழகு என்று வர்ணித்தேன். ஆனால் இந்தக் கொம்புகள் தானே இப்பொழுது எனக்கு மரணத்தைத் தேடித் தந்தது. இந்தக் கொம்புகள் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், சிங்கத்திடம் இருந்து என் கால்கள் என்னை நிச்சயம் காப்பாற்றியிருக்கும்,' என்று நினைத்தபோது அதன் உயிர் பிரிந்தது.

**நாம் அழகாய் இல்லையே என்றெல்லாம் நினைத்து பெரிதாய்க கவலைப்படவேண்டாம். படிப்பிலும் மற்றும் விளையாட்டிலும் உங்கள் திறமையைக் காட்டுங்கள். மற்றவர்கள் அதன்பின் உங்களை புகழ ஆரம்பித்து விடுவார்கள்.**




## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **10.02.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **433**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 431

பரிசுக்குரியவர்:
என். எம். அஸ்றா,
முதலைப்பாளி பள்ளிவாசல்துறை, புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சு.சுஜீதரன், அம்மன் கோவில் வீதி, பண்டாரிகுளம், வவுனியா. | பாத்திமா சஸ்னா செரீன் நு.:.மான், பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி, கண்டி. |
| ஹ. சொஹைல் ஸகீட், ஜமுல் அஸ்ஸார் மத்திய கல்லூரி, உடதலவின்ன. | மாட்டினா நியோமி பர்னாந்து, செட்டி வீதி, கொழும்பு-11. |
| எஸ். கவிக்குமார், பாசிக்குடா வீதி, கல்குடா. | எஸ்.மோகனபிரியா, ஹொலி ரொசரி த.ம.வி., பொகவந்தலாவ. |
| ரவிச்சந்திரன் திசாந்தன், பாத்திமா வீதி, நீர்கொழும்பு. | பாத்திமா ஹன்னாஹ், நூரானியா மு.ம.வித்., உயன்வத்த, தெவணகல, மாவனல்லை. |
| சிவராஜா ஜனனன், இந்து மகா வித்தியாலயம், திருகோணமலை. | எம். எ.:.ப். பாத்திமா ரிப்னா, மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை. |






1-44 வரையான புள்ளிகளை இணைத்து மறைந்திருப்பதைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

## இடம் ஒரு தகவல்


போர்னியோ சாராவாக்கில் உள்ள 45,000 சதுரமைல் பரப்பளவு நிலம் புரூனே நாட்டின் சுல்தானால் ஜேம்ஸ் புரூக்கிக்கிற்கு நன்கொடையாக வழங்கப் பட்டது. அவரது வம்சாவழியினர் இங்கிலாந்திற்கு அந்த இடத்தை 1946ல் தான்கொடுத்தார்கள்.



இங்கிலாந்து அரசர் இரண்டாம் சார்லஸ், பிரகான்சாவின் இளவரசி காத்தரீனை மணந்து கொண்டதால் பம்பாய் (மும்பை) சீதனமாகக் கிடைத்தது. அவர் அதை கிழக்கிந்திய கம்பெனிக்கு வருடத்திற்கு 150 ரூபாய்க்கு குத்தகைக்கு விட்டார்.



பெல்ஜியம் காங்கோ நாடு என்பது 9 லட்சத்து 5 ஆயிரம் மைல்கள் அடங்கிய ஆப்பிரிக்க பகுதியாகும். இது பெல்ஜியம் நாட்டின் ஒரு பகுதியாக என்றும் இருந்ததில்லை. ராஜா இரண்டாம் லியோபோல்டின் சொந்தப் பகுதியாகவே இருந்தது. இப்போது இது ஒரு தனி நாடாக விளங்குகிறது.




## விடுகதைகளும் விடைகளும்

1. குரல் கொடுத்து தகவல் தருவான் அவன் யார்?
2. காலால் மிதித்தால் காற்றாய் உருளும் அது என்ன?
3. நீலத் தோட்டத்தில் மஞ்சள் பூ அது என்ன?
4. உடைத்துப் பார்த்தேன் ஒளியுடன் வெளி வந்தான் அவன் யார்?
5. தண்ணீருக்குள் இடம் பிடிப்பான் தடுக்கி விழவும் வைப்பான் அவன் யார்?
6. உப்பை விழுங்கியவன் உறங்காமல் ஓடித்திரிகிறான் அவன் யார்?
7. சங்கீதமும் பாடுவான் சலவைக்கும் உதவுவான் அவன் யார்?
8. ஐவருக்கும் ஒரே வீடு ஆனால் அவர்கள் பாண்டவர்களல்ல. அவர்கள் யார்?
9. பச்சையனுக்கு வயதானால் சிவப்பான் அவன் யார்?
10. துள்ளி வந்தவன் துவண்டு போகிறான் அவன் யார்?
11. இரட்டைக் குழல் துப்பாக்கிதான் என்றாலும் வெடிக்காது. அது என்ன?
12. முள்ளுக்கட்டை தாண்டினால் இனிப்புக்கூடு அது என்ன?

### விடைகள்

1. டெலிபோன் 2. சைக்கிள்
3. வானம்-நிலா
4. தீக்குச்சி-நெருப்பு
5. பாசி 6. கடிகாரம்
7. சங்கு
8. உள்ளங்கை விரல்கள்
9. மிளகாய் 10. தவளை
11. மூக்கு 12. பலாப்பழம்


தொகுப்பு: சத்யா

# மந்திர வார்த்தை

எதிர்பார்ப்புகளுடன் மாற்றமடைந்து கொண்டு வரும் தற்போதைய நாட்டின் நிலவரங்களை ஊடகத்துறை தகவலின் பிரகாரம் அறிந்து கொண்ட எனக்குள் கடந்தகால நிகழ்வுகளும் இவ்வாறான தோற்றப்பாடுகளையே கொண்டதாகக் காணப்பட்டமையினால் பெரியளவான எதிர்பார்ப்பென்று ஏதுமில்லை. இனிமையான அந்த நாளின் வரவிற்காக எல்லோரையும் போலவே மனது ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தது. ஆனால், ஊரின் நிலைமைகள் என்பது...

யுத்த நிறுத்தம், வன்னிக்கான பாதை திறப்பு, அத்தியாவசியப் பொருட்களின் தடை நீக்கம் சகலதும் நல்ல முன்னேற்ற நடவடிக்கை என்ற பாராட்டை பெற்றுக்கொண்டாலும், ஊரின் நிலைமைகள் என்பது அச்ச உணர்வுகளைத் தோற்றுவிக்கக்கூடியதாகவே காணப்பட்டுக்கொண்டிருந்தது. ஒரு பக்கம் மூதூர் இறங்கு துறை வரைக்கும் விடுதலை வீரர்கள் வந்து போன தகவல் கிடைக்கப்பெற நகரிலும், ஊரின் முக்கிய பல இடங்களிலும் வழமையான இராணுவக்கெடுபிடிகளும் தீவிர பரிசோதனைகளும்.

நீண்ட நாட்களாகவே இழுபறிபட்டுக் கொண்டிருந்த அந்த விசயத்தை சம்பந்தப்பட்டவருடன் பேசி முடித்துக்கொள்வதற்காக பெரிய கடை மனையா வெளிப் பகுதிக்கு புறப்பட்ட நான் வழக்கமாக முதலில் அடையாள அட்டையை மாத்திரம் எடுத்துக் கொண்டேன்.



மின்சார நிலைய வீதியினூடாக தபாற்கந்தோர் சந்திக்கு வரும் போது தூரத்தில் சிஹாரா தியேட்டர் பக்கமாக இருந்து அவன் வருவதைக்கண்டு ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டேன். ஒரு மாதம் அளவிருக்கும் அவனைக் கண்டு.

"என்னடாப்பா எலெக்சனோட போன ஆள்? சமாதானம் எடுத்துவரப் போனீரோ...?

"உனக்கு நக்கலைவிட்டால் வேறு கதை கிடையாது. ஊர் பக்கமாகப் போய் இருந்தன். இலகுவாக போய்வரக்கூடியதாக இருந்ததால சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டன்." மெல்லிதாகவே சிரித்துக்கொண்டான்.

"மூதூர் எப்படி கிடக்கு..?"

"இப்போதைக்கு நல்லபடியா எல்லாம் இருக்கு. துப்பாக்கி சத்தம் மாத்திரம் இல்லை மற்றப்படி ஒரு அச்சம் கலந்த அமைதிதான்."

இருவருமே ஒரே பக்கமாகப் போக வேண்டியிருந்தமையினால் மெதுவாகவே சைக்கிள்களை மிதித்துக்கொண்டு பல கதைகளையும் பேசிக்கொண்டு மீண்டும் புறப்பட்டுக்கொண்டிருக்க எதிரே,

நீதிமன்ற வீதி நாற்சந்தியில் எங்கும் பரவலாகவே பொலிஸார்கள்.

"அங்க சென்றிகளையெல்லாம் எடுத்துப் போட்டாங்க இங்கே இன்னுமா..?"

"நாமளும் மெல்ல மெல்லத்தான் நிலைமையை ஏத்துக்க வேண்டும்."

"மச்சான் ஒரு முக்கியமான விசயமடா...!

"சந்திக்கு முன்னே சற்று தூரத்தில் பைசிக்களைவிட்டு இறங்கி அவன் சொன்னான்.

"என்ன..?"

"அடையாள அட்டையைக் கொண்டு வரல." அவன் சாதாரணமாகவே சொன்னாலும் எனக்குள் தூக்கிவாரிப்போட்டது போல.

எதிரே அதிகமான பொலிஸார்கள் எம்மை அவதானித்துவிட்டார்கள். வேறு குறுக்குப் பாதைகளும் இல்லை. தவிர அடையாள அட்டை வைத்திருந்த எனக்குள் ஏற்பட்ட பயம். கடந்த கால அனுபவங்கள் கற்றுக் கொடுத்த பாடம்.

இப்போ பொலிஸாரும்கூட வந்திருப்பதை கண்டிருப்பார்கள், நண்பன் இல்லை என்றும் பட்டென்று சொல்லிவிட முடியாது. தடுமாறிக்கொண்டிருக்க அவன் சர்வ சாதாரணமாகவே அவர்களை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தான்.

"கேட்டால் என்னடா சொல்லுவே..?"

"சமாளித்துக் கொள்ள வேண்டியதுதான்."

மனச்சுமைகளுடன் நடப்பது நடக்கட்டும் என்ற தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மௌனமாகவே சந்தியை அடைந்தோம். இருவரையும் வெவ்வேறு பொலிஸ்காரர்கள் பரிசோதிக்கத் தொடங்கினர். எனது அடையாள அட்டையை எடுத்துக்கொடுத்ததும் நீண்டநேரமாகவே உற்றுப் பார்த்து, என்னையும் உற்றது நல்லதாகப் படவில்லை. இப்போ மெல்லிய தாடியும் முரட்டுத்தனமான மீசையும் அவருக்கு சரியாக அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

"ஆர் மி ஐடேன்டி கோ...?"

"........"

"தம்ஸட தெருனெத்தே... ஆர் மி ஐடேன்டி எங்கே...?"

மறந்து விட்டேன் சேர்."

"மறந்து... ஐடென்டி நம்பர் கியண்ட..?"

மிகுந்த சிரமத்துடன் முறைப்படி இலக்கங்களை சொல்லிக்கொண்டு வந்த நான் இறுதியில் தடுமாறிப்போனேன். 5 அல்லது 6 என்ற குழப்பம். ஆழமானதொரு நேர்த்தியுடன் மனதைத்திடப்படுத்திக்கொண்டு 06ம் இலக்கத்துடன் முடித்துக்கொள்ள அவர் என்னை நிமிர்ந்து பார்த்த அந்த பார்வையில் நான் நொருங்கிப் போனேன். காலம் கற்றுக் கொடுத்திருந்தது அப்படித்தானே.

"வென மொனஹரி ஐடென்டி..?"

"கொண்டு வரல..."

"ஹரி. மேஹே தன்ன மினிசு கௌருத் இன்னவாத..?"

மறுபக்கத்தில் அவனைப் பரிசோதித்துக் கொண்டிருக்க வேண்டும் நான் அச்சம் காரணமாக இதுவரையிலும் அந்தப்பக்கம் பார்க்கவே இல்லை. அங்கு தெரிந்தவர்கள் யாருமே இல்லையென்ற பதில் என்னை வீதியின் ஓரத்தில் நிற்குமாறு கட்டுப்படுத்தியது. சைக்கிளை உருட்டிக்கொண்டு சந்தியில் அமைக்கப்பட்டிருந்த முனியப்பர் சிறு கோயிலின் அருகே நின்று மெதுவாகவே அவனை அவதானித்தேன். பயத்தினாலும் தடுமாற்றத்தினாலும் நடுங்கிப்போனேன்.

எங்கும் அவ்விடத்தில் அவனைக் காணவில்லை. மிகவும் தேவைப்பட்ட நண்பனாக இருந்தமையினால் என்பாட்டில் விட்டுப் போகவும் மனசு இஸ்டப்படவில்லை. எனது பிரச்சனையை முடித்துக்கொண்டு அதில் தலையிட திட்டம் வகுத்துக்கொள்ள, சுமார் ஒரு மணித்தியால இடைவெளியின் பின்னர் என்னைப்போக அனுமதித்து அவர்கள் சென்றுவிட பரபரப்புடன் வரும் போது சற்றுத் தொலைவில், மாகாண சுகாதார அமைச்சிற்கு செல்வதற்காக அமைக்கப்பட்டிருந்த சிறிய கதவின் அருகாமையில் அவன் எனது வருகைக்காக காத்திருப்பதைக் கண்டு நிம்மதியடைந்தேன்.

"என்னடா லேட்...?"

"எனக்குப் பரவாயில்லை. உன்னை நெனச்சுத்தான் நல்லா பயந்து போனேன்."

"நான் அப்போதே வந்து விட்டேன்."

"ஐடென்டி காட் இல்லாமல்... சிங்களமும் சரியாகத் தெரியாமல்...!"

"மச்சான்! ஒரே வார்த்தையில் சமாளிச்சுப் போட்டன்."

மீண்டும் எனக்குள் பரபரப்பான குழப்பம். எப்படி...!

"அதென்ன மந்திர வார்த்தை..?"

"எதுவும் இல்லை என்றேன். ஊரைக் கேட்டார்கள் சொன்னேன். உடனே சிலர் கூடிக்கொண்டார்கள். பலவிசயங்களைக் கேட்டார்கள் எதுவும் தெரியாது என்றேன். எங்கே வேலை என்றும் கேட்டார்கள். வேலை எதுவும் இல்லை **'அதில்'** இருக்கின்றேன் என்று சொன்னேன் எதுவும் பேசவில்லை மெல்லிதாகவே சிரித்துக்கொண்டு போகச் சொல்லி விட்டார்கள்."

எனக்குள் விடைகாணவே முடியாத ஏகப்பட்ட குழப்பங்கள். ■

**தி.இளையவன்-திருகோணமலை**

# சன்னாசி

மாலை ஆறு மணியிருக்கும். கால் போன போக்கில் நான் நடந்துகொண்டிருக்கிறேன். பொழுது சாய்ந்த நேரமாகையால் சூரியனோடு சங்கமித்த வானமகள் நாணிச் சிவந்திருந்தாள். திடீரென காலநிலையில் ஓர் மாற்றம். கும்மிருட்டு எங்கும் சூழ்ந்து கொள்ள சில்லெனக் குளிர்காற்று வீசத் தொடங்குகிறது. பெரும் மழை வருவதற்கான அறிகுறிதான் அது என்பதை விரைவாக இருப்பிடத்தை நாடிப் பறந்து செல்லும் பறவைகள் உணர்த்திச் சென்றன.

இன்று மழை பெய்தால் எனது நித்திரை என்னவாகும் என்று சற்று யோசிக்கிறேன். நாள் முழுவதும் நடந்து நடந்து கால்கள் இரண்டும் ஒரே வலியாயிருந்தன. அவ்வேளையில் பார்த்து மழையும் மெலிதாய்த் தூற ஆரம்பித்தது. எங்கேயாவது ஒரு தாவாரத்தின் கீழ் ஒதுங்கலாம் என நினைத்து நடையை விரைவாக்கினேன். அந்த ஊர் எனக்குப் புதிதாய் இருந்ததால் அனைத்துமே புதிதாகவே தென்பட்டன. இன்னும் நடந்து பிரயோசனமில்லை என நினைத்து பிரதான வீதியின் அருகில் கம்பீரமாய் நின்றிருந்த அந்த ஆலமரத்தின் கீழ் போய்ச் சாய்ந்து கொள்கிறேன். இப்போது மழை சற்று உரத்துப்பெய்யத் தொடங்கியது. இருப்பினும் ஆலமரம் ஒரு குடைபோல் பரந்து விரிந்திருந்ததால் நான் நனையவில்லை.

வீதியில் சன நடமாட்டம் மழைகாரணமாக முழுவதுமாகக் குறைந்திருந்தது. அத்துடன் 7 மணிக்குப் பின்பு எவரும் வீதியில் நடமாடக் கூடாது என்ற இராணுவ உத்தரவும் அதற்கு மற்றுமொரு காரணமாயிருந்தது. நடந்து வரும்போது மழைத் தூறல்களால் ஈரமான எனது தலையைக் கட்டியிருந்த சாறத்தின் நுனியால் துவட்டிக் கொள்கின்றேன். அப்போது எங்கிருந்தோ விரைவாக ஓடிவந்த நாயொன்று நானிருந்த மரத்தின் கீழ் வந்து தஞ்சம் புகுந்தது. அதன் வழமையான இருப்பிடம் அதுவாகத்தான் இருக்க வேண்டும். பாவம், அதுவும் என்னைப் போல ஒரு 'தெருநாய்' தான் என்று நினைத்துக் கொள்கிறேன். என் முகத்தை ஒரு தடவை உற்றுப் பார்த்த அந்த நாய் வாலை ஆட்டி விட்டுத் தன் உடலைப் பலமாக அசைத்து நீரை அகற்றியது. நான் என்ன நினைத்தேனோ அதைத்தான் நிச்சயமாக அதுவும் நினைத்திருக்கும். உடம்பைச் சிலிர்த்துவிட்ட அந்த நாய் தனக்கேயுரிய பாணியில் மரத்தின் அடிப்பகுதிக்குப் போய் மண்ணைச் சிறிதளவு வாரிவிட்டு, முன்னங்கால்களின் மேல் முகத்தை வைத்துப் படுத்துக் கொண்டது. ஆதரவு தேடித் தன் இருப்பிடத்திற்கு வந்த என்னை அந்த நாய் குரைத்துத் துரத்தவில்லை. காரணம் அது மனிதனில்லை.

இவ்வளவு கதைக்கிறேனே நான் யார் என நீங்கள் கேட்கலாம். பெயர் சொல்லிக் கொள்ளுமளவுக்கு நான் பெரிய ஆளில்லை. ஊர் ஊராகத் திரிந்து பிச்சையெடுக்கின்ற ஒரு சாதாரணப் பிச்சைக்காரன் நான். இப்போது எனக்கொரு ஐம்பது வயதிருக்கும். பறட்டைத் தலை, முனிவர் தாடி, கிழிந்த சாறன், அழுக்கேறிய சேட், கையில் தடி, காலில் தேய்ந்துபோன செருப்பு, தோளில் தொங்கும் ஒரு முட்டை, இதுதான் என் உருவமைப்பு. எனக்கென ஒரு காலத்தில் சொந்த ஊர், வீடு, அப்பா, அம்மா, சகோதரங்கள், மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் எல்லோரும் இருந்தாங்க. ஆனால் காலம் செய்த கோலத்தால எல்லாம் மறைந்து போயிற்று. கதியிழந்த என்னை ஏற்றுக்கொள்ள எவருமே முன்வரல. எல்லோர் வாழ்க்கையிலும் விளையாடும் விதி என் வாழ்க்கையில் மட்டும் கொஞ்சம் அதிகமா விளையாடிருச்சு. அதனாலதான் எனக்கிந்த அவலம். என்ன செய்வது. எப்பவோ நஞ்சக் குடிச்சு பாடையில போயிருப்பன். ஆனால் அதுக்கும் மனசு கேக்கல. அதன்பிறகுதான் இந்த ஆண்டி அவதாரம் எடுத்து அலைந்து திரியிறன்.

பாருங்க, என்னைப்பற்றி சொன்னதால இரவுச் சாப்பாட்டையும் மறந்திட்டன். மத்தியானமும் ஒழுங்காகச் சாப்பிடல்ல. வார வழியில 'கலெக்சன்' கொஞ்சம் கம்மியா இருந்ததால ஒரு உளுந்து வடையும், டீ யும் தான் சாப்பிட்டது. அதனால இப்ப பெருங்குடல சிறுகுடல் விழுங்குமாற்போல் சரியான பசி. இடுப்பில் சொருகியிருந்த காசுப்பையை எடுத்துப் பார்க்கிறன். காசுப் பையெண்டா பெரிசா நினைக்க வேண்டாம். தெருக்கோயில் உண்டியல் மாதிரி கொஞ்சம் சில்லறைக் காசு கிடக்கும் அவ்வளவுதான். பைக்குள் கையை விட்டு ஐம்பசம், ஒருவாயாக 7 ரூபா எண்ணி எடுத்தன். எண்ட நல்ல காலமாகத்தான் இருக்கணும். பக்கத்தில ஒரு சில்லறைக் கடை இன்னும் மூடாம இருந்தது. தலையில ஒரு சொப்பிங் பேக்கப் போட்டுத்து கடைக்கு ஓடினேன். அரை இறாத்தல் பாணும், இரண்டு வாழப்பழமும் வாங்கிக்கொண்டு



**தங்கத்துரை யூலியன் தன்னாமுனை**

மீண்டும் மரத்தடியை வந்தடைந்த நான் பசி தாங்க முடியாமல் பழத்தை உரித்துப் பாணைச் சாப்பிடத் தொடங்க பக்கத்தில் படுத்திருந்த நாய் மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்த்து பெருமூச்சு விட்டது. பாவம் அதற்கும் சரியாகப் பசிக்கும் என்றெண்ணிப் பாண் ஒரு துண்டைப் பிய்த்துப் போட்டேன். எப்போது கிடைக்கும் என்று காத்திருந்தாற்போல் அதுவும் பாணைக் கவ்விப்பிடித்துச் சாப்பிடத் தொடங்கியது. பசி ஓரளவு அடங்கியதால் முட்டைக்குள் இருந்த தண்ணீர்ப்புட்டியை எடுத்துக் குடித்துவிட்டு தூங்கலாம் என்றெண்ணி முட்டையைத் தலைக்கு வைத்து தூங்க முயற்சித்தேன். என்ன அநியாயம், அப்போது மழை உச்சஸ்தாயில் பொழிய ஆரம்பித்தது.

இன்னும் அந்த மரத்தின் கீழ் நிற்க முடியாமல் போகவே அருகிலிருந்த ஒரு வீட்டை நோக்கி ஓடினேன். அந்த வீட்டின் முற்பகுதியில் கிடுகினால் தாவாரம் போல் மேய்ந்திருந்ததால் அதற்குள் போய் நின்று கொண்டேன். அவ்வேளையில் அந்த வீட்டினுள் இருந்த தாய் தன் குழந்தைக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்தாள். வழமைபோல் குழந்தையும் உணவை உண்ண மறுக்கவே "அந்தா வாறான் சன்னாசி, இந்தா வாறான் சன்னாசி கெதியெண்டு சாப்பிடு, இல்லாட்டி உன்னையும் புடிச்சிட்டுப் போயிடுவான்" என்று பயமுறுத்தி குழந்தையை சாப்பிட வைத்துக் கொண்டிருந்தாள்.(சன்னாசி என்றால் எங்கள் பகுதிகளில் 'பிள்ளை பிடிக்கிறவன்' எனப் பொருள்படும்) இதைக் கேட்ட எனக்கும் எனது அம்மாவின் ஞாபகம் வந்தது. ஏனென்றால் எனக்கும் இப்படித்தான் என் அம்மா சிறுபராயத்தில் சோறு ஊட்டுவாள். கண்களில் வடிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நான் மெதுவாக வீட்டினுள் எட்டிப் பார்த்தேன். அப்போது என்னைக் கண்ட அந்தத் தாய் 'இந்தா இருக்கான் சன்னாசி' எனக் கூறி குழந்தைக்கு என்னைக் காட்டினாள். என்னைக் கண்டவுடன் குழந்தையும் அழுகையை நிறுத்திவிட்டு சாப்பிடத் தொடங்கியது. நானும் ஒரு சன்னாசி ஆகிவிட்டேனே என்ற துக்கம் இதயத்தை அடைந்தாலும் ஒரு குழந்தை நிறைவாகச் சாப்பிடுகிறதே என்று நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது. இந்தப் புது சன்னாசியால் இன்னும் எத்தனையோ தாய்மார்கள் நிம்மதியாகச் சோறு ஊட்டுவார்கள் என்ற பெருமிதத்துடன் குளிரையும் மறந்து அந்தத் தாவாரத்தினுள் சுருண்டு படுத்துக் கொள்கிறேன்.

# கண்ணாமூச்சி ரே... ரே... 11

## பட்டுக்கோட்டை பிரபாகர்

"ராத்திரி பத்து மணிக்கு துர்க்காவையும், சேதுவையும் இங்கே வரச் சொல்லிடறே. அப்புறம் நான் சொன்ன பிளான் படி..."

"தாஸ், எனக்குப் போய் இவ்வளவு பெரிய பொறுப்பைத் தர்றியே... எனக்கு கலக்கமா இருக்கு."

"எனக்கு கலக்கம் எதுவும் கிடையாது. நானே செஞ்சிடட்டுமா சுதிர்?"

"ப்ளீஸ். நான் இங்கேயே இருக்கேன்."

"ஓகே. வீட்டுக்குப் போறேன். ப்ளட் பாங்க்ல இருந்துவாங்கிட்டு வந்த ரத்தம் இருக்கு. அதை வச்சி ரத்தக் கையெழுத்தில இன்னொரு லெட்டர் தயாரிக்கணும் முன்ன மாதிரியே..."

"தாஸ், திட்டம் ரொம்ப விபரீதமாப் போய்க்கிட்டிருக்கு..."

"விபரீதம்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும் சுதிர். ராத்திரி பத்து மணிக்கு நான் இங்கே இருப்பேன். நீயும் இருக்கே. சேது, துர்க்காவும் இருக்காங்க. துர்க்காவை மேக்கப் பாக்ஸ் எடுத்துக் கிட்டு வரச் சொல்றே. ஓக்கே?"

மௌனமாகத் தலையை ஆட்டினான் சுதிர்.

தனது ஸ்பெஷல் வார்டில் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த அணில் தூத் போனில் தன் அப்பாவிடம் பேசினான்.

"பாபா, உங்களுக்குத் தெரியும். மதுலதா உங்களுக்கு மருமகளா வரப் போறவ. உங்களுக்கு மந்திரிகளைத் தெரியும் போலீசை இன்னும் தீவிரப் படுத்தச் சொல்லுங்க பாபா. ரெண்டு நாளாச்சி. எந்த தகவலும் இல்லை. எனக்கு ரொம்ப கவலையா இருக்கு பாபா."

"கேக்காமலா இருப்பேன். போலீஸ். ரொம்ப தீவிரமாத் தான் இருக்காங்க. நடிகர் சந்திரஜித் பேரு இதில அடிபடுது. அதனால பேப்பர்ல செய்தி எதையும் இது வரைக்கும் தராம இருக்காங்க. எப்படியும் இன்னைக்குள்ளே மதுலதாவைக் கொண்டாந்துடுவோம்னு சொல்றாங்க."

"எதையோ மறைக்கிறாங்க பாபா..." என்று அணில் தூத் சட்டென்று உடைந்து விம்மத் தொடங்கினான்.

தாஸ் சொன்ன இரவு பத்து. பெஸண்ட் நகர் எப்போதோ உறங்கிப் போயிருந்தது. அலைகள் "ஸ்ஸ்ஸ்" என்று ரகசியம் பேச அழைத்துக்கொண்டிருந்தன தொலைதூரத்தில்.

பங்களாவின் உள்ளே சங்கரதாஸ் டின் விஸ்கி, சுதிர் எச்சில் விஸ்கி, சேது சொந்த பிராண்ட் சிகரெட் என்று நேரம் கடத்த...

பத்து பத்திற்கு துர்க்கா வந்தாள்.

"எதிலே வந்தே?" என்றான் சுதிர்.

"நீங்க சொன்னபடி பஸ்ஸில."

"அம்மாகிட்டே எங்கே போறதா சொல்லிட்டு வந்தே?"

"ஆளை அனுப்பி அவர் கூப்பிட்டு விட்டிருக்கார், என்ன இருந்தாலும் புருஷன் இல்லையா, போய் கேட்டுட்டு முடிஞ்சா திரும்பி வர்றேன், இல்லைன்னா நாளைக்குத்தான் வருவேன்னு சொன்னேன் அப்படித்தானே சொல்லச் சென்னிங்க?"

"கரெக்ட்,"

சங்கரதாஸ் அவர்கள் இருவரையும் உன்னிப்பாகப் பார்த்தான்.

"மதுலதாவை யாருக்கும் தெரியாம கடத்திக்கிட்டு வந்து இந்த பங்களால வச்சிருக்கேன்" என்றதும்...

"அப்படியா?" என்று இருவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

"இப்போ துர்க்கா நீ என்ன செய்றே அந்த ரூமுக்குள்ளே போ. அங்கே மதுலதா படுத்திருக்கா. மயக்கமா இருக்கா. உடம்புல துண்டு துணி இல்லாம கழட்டு. உன் டிரெஸ்சையும் கழட்டு. அவ டிரெஸ்சை நீ போட்டுக்கோ. உன்டிரெஸ்சை அவளுக்குப் போட்டு விடு. அளவுகள் கரெக்டா இருக்கும்னு தெரியும் எனக்கு. அப்புறம் காதுல, கழுத்துல மதுலதா போட்டிருக்கிறதைக் கழட்டி நீ மாட்டிக்கோ. மேக்கப் பெட்டி எடுத்துட்டு வந்தியா?"

"இதோ."

"அவ இப்ப என்ன ஹேர் ஸ்டைல்ல இருக்காளோ அந்த ஹேர் ஸ்டைலை நீ செஞ்சிக்க. இப்ப நீ ஜடை பின்னியிருக்கிற மாதிரி அவளுக்குப் பின்னி விடு. சுதந்திரமா செய்யலாம் நீ. அவ பரிபூர்ண மயக்கத்தில இருக்கா. எந்த எதிர்ப்பும் வராது. நீ அவளாகணும். அவ நீயாகணும். புரிஞ்சுதா?"

> "அவ இப்ப என்ன ஹேர் ஸ்டைல்ல இருக்காளோ அந்த ஹேர் ஸ்டைலை நீ செஞ்சிக்க. இப்ப நீ ஜடை பின்னியிருக்கிற மாதிரி அவளுக்குப் பின்னி விடு. சுதந்திரமா செய்யலாம் நீ. அவ பரிபூர்ண மயக்கத்தில இருக்கா. எந்த எதிர்ப்பும் வராது. நீ அவளாகணும். அவ நீயாகணும். புரிஞ்சுதா?"

"புரிஞ்சுதுங்க. ஆனா.. ஏன்னுதான்..."

"உன்னை மதுலதாவா மாத்தி ஒரு இடத்துக்கு அழைச்சிட்டுப் போகப் போறேன். போய்ட்டு வந்ததும் அஞ்சி லட்சத்திலே ஒரு லட்சம் போக மிச்சமிருக்கிற நாலு லட்சத்திலே ரெண்டு லட்சம் தர்றதா இருக்கேன். ஏன், எதுக்குன்னு கேள்வி கேட்டுக்கிட்டு டயத்தை வேஸ்ட் பண்ண வேணாம். க்விக்."

"சரிங்க."

துர்க்கா மேக்கப் பெட்டியுடன் அறைக்குள் வந்தாள். மதுலதா இளம் பச்சை நிறத்தில் ஸாரி அணிந்திருந்தாள். துர்க்கா அடர்த்திச் சிவப்பில் ஸாரி அணிந்திருந்தாள். இருபது நிமிடத்தில் மதுலதா அடர்த்திச் சிவப்பில் ஸாரி அணிந்திருந்தாள். துர்க்கா இளம் பச்சை நிறத்தில் ஸாரி அணிந்திருந்தாள்.

மதுலதா இடுப்பில் அணிந்திருந்த தங்கச் செயின், கழுத்தில், காதில், தலையில், கையில், என்று அத்தனை ஆபரணங்களும் இடம் மாறி... ரப்பர் வளையலும், பிளாஸ்டிக் செயினுமாய் குடியேறின.

வெளியில் சேது, "என்னை எதுக்காக வரச் சொன்னிங்க?" என்றான்.

"இங்கேயே இரு. நான் அரை மணி நேரத்தில திரும்பிடுவேன். வந்து சொல்றேன்.." என்றான் சங்கரதாஸ்.

மேலும் பத்து நிமிடம் கழித்து அறையைத் திறந்து கொண்டு மதுலதாவாக வெளியே வந்தாள் துர்க்கா, "நான் ரெடி."

"இது" என்று சங்கரதாஸ் அவளை தலையிலிருந்து பாதம் வரை இன்ச் இன்ச்சாய் பார்வையை நகர்த்திப் பார்த்தான்.

"நீ போட்டிருக்கிறது மதுலதாவோட கொலுசு இல்லை உன்னோடதுதானே?!"

"ஆமாம். கொலுசுகூட மாத்தணுமா?"

"ஆமாம். மாத்து. உன்னோடதைக் கழட்டு அவளுக்கு மாட்டு, அவளோடதை நீ மாட்டிக்கோ. அப்புறம்... மதுலதா விரல்ல இருக்கிற நெய்ல் பாலீஷும், உன் விரல் நகத்தில இருக்கிற நெய்ல் பாலீஷுமத் கொஞ்சம் ஷேடு வித்தியாசமாப்படுது. பாலீஸ் ரிமூவரை எடுத்துத் தொடைச்சிட்டு அதே ஷேட் போட்டுக்கோ. தொப்புளை விட்டு இப்படி நாலு இஞ்ச் கீழே கட்டமாட்டா அவ. ஜஸ்ட் ஒரு இஞ்ச் கீழே கட்டணும்."

சங்கரதாஸ் சொன்ன திருத்தங்கள் எல்லாம் செய்து கொண்டு வந்த பின்னரும் துர்க்காவை மதுலதா அருகில் அழைத்துப் போய் நிறுத்தி மீண்டும் துல்லியமாக செக் செய்து கொண்ட பின், "வா போகலாம்" என்றான்.

"சுதிர், மதுலதாவோட வெள்ளை மாருதியோட நம்பர் பிளேட் மேல வேற நம்பர் ஸ்டிக்கர் ஒட்டிட்டியா? சுலபமா பிய்க்க வருமில்லே?"

"வரும் தாஸ். இரு. கேரேஜ்லேர்ந்து காரை எடுத்துட்டு வர்றேன்."

"என்ன செய்யப் போறிங்கன்னே புரியலை எனக்கு என்றான் சேது.

"வந்து சொல்லிப் புரிய வைக்கிறேன் சேது." இன்னும் பத்து நிமிஷத்திலே செடட்டிவ் டோஸ் இஞ்செக்ஷன் போடணும் சுதிர் அவளுக்கு."

"போட்டுடறேன்."

பதினோரு மணிக்கு காரை சங்கரதாஸ் ஓட்ட... பக்கத்து சீட்டில் துர்க்கா எந்த காரணமுமே புரியாமல், திரும்பி வந்ததுமே இரண்டு லட்சம் கிடைக்கும் என்கிற ஒரே பிரபிப்பில் உட்கார்ந்திருக்க... கடற்கரைச் சாலையில் சந்தடியற்ற அந்த இடத்தில் நின்றது.

காரின் ஓட்டத்திலேயே சங்கரதாஸ் தன் கைகளில் கிளவுஸ் மாட்டிக் கொண்டதைக் கொஞ்சம்கூட கவனிக்காத துர்க்கா, "எதுக்கு நிறுத்தறிங்க?" என்று அப்பாவியாய்க் கேட்டாள்.

"உன்னைக் கொல்றதுக்கு" என்றான் சங்கரதாஸ்.

"என்னது?"

"அதாவது மதுலதாவை சாக அடிக்கிறதுக்கு" என்ற சங்கரதாஸ் சட்டென்று துர்க்காவின் குரல்வளையை தன் இரு கரங்களால் வலிமை கூட்டி வளைத்து இறுக்கினான்.

விழி பிதுங்கினாள் துர்க்கா. காற்றுக்காகத் தவித்தாள். விலுக் என்று உடம்பு தூக்கிப் போட்டது. ஒன்றரை நிமிட சப்தமில்லாத போராட்டத்தில் பிணமானாள்.

கழுத்துக்கடியில் ஒரு கையும், முழங்கால்களுக்கு அடியில் ஒரு கையும் கொடுத்துத் தூக்கி சாலையில் படுக்க வைத்த சங்கரதாஸ் காருக்குத் திரும்பி, ஸ்டார்ட் செய்து, ரிவர்ஸ் செய்து, சரியாய் துர்க்காவின் கழுத்துக்கும், முகத்துக்கும் இடது சக்கரத்தைக் குறி வைத்து வேகமாய்ச் செலுத்த...

'டப்!' என்ற ஏதோ ஒரு சில எலும்புகள் முறிகிற சத்தமும், சொத் என்று ரத்தம் பீய்ச்சியடிக்கிற சத்தமும் கலந்தது.

*(கண்ணாமூச்சி தொடரும்)*



# அதிரடிப்படையின் லேட்டஸ்ட் பிளான்!

சந்தன வீரப்பனை அதிரடிப்படை நெருங்கிவிட்டதாகவே தோன்றுகிறது. ஏதோ ஒரு ரகசிய ஆபரேஷனுக்காக அதிரடிப்படை தயாராவது மட்டும் 'பளிச்'செனப் புரிகிறது. "நடிகர் ராஜ்குமார் விடுவிக்கப்பட்ட சில மணி நேரங்களுக்குள்ளேயே மிகப்பெரிய அதிரடித் தாக்குதல் நடத்தி வீரப்பனைப் பிடிக்கும் வியூகம் அதிரடிப்படையினரால் வகுக்கப்பட்டது. ஆனால் அப்போது அந்தத் தாக்குதல் நடத்த வேண்டாம் என்று மேலிடத்திலிருந்து தகவல் வந்ததால் தாக்குதலை அதிரடிப்படையினர் மேற்கொள்ளவில்லை. அந்த சமயத்தில் மட்டும் எங்களை விட்டிருந்தால் வீரப்பனை எளிதாகப் பிடித்திருப்போம்" என்று ஆதங்கத்துடன் கூறுகிறார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருக்கும் அதிரடிப்படை அதிகாரி ஒருவர்.



நடிகர் ராஜ்குமார் மீட்பு விவகாரத்தில் கோடிக்கணக்கான பணம் கைமாறியது. அதில் ஒரு பகுதியைத் தனது மனைவி. தங்கை, அண்ணன் மாதையன் குடும்பத்தினருக்கு வீரப்பன் வாரி வழங்கியிருக்கிறான்.

வறுமையில் உழன்று வந்த வீரப்பனது உறவினர்கள் கையில் தாராளமாக பணப்புழக்கம் ஏற்பட்டதை அதிரடிப்படையின் உளவுப்பிரிவினர் மிகக் கவனமாகக் குறிப்பெடுத்துக் கொண்டனர். திடீரென வீரப்பனுடைய உறவினர்கள் வாங்கிய சொத்து விவரங்கள் சேகரிக்கப்பட்டன. கோவிந்தப்பாடியைச் சேர்ந்த ஒருவர் மூலம் உதவிப் பணத்தைப் பெற்றவர்கள் பட்டியல் தயாரானது.

பிறகு இவர்கள் ஒருவர் பின் ஒருவராகக் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் தன்னைக் காட்டிக் கொடுத்த ஒரு சிலரைக் கடத்திச் செல்ல வீரப்பன் பாலாறு பகுதியில் முகாமிட்டிருக்கிறான் என்ற செய்தி அதிரடிப்படையினருக்கு எட்டவே, அந்தப் பகுதி முழுவதும் தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டது.

இதற்கிடையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த அரசியல் பிரமுகர் ஒருவர் வீரப்பனைச் சந்திப்பதற்கு ரகசியமாக காட்டுப்பகுதிக்குள் சென்றார். அப்போது அவரைச் சுற்றி வளைத்த அதிரடிப்படையினர் தங்கள் முகாமுக்குக் கொண்டு வந்து மூன்று நாட்கள் அதிரடிப்படை முகாமிலேயே வைத்து விசாரித்திருக்கின்றனர். இந்த சமயத்திலதான் சென்னை நகர போலீஸ் கமிஷனரும் அதிரடிப்படை தலைவர் பொறுப்பை வகித்த கூடுதல் டி.ஐ.ஜி.யுமான விஜயகுமார் அங்கு விரைந்து வந்தார்.

பிடிபட்ட அந்தப் பிரமுகர் தான் வீரப்பனுடன் சென்று பேசுவதாகவும் வீரப்பனை நிச்சயம் சரணடைய உதவி செய்வதாகவும் உறுதிமொழி அளித்து அதிரடிப்படையின் பிடியிலிருந்து மீணடார். இதனாலேயே கடந்த சில நாட்களாக அதிரடிப்படையினரின் நடவடிக்கைகள் வழக்கத்தைக் காட்டிலும் வெகு விரைவாகக் காணப்பட்டன. உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் நேரடியாகத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டார்கள். ஆனாலும் வீரப்பன் அவர்களது கண்காணிப்பிலிருந்து தப்பியோடி மறைந்துவிட்டான். ஆக,



இந்த முறை நிச்சயம் வெடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட வெடி மீண்டும் புஸ்வாணமாயிற்று. "பாலாறு பகுதியில் வீரப்பனைச் சந்திக்கச் சென்ற அந்தப் பிரமுகரைத் தொடர்ந்து சென்றிருந்தாலே போதும், வீரப்பனைக் கூண்டோடு பிடித்திருக்கலாம். அதை விட்டு விட்டு, பிரமுகரை மடக்கியதன் மூலம் வீரப்பனைப் பிடிக்கும் அருமையான வாய்ப்பு ஒன்று நழுவிப் போனது" என்று கிசுகிசுக்கிறார் அதிரடிப்படை அதிகாரி ஒருவர்.

இந்நிலையில் அதிரடிப்படையினர் கையில் வீரப்பன் குழுவைச் சேர்ந்த ஒருவர் பிடிபட்டு விட்டதாகவும் அநேகமாக அது சேத்துக்குளி கோவிந்தனாக இருக்கலாம் என்றும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

வீரப்பன் மனைவி முத்துலட்சுமி, வீரப்பனிடம் நன்கு அறிமுகமான தமிழ் தேசிய மீட்புப்படை முத்துக்குமார் ஆகியோரை முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவருடன் ரகசியமாக அனுப்பி வைத்து வீரப்பனைச் சரணடையச் செய்யும் முயற்சியை மேற்கொள்வது அதிரடிப்படையின் லேட்டஸ்ட் பிளான்! என்கிறார்கள். ■

# பண்முக நோக்கில் பண்பாடு

ஓர் இனத்தினை ஆதாரப்படுத்துகின்ற காரணிகளில் மொழி, பண்பாடு, கலை, கலாசாரப்பாரம்பரிய தனித்துவங்கள் முக்கியமானவையாகும். அவை நிகழ்வுகளின் குறியீடுகளாக நின்று நாகரீகத்தின் செழுமையைத் துலக்கமாகக் காட்டுகின்றன. தமிழரின் நாகரீகம் செழுமைமிக்கது:: வலிமையானது. ஆயினும் பண்பாட்டுக் காரணிகளைப் பக்குவப்படுத்தாமையும் அந்நிய கலாசாரங்களையும் ஆர்வப்படுத்த வேண்டுமென்ற பரந்த நோக்கு அல்லது அத்தகைய நோக்குடையவர்களாகத் தம்மை இனங்காட்டிக் கொண்ட தன்மை, பிற நாகரீக ஈர்ப்பு என்பன காரணமாகவும் கால ஓட்டத்தில் தமிழரின் நாகரீகமும் பண்பாடும் பல மாறுதல்களைப் பெற்றுக் கொண்டன.

தமிழரின் பண்பாடு சிதைவுபட்டுப் போனதற்கு நாம் ஒரு வேற்றுக் காரணியையும் ஒப்புவிக்கலாம். மரபு வழி வந்த சமூகச் சட்டங்கள் வரிந்து கட்டிக்கொண்டு சாதியம் பேசியதும் ஆணாதிக்க வட்டத்துக்குள் விடுபட முடியாது நின்றமையுமான பிற்போக்கு குணாம்சமே அது. சமய மேலாதிக்கத்தின் மீதும் பண்பாடுகளின் மீதும் தமிழ்ச் சமூகத்தின் ஒரு சாரார் வெறுப்புற அது வழிவகுத்தது. மரபு, இசை, நடனம், ஓவியம் முதலான கலைகள் உயர் ஜாதியினர்க்கு உரித்தான கலைகள் என்ற உக்கிர நிலைப்பாடு காரணமாக ஐரோப்பிய கலைப்பண்பாட்டு வடிவங்களின்மீதான தாக்கமும் ஈடுபாடும் தமிழர்களிடையே ஆழமாகப் பரவியது. இவ்வாறு தாழ்சாதியினரென்று ஒதுக்கப்பட்ட சமூகத்தினர் கல்வியில் உயர்ந்து சமூக நிர்மாணத்தில் முக்கியம் பெறுகையில் ஐரோப்பிய கலைமுறைமைகளின் வளர்ச்சி தமிழர்களிடம் மேலோங்கியதுடன் தமிழர்பண்பாடுகளை இம்மக்கள் உயர்குலம் சார்ந்தது அல்லது சாதீயம் பேசுவதென விலக்கியதும் நாஸ்திகத்தில் உறுதி கொண்டதுமான நிகழ்வுகள் இடம் பிடித்ததை நாம் கண்டே ஆக வேண்டும். உண்மையில் சமய அடிப்படைத் தனமும் பிற்போக்குவாதமும் பண்பாட்டில் இருந்து வேறானவை. பண் பாடுகள் நம் தனித்துவ இருப்புக்கும் நிலவுகைக்குமான அடையாளச் சின்னங்கள் என்பதை நாம் ஆழ்ந்துணர வேண்டியது அவசியமாகும். இந்த வகையில் மாவிலை தோரண அலங்கரிப்பும் தமிழரின் நீண்ட காலப் பண்பாடாகும். இப்போதெல்லாம் இது நிறமூட்டிய பொலித்தீனுக்கு மாறி நம்மை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது. அலங்காரம் பண்பாட்டுக்கு மட்டுமன்றி அழகுக்குத்தான் என்ற வாதமும் புதியன புகுதல் வழுவல்ல என்ற சமாதானமும்கூட இதற்கு கூறப்படலாம். ஆனால் குருத்தோலையின் இளம் பச்சை நிறமும் மனோரம்பிய அழகுடையது. குளிர்ச்சியான புறச்சூழலைத் தரும் என்பதே இங்கு எனது கருத்து நிலை. ஆனால் நான் சொல்ல வந்ததுவோ இக்கட்டுரையின் பிடிவாதமோ குருத்தோலை பொலித்தீன் என்ற இந்த மாறுபாட்டிற்கு முரண்படுவது அல்ல. மாறாக பண்பாடு என்று கருதிக்கொண்டு அல்லது சொல்லிக் கொண்டு குருத்தோலை தோரணம் பின்னுபவர்கள் அதன் குறியீட்டை உணராது வழுவுவதே உள ஆதங்கமாகும்.

குருத்தோலையில் செய்யப்படும் பின்னல்முறை அங்கு நிகழ்வது மரண வீடா அல்லது திருமண வீடா என்பதைக் குறியீடாகக் காட்டும். ஆனால் இந்த வேறுபாட்டை கூட கருதாது மனம்போன போக்கில் குருத்துக்குள் பின்னப்படுவது பண்பாட்டை மறுக்கும் செயலாகும். இதைவிட பொலித்தின் அலங்காரம் உத்தமமே.

அடுத்து மங்கல விளக்கேற்றுதல் சகல நிகழ்வுகளுக்கும் முன்னதாகச் செய்யப்படும் ஒரு நிகழ்வாகும். இது மேல் நோக்கியதாகச் சுடர்களை ஏற்றுவதன் மூலம் நிகழ்வு முன்னோக்கியதாக அமைதல் வேண்டும் என்ற உணர்வெழுச்சியைக் குறியீடாகக் கொண்டு செய்யப்படுகின்றது. ஆனாலும் பல்வேறு நிகழ்வுகளில் ஒப்பனைக்கு அதிதிகளைக் கௌரவப்படுத்தும் ஒரு சம்பிரதாயமாக மட்டும்மங்கல விளக்கேற்றுதல் நடந்தேறி வருகின்றது. பல தட்டுக்களை கொண்ட விளக்குகளாயின் முதலில் விளக்கேற்றுபவர் கீழ் நிலைத் தட்டுக்களையே ஏற்றுதல் வேண்டும். இதன் மூலம் மேல் நோக்கியதாக சுடர்கள் ஏற்றப்படுவது சாத்தியமாகும். ஆனால் இந்த வரன்முறைக்கு மறுதலையாகவே பல்வேறு நிகழ்வுகளில் மங்கல விளக்குகள் ஏற்றப்படுவதை அவதானிக்கலாம். இது எந்த பௌதீக விளைவுகளையும் தராது என்பது யதார்த்த சிந்தனைக்கு சரி என்றாலும் சம்பிரதாயம் என்பதற்காக பின்பற்றும் மரபினை தவறுகளோடு செய்கிறோம் என்பது உறுத்தும் நிகழ்வே. பிறந்த தின வைபவங்களில் ஒளிரும் மெழுகுதிரியை ஊதி அணைத்து கேக் வெட்டுகிறோம். இப்படி தீபத்தை அணைத்து மங்கல நிகழ்வை ஆரம்பிக்கும் மரபு தமிழர்களிடம் உண்டா? என்பது இங்கு



பாரம்மிக்க வினாவாகவே எழுகிறது. இதற்கு மாறாக தீபத்தை ஏற்றி அந்த மங்கல ஒளியில் கேக் வெட்டலாமே என்னும் கருத்தும் சிலரிடம் உண்டு.

பொதுவாக பண்பாட்டை நோக்கும் போது பண்பாடுகள் குறித்து மாறு பட்ட இரண்டு கருத்துருவாக்கங்கள் உருவாகலாம். அதாவது பண்டை தொட்டு பேணப்படும் மரபுரிமைகள்தான் பண்பாடா? அல்லது பண்படுத்துவதன் மூலம் காலங்காலமாக மாற்றப்பட்டு நிலை நிறுத்தப்படும் சமூக நிலைப்பாடுகள்தான் பண்பாடா? என்பனவே இவைகளாகும். பண்பாடுகள குறித்து நிலவுகின்ற பலத்தரப்பட்ட வரை விலக்கணங்களுக்கும் கருத்துக்களுக்கும் மத்தியில் சில வேளைகளில் பண்பாட்டையும் நாகரீகத்தையும் கலாசாரத்தையும் ஒரே விடயமாகப் பொதுமைப்படுத்தி கருதுவோரும் உளர். ஆழமாகப் பார்க்கும்போது பண்பாடு அகம் சார்ந்த வெளிப்பாடு (உதாரணம் அன்னதானம் செய்தல், கனம் பண்ணுதல்) ஆகவும் நாகரீகம் புறம் சார்ந்த வெளிப்பாடு (உதாரணம் ஆடை, அணிகலம்) ஆகவும் கலாசாரம் என்பது குறித்த சமூகத்தின் கலைகளும் ஆசாரங்களும் பற்றி கருதுவதாகவும் அமையலாம். ஆயினும் இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புகொண்டு திகழ்வதையும் காண முடியும். இந்நிலையில் பேராசிரியர் மத்தியூ ஆர்னல்ட் கருது வது போல மென்மேலும் திந்தி வரும் திருத்த நிலையே பண்பாடு என்று கொண்டால் சாதியம், பெண்ணியம் மற்றும் சமயக் கருத்துக்களை நிறுத்துப்பார்த்தல் முதலான கருத்து நலன்களில் திருத்தி நிலைபெற்ற மாற்றப் (சமூக நலன் குறித்த முன்னேற்றம்) போக்குக்கு தமிழர் பண்பாடும் இன்று வழி திறந்துள்ளதைக் காணலாம். இந்த திருந்திய அறிவு நிலையில் (Intellectual development) கூர்மையான தம் சாதிய எதிர்ப்பைக் காட்ட மங்கல பொருட்களுக்கு பதிலாக ஈர்க்குத்துடைப்பம், பாதணி முதலான பொருட்களை வைத்து விழாவை ஆரம்பித்த நிகழ்வு ஒன்றும் அண்மையில் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடந்தது. இந்த பண்பாட்டு முரண்படுகை பார்ப்பனியர் மனதிலும் பார்ப்பனியர் மேலாண்மையை ஆதரிப்போரிடையிலும் மங்கல பண்பாட்டு பொருட்கள் உயர் சாதியினர்க்கே உரிய குறியீட்டுக் கூறுகள் என்ற முனைப்பை ஏற்படுத்துமே தவிர வேறு எதையும் ஏற்படுத்தாது என்றே எனக்கு தோன்று கிறது.

பண்பாடு பற்றிய ஸ்பென்ஸரின் கொள்கை யின்படி வேறுபட்ட பல நிலைப்பண்பாடுகள் ஒரு வழிப்போக்கான வளர்ச்சியின் பல கட்டங்களே என்பதையும் ஒவ்வொரு காலகட்டத்தின் பண்பாட்டு நிலை, பழைமை வரலாறு என்பவற்றின் விளைவு எனவும் அறிய முடியும். இங்கேதான் பண்பாட்டு வளர்ச்சிகள் வேறு, வழுவல்கள் வேறு என்பதை நாம் உணர வேண்டியுள்ளது. இறுக்கமான சகல கட்டுமானங்களும் சமூகப் பொருளாதார மாற்றங்களுமே பண்பாட்டு மீறல்களுக்கு இட்டுச் செல்கின்றன.

உள்நாட்டு யுத்தங்கள் காரணமாகப் பொருளாதார வீழ்ச்சி ஏற்படும்போது பயங்கரவாதம் தோற்றமாகின்றது. பெண்ணிலைவாதம் ஆணாதிக்கத்தை உடைத்தபோது லெஸ்பியம் அடையாளம் இடப்பட்டது. (மரபணு ரீதியில் 4-10 சதவீதக் குடித்தொகையினர் இயற்கையிலேயே பிறழ் பாலுணர்வு உள்ளவர்களாக இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இது மதிக்கப்பட வேண்டும் என்பதையும் உணர வேண்டும்). இவ்வாறான கால வழுவல்களையும் பண்பாட்டு வழுவல்களுக்குள் ஆராயலாம்.

சில கட்டுமானங்களுக்குள் நின்று அதன் புறநிலைக் குறித்தும் கருதிக்கொண்டு ஆராயாதவரை பண்பாடு பற்றிய ஆய்வுகள் மாயமான் போல் வழுவி வழுவிப்போவது தவிர்க்க முடியாததாகி விடும். பண்பாடு கொள்கின்ற தேவை கருதிய மாற்றங்களை ஏற்றுக்கொள்வதுடன் அதனை நிலை நிறுத்தி பேண வேண்டியது தலையாயதாகும்.

***நன்றி: சஞ்சீவி***

(5ம் பக்கத் தொடர்ச்சி )

## செக்ஸ் டாக்டரும்...

ஆனால் பிரச்சனையின் வேறொரு பரி மாணமும் இருக்கிறது. ராஜகோபாலுடைய பெண்ணாசை, அவர் எப்படியெல்லாம் பெண்களை வழிக்குக் கொண்டுவந்தார் அல்லது டாக்டர் பிரகாஷ் எந்த மாதிரி செக்ஸ்படங்களைத் தயாரித்தார் என்பதோடு நிறுத்திக் கொண்டிருந்தால்கூட, சரி பாலியல் உணர்வுகளைத் தூண்டி பணம் பண்ணுகிறார்கள், அவர்கள் தரம் அவ்வளவுதான், மேலும், உலகம்



முழுவதும் இப்படிப்பட்ட பத்திரிகைகள் இருக்கத்தானே செய்கின்றன, மாறி வரும் உலகில் வெளிப்படையாக செக்ஸ் விவகாரங்கள் பேசப்படத்தானே செய்கின்றன என்று விட்டு விடலாம், கண்டும் காணாமல், பெருமூச்சுவிட்டுக்கொண்டு இருந்து விடலாம்.

ராஜகோபால் அல்லது பிரகாஷ் போன்றவர்களைப்பற்றிய சொந்த வாழ்க்கையைப் பற்றி ஏகத்துக்கும் சரடு விடுகிறார்கள். முதற்கட்ட விசாரணைகளிலிருந்தே, இருவருமே குற்றம் புரிந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிவிட்டது. எந்த அளவு என்பது குறித்து வேண்டுமானால் சர்ச்சை இருக்கலாம்.

அவ்வாறு சமூகத்தினை சீரழிக்கிறவர்கள் குறித்து கண்டபடி செய்திகள் வருவதும் இயற்கைதான். அதையும் இப்போது கவனத்தில் கொள்ள வேண்டாம்.

ஆனால் அவர்களுடன் தொடர்பு இருப்பதாகச் சொல்லப்படுவர்களின் சொந்த வாழ்க்கை அவலங்களைப் பற்றி பத்திபத்தியாக வெளியிடுவது நியாயமா என்பது தான் நம்முன் எழும் கேள்வி.

உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், சரவணபவன் ஓட்டல் அதிபர் ராஜகோபாலின் இரண்டாவது மனைவி கிருத்திகா. முறுக்கு பிழிந்து கொண்டிருந்த அந்தப் பெண், தனது கணவனையே ஒதுக்கி விட்டு, அதிபருடன் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார். ஒரு பேட்டியில் தான் ஒரு கூண்டுக்கிளி என்று கூறியிருக்கிறார். சமூகத்தில் ஏழைப் பெண்கள் எந்த விதமான கொடுமைகளுக்குள்ளாக வேண்டியிருக்கிறது, எப்படியெல்லாம் பலியாகிறார்கள் என்பதற்கு இலக்கணமே கிருத்திகா தான். ஆனால் அவரை ஒரு வில்லியாக சித்தரிப்பதோடு நில்லாமல், அவரது அழகு, அவர் எவ்வாறு ராஜகோபாலை மயக்கினார், அவரது சாமுத்திரிகா லட்சணங்கள் இதைப் பற்றி தொடர்ந்து எழுதிக் கொண்டே இருக்கிறார்கள்.

ராஜகோபால் சிறைக்குப் போய் விட, தன்னந்தனியே விடப்பட்ட கிருத்திகாவின் நிலை என்னவாகும். எப்படிப்பட்ட பிரச்சனைகளை அவர் எதிர்கொண்டிருப்பார் என்பது பற்றி ஜூ.விக்கு கவலையே இல்லை.

இதைவிட பரம அயோக்கியத்தனம் நக்கீரன் செய்து கொண்டிருப்பதுதான். வாராவாரம் அந்தப் பெண் கற்பழிக்கப்பட்டாள், இந்த அதிகாரி, அந்த அரசியல்வாதி அநாகரீகமாக நடந்துகொண்டார், அப்பாவிப் பெண்கள் காமுகர்களுக்கு இரையாகிறார்கள் என்று செய்தி வெளியிடும் அதே பத்திரிகைதான், இப்போது ஒரு டி.வி.நடிகையின் வாழ்க்கையினை பாழடித்துக் கொண்டிருக்கிறது.

பிரகாஷின் நீலப்படங்களில் அவர் நடித்ததாகவும், அவரை போலீசார் விசாரணை செய்து வருவதாகவும் பரவலாக செய்திகள். அந்த நடிகை சுபகாலமாக தொலைக்காட்சித் தொடர்களில் பிரபலமாயிருப்பவர்.

அவரது பூர்வாசிரம வாழ்க்கையினை அக்குவேறு ஆணிவேறாக ஆய்ந்து, யாராருடனெல்லாம் அவருக்கு தொடர்பிருந்தது என்று விளக்கி, அது குறித்து கேள்விகள் எழுப்பினால் மழுப்புகிறார், திணறுகிறார் என்று தனது புலனாய்வு சாதனையினை தம்பட்டமடித்துக் கொள்கிறது நக்கீரன்.

நடிகைகளின் வாழ்வு எவ்வளவு அவலமானது என்பது எல்லோருக்கும் தெரிந்த ரகசியமே. அப்படியிருக்கையில், ஏதோ ஓரளவு நடிப்புத்துறையில் முன்னேறி, தன்னை நிலை நிறுத்திக் கொண்டிருக்கும் ஒரு நடிகையைப் பற்றி கண்டபடி எழுதி, சில புகைப்படங்களையும் வெளியிட்டு, அவரது எதிர்காலத்தைப் பாழடிக்கலாமா என்று சற்றும் யோசிக்கவில்லை மனிதாபிமானத்தைபற்றி வாய்கிழியப் பேசும் அந்த இதழ். நடிகைகளைப்பற்றி கிசுகிசுக்கள் வருவது வாடிக்கை என்பது வேறு விஷயம். ஆனால் வளர்ந்து வரும் ஒரு டி.வி.நடிகையைப்பற்றி இப்படிச் செய்திகள் வந்தால் எந்தத் தயாரிப்பாளர் அவரை தனது தொடர்களில் நடிக்க அழைப்பார்? அவர் வறுமைக்கு மீண்டும் தள்ளப்பட்டால் அவர் எப்படி தனது வாழ்க்கையினை நடத்துவார்? அவர் பிழைப்புக்கு நக்கீரன் போன்ற இதழ்கள் ஏதாவது செய்ய முடியுமா என்ன?

வியாபாரத்திற்காக எவ்வளவு தரம் தாழ்ந்து போகின்றன தமிழ் பத்திரிகைகள்? தனது நிருபர் ஒருவரைக் கைது செய்ததால் நிலை குலைந்துபோய், அடுத்த அம்பு நிறுவனத்தின் முதலாளிமீதே பாயும் என்றஞ்சி, நாடெங்கும் நீதி கேட்டு முறையிடும் நக்கீரன், இவ்வாறு தனிப்பட்ட ஒருவரின் கண்ணியத்தினை குழிதோண்டிப்புதைத்து, அவரது எதிர்காலத்தினை கேள்விக்குறியாக்குவது எந்த வகையில் நியாயம்?

பிரகாஷின் லீலைகள் பற்றி வரிந்து வரிந்து எழுதும் இதே பத்திரிகைகள், பாலுணர்வைத் தூண்டி, இளைஞர்களின் சிந்தனையினை வக்கிரப்படுத்தும் வகையில் திரைப்படம் எடுப்பவர்களை, அத்தகைய நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் தொலைக்காட்சிகளைக் கண்டிப்பதில்லை.

குறிப்பாக இன்று எல்லா தமிழ் தொலைக்காட்சிகளிலும், மேல்நாட்டு நடனம் என்ற பெயரில் மிக ஆபாசமான அங்க அசைவுகள் கொண்ட நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. பத்து வயது, பன்னிரண்டு வயது சிறுவர்களும், சிறுமியர்களும் தாங்கள் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல், அப்படி நடனமாட ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அவர்களை ஸ்டுடியோக்களிலேயே இருந்து, பார்த்து, ரசித்து, மகிழ்கிறார்கள் அவர்கள் பெற்றோர்கள்.


இத்தகைய போக்கு ஒட்டுமொத்த சமுதாய சீரழிவின் ஒரு பரிமாணம் தான். இப்பிரச்சனைகள் பற்றிய விவாதங்கள் இன்னமும் பெண்ணியவாதிகள், மற்றும் ஒரு சில பத்திரிகையாளர்கள் மத்தியில் பேச்சளவில்தான் இருந்துவருகிறது என்பது மிகவும் துரதிஷ்டம்தான். ■

# ஸ்போர்ட்ஸ்

ப.ராஜ்

## அவுஸ்திரேலியாவிற்கு நெத்தியடி

## இறுதிப் போட்டியில் தென் ஆபிரிக்கா-நியூசிலாந்து



அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் வி.பி.கிண்ணத்திற்கான 3 நாடுகள் பங்குபற்றும் முக்கோண ஒரு நாள் போட்டிகளின் இறுதிப் போட்டியில் தென் ஆபிரிக்க-நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளன.

ஏற்கனவே இறுதிப்போட்டியில் பங்குபற்றுவதற்கு தென் ஆபிரிக்க அணி தெரிவு செய்யப்பட்ட நிலையில், அவுஸ்ரேலிய அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகுவதற்கான இறுதிச் சந்தர்ப்பமாக தென் ஆபிரிக்க-அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையேயான போட்டியானது சுற்றுப் போட்டியின் இறுதி லீக் போட்டியாக சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது.இப்போட்டியில் 33 ஓட்டங்களால் அவுஸ்ரேலிய அணி வெற்றி பெற்ற போதும் போனஸ் புள்ளிகளை பெற்றுக் கொள்ளும் வகையில் வெற்றி இலக்கை அடையாத காரணத்தால் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்துள்ளது.

இறுதிப் போட்டியில் தென் ஆபிரிக்க அணியுடன் மோத வேண்டுமாயின், 40 ஒவர்களில் வெற்றி இலக்கை அடைய வேண்டும். அல்லது 226 ஓட்டங்களுக்குள் எதிரணியை வீழ்த்த வேண்டும் என்ற நிர்ப்பந்தத்துடன் தென் ஆபிரிக்காவுடனான இறுதி லீக் போட்டியில் களமிறங்கியது அவுஸ்ரேலிய அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணியினர் மிகவும் சிறந்த முறையில துடுப்பெடுத்தாடி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 283 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். அவுஸ்ரேலிய அணி சார்பாக வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ அதிகூடிய ஓட்டமாக 51 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். தெ.ஆபிரிக்க அணியின் நிதினி போயே ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை பெற்றுக் கொண்டனர்.

எனவே, 284 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு தென் ஆபிரிக்க அணியினர் தமது துடுப்பாட்டத்தினை ஆரம்பித்தபோது, தென்-ஆபிரிக்க வீரர்களை 226 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்தாலே இறுதிப் போட்டிக்கு தெரிவாக முடியும் என்ற நிலையில் அவுஸ்ரேலிய அணியினர் தமது களத்தடுப்பை ஆரம்பித்தனர். எனினும் தென் ஆபிரிக்க அணியினர் வெற்றி இலக்கை அடையாத போதும் சகல துறை ஆட்டக்காரர் ஐக் கலிசின் அபாரமான துடுப்பாட்ட உதவியுடன் 50 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 250 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

இதனால் இறுதிப் போட்டியில் பங்கு பற்றும் வாய்ப்பை அவுஸ்ரேலிய அணி இழந்துள்ளது கடந்த 23 வருடங்களாக நடைபெற்று வரும் இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகும் வாய்ப்பை இழந்தது இது மூன்றாவது தடவையாகும்.

# இலக்கிய நயம்

## நெஞ்சினிலே

அவன் நினைவாக அவளிடம்
இருக்கும் பெரும் சொத்து
சோகம்!

வேண்டாம் என்று ,அவன்
விலகிப்போன பின்னும் அவள்
வேண்டாம் என உதறாதது
சோகம்!

காதல் முறிந்ததென்று
அவன்தான்
பறையறைந்ததுபோல
இரைந்துவிட்டுப் போனான்!

காதல் என்ன பட்ட மரமா
'படீர்' என்று முறிவதற்கு?

காதல் என்ன முகம் பார்க்கும்
கண்ணாடியா
'டமார்' என்று உடைவதற்கு?

காதல் என்ன மண்பானையா
போட்டுவிட்டதும் பொட்டென்று
சிதைவதற்கு?

நினைப்பது சுலபம் மறப்பது
கடினம்!

காதல் கைப்படுவதைவிட
காதலை கைவிடுவது கடினம்!

எதை மறக்க வேண்டும் என்று
நினைக்கிறோமோ அதையே
மனம் நின்று நினைக்கிறது!

பாம்பு தன் தோலை உரித்துப்
போடலாம்!

மனிதர்கள் தம் சட்டைகளை
மாற்றிக் கொண்டிருக்கலாம்!

மனதை அடிக்கடி மாற்றிக்
கொள்ள முடியுமா?

ஒரே மனம் ஒரே குணம்!

மாற்ற முடியாது-ஆகவே ஆழப்
பதிந்தவற்றை மறக்கவும்
முடியாது! அழித்துவிடவும்
இயலாது!

காரணத்தோடு பிரிவது என்ற
ால்-மனதில் ரணம் வராது!

காரணமே இல்லாமல்
பிரிந்தானே!-அதுதான்
ஏராளமான வலியை இதயத்தில்
விதைக்கிறது! ஊர் அறிந்த
காதலுக்கு ஒரு நொடியில்
சாதலா? தேர் போல
சுற்றிவந்த காதல் இரத்ததை
ஒரு நொடியில் காலுடைத்து
போடலாமா?

சுரம் மீட்டிய வீணையை கரம்
எடுத்து எறிந்ததேன்?

கை பறித்த பூவை கசக்கி
எறிந்து பார்க்கலாமா?

நிவைகளுக்கு குஞ்சம் கட்டி,
சோகத்துக்குள் தஞ்சம்தேடிக்
கொண்டிருந்தது நெஞ்சம்!

'வெட்கம் கெட்ட மனமே!
விலகிப் போனவனின் பக்கம்
ஏன் போகிறாய்?'

'உதடுகள் இகழ்ந்தாலும்
உள்ளம் சளைக்காது!

கனவுகள் கலைந்தாலும்
நனவுகள் நழுவாது!

கள்வடியும் இதழ்களில் அவன்
குடித்த நினைவு!



வெண்சங்கு கழுத்தினில் அவன்
உதட்டின் சுவடு!

மென் பட்டு மேனியெங்கும்
வன் கரம் பட்ட நினைவு!

நன் மெத்தை மீதினிலே கண்
தூங்கா உறவு!

இப்போது நினைத்தாலும்
நெஞ்சு விம்மும் நினைவு!

வாடிப்போனாள் வதங்கிப்
போனாள் பூங்கொடி!

தேடிப்போக நெஞ்சு
சொல்லும்! வேண்டாம் என்று
வீம்பு பிடிப்பாள்!

"சமரசம் காணாத சரசம்
உண்டோ?

ஊடல் இல்லாத கூடல்
உண்டோ?

தோள் மெலிந்த பூங்கொடி!
தோள் கொடுப்பவனை நாடடி!
தேள் கொட்டியதோ உதட்டில்?
தேன் கொட்டட்டும் உறவில்?

நெஞ்சம் புத்தி போதித்தது!

"பகைத்தது நானோ
அவர்தானே?"

"தொட்டாச் சிணுங்கியாய்
செல்லாத காரணத்திற்காய்
கோபம் கொண்டு
சொல்லாமல்போனது
அவர்தானே?" என்றாள் அவள்!

"ஒருவர் பகைத்தால்
இன்னொருவர் நகைப்பதே
உண்மைக் காதல்!"

விட்டுக் கொடுப்பிலே கிளை
விட்டு தளைப்பதே கெட்டிக்
காதல்! தீயவன் என்றால்
தூக்கி எறியலாம்!

உன்னவன் தீஞ்சுவையானவன்!

உன்னையே கொஞ்சிக்
கிடந்தவன்!

கொஞ்சியவனை கெஞ்சலாம்!
மிஞ்சியவனைத்தான்
கொஞ்சக்கூடாது!"

நெஞ்சம் அவளுக்கு வஞ்சகம்
இல்லாது வழிகாட்டியது!

அவளுக்கோ நெஞ்சோடு
பிணக்கு

"எனக்கு உரைக்கும் நெஞ்சே!
உனக்கு அவரைப் பகைக்க
தெரியாதா?

துன்ப நோயில் தாங்காது
நான் துடிக்க தூங்கிக்
கொண்டிருப்பவரை நினைத்து-
நீ ஏங்கி என்ன பயன்?"

**"இருந்துள்ளி என் பரிதல் நெஞ்சே**
**பரிந்துள்ளல்**
**பைதல் நோய் கொய்தார்கண் இல்"**

அதிகாரம் 125, குறள்: 1243

## சிந்தியா பதில்கள்

**★ காதலில் தோல்வியடைந்தவர்கள் ஆண்களை விட பெண்கள்தானே அதிகம். ஏன்?**

ஐ.வதனா-வவுனியா.

*கணபதியின் கேள்வியைப்பாருங்கள்.*

**★ காதலில் பெண்களால் ஏமாற்றப்படுவதே அதிகம். இருந்தும் ஏன் மீண்டும் மீண்டும் காதலிக்கிறார்கள்?**

கணபதி-லிந்துல.

*வாழ்க்கை என்றாலே ஏமாற்றமும், கொடுமையும் தண்டனைகளுமாகத்தான் இருக்கிறது. அதற்காக வாழ்க்கையே வேண்டாம் என்று சொல்லிவிட முடிகிறதா?*

*மற்றொன்று, காதலில் ஒருவர் மட்டும் தோல்வியடைவது சாத்தியமே இல்லை.*

**★ பேச்சு பலத்தால் வெல்லும் அரசியல்வாதி பண பலத்தில் வெல்லும் அரசியல்வாதி. இவர்களில் எவர் உண்மையான ஆட்சியை அமைக்கக்கூடியவர்?**

பி.விக்னேஸ்வரன்-ஹட்டன்.

*மக்கள் பலத்தால் ஆட்சிக்கு வருகிறவர்களே சொதப்பிவிட்டுப் போகிறார்கள்... நீங்கள் வேற.. வயித்தெரிச்சலைக் கிளப்பிவிட்டுக் கொண்டு..*

**★ பார்த்தாலே பரவசத்தில் 'மூன்றெழுத்தில் கேட்ட வார்த்தை எந்த வார்த்தை சிஷ்யா?' என்று ஒரு பாட்டில் வருகிறதே. அது எந்த வார்த்தை சிந்தியா?**

வீ.கே.ஜெயசுதன்-மூதூர்-02.

*கேட்ட வார்த்தை இல்லை அது கெட்ட வார்த்தை 'கா'-வில் ஆரம்பிக்கும் 'ல்'-இல் முடியும் என்று அதை எழுதிய வாலியே பாடல் முடிவில் சொல்லி விடுகிறாரே!*

**★ வாய்வலிக்க வாக்குக் கேட்டு**
**வணக்கத்துடன் வாக்குறுதியளித்து**
**சனக்கூட்டம் நடுவே சரமாரியாய்**
**வீசிய உன் இதழ்களின் இனிப்புச்**
**-சுவைகள்**
**ஆசனம் அமரும் வரையா?**

வாசுதேவன் ஆனந்தராஜ்-இறம்பொடை.

*'இனிப்பு வீசும் இதழ்கள்...' கவிதை நன்றாகத்தான் இருக்கிறது. காதலிக்கு எடுத்து விடுங்கள். சந்தோஷப் படுவார். அதை விட்டுட்டு, வழியில் படுத்துக் கிடக்கும் நாய்க்கு யார் வேண்டுமானாலும் ஒரு உதை கொடுத்து விட்டுப் போகலாம் என்பதுபோல திரும்பத் திரும்ப அரசியல்வாதிக்கு அடித்துக் கொண்டிராதீர்கள். வேண்டுமானால் வாக்குப் போடுவதற்கு முன்னர், அவர்கள் செய்ய வேண்டியவை என்ன என்பதற்கு ஒரு ஒப்பந்தம் எழுதி கையெழுத்திட்டு வாங்கி வைத்துக் கொள்ளப் பார்க்கலாம்.*

**★ 'முயல்' பற்றி உமது அபிப்பிராயம் என்ன?**

பஸ்மீர், எதுன்கஸகொடுவ.

*அழகானது. ருசியானது.*

**★ உங்களுக்கு அரசியல் பிடிக்குமா?**

சி.பவரூபன், காரைதீவ-01.

*இல்லாவிட்டாலும், அதுவே எல்லோரையும் பிடிக்கும்.*

**★ லைலாவைப்பற்றி?**


கவிதா, சாய்ந்தமருது.

*மஜ்னுவால் தீவிரமாகக் காதலிக்கப் பட்டவள். அந்த அளவுக்கு அவள் மஜ்னுமேல் காதல் கொண்டிராததால் தான் இருவரும் சேர முடியவில்லை என்கிறது அந்த உருதுக் கதை. மஜ்னு என்கிற கயஸ் பைத்தியம் பிடித்து காடு மேடெல்லாம் அலைந்தான் என்பதும் அந்தக் கதையில் சொல்லப்பட்ட வரலாறு. பைத்தியம் பிடித்து அலைவது என்னும்போது ஞாபகம் வருகிறது. குல்பிச் சிரிப்பும், 'கொழுக் மொழுக்' கன்னங்களுமாக திரையில் வரும் லைலா மீது பைத்தியமாகி பலர் முகவரி கேட்டு எழுதுகிறார்கள். ஒருவேளை இந்த லைலாவைப்பற்றிக் கேட்டிருந்தீர்கள் என்றால்... அந்தச் சிரிப்புக்கு நான் அடிமை.*

**★ இறைவன் நல்லவர்களைச் சோதிப்பது ஏன்?**

ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

*கெட்டவர்கள் அதையெல்லாம் லட்சியம் செய்து கொண்டிருப்பதில்லை என்பதால்!*



**★ யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கும் காலத்திலேயே ஆட்களைக் கடத்திப் பணம் கேட்பதாகவும், வாங்கி வரும் பொருட்களுக்கு வரி கேட்பதாகவும், சிறுவர்களைப் பிடித்துப் போவதாகவும் பத்திரிகைச் செய்திகள் வருகின்றனவே?**

இ.புனிதா, வவுனியா.

*தயவு செய்து சமாதானப் பேச்சுக் களைக் குழப்பிவிடுவது போலக் கேள்விகளைக் கேட்காதீர்கள்.*

**★ நம் நாட்டில் இப்போது நடந்துகொண்டிருக்கும் அரசியல் நிலைமை பற்றிச் சொல்ல கவிதை ஏதேனும் உள்ளதா?**

கே.ரமேஷ், பொத்துவில் நகர்.

*"முச்சை மெலிதாக இழுத்து விடுங்கள் இங்கு எல்லாமே சரியாக உள்ளது"- ஆத்மாநாம்*

# மன்னாதி மன்னன் 92

தங்கமாபுரி அரசியான சொர்ணகாந்தரூபி, ராஜரிஷி விஸ்வாமித்திரர் அளித்த வரத்தினால் பிரதிஷ்டாபுரி மன்னரின் மகனாகப் பிறந்தாள். தங்கமாபுரி மன்னன் தங்கேஸ்வரன் பிரதிஷ்டாபுரியில் ஒரு பிராமண குடும்பத்தில் மகனாகப் பிறந்தான்.

பிரதிஷ்டாபுரி மன்னன் மகளாகப் பிறந்த சொர்ணகாந்த ரூபி, சஞ்சீவி மடத்தை என்ற பெயரிலும் பிராணகுலத்தில் பிறந்த தங்கேஸ்வரன், ஆதிசேடன் என்ற பெயரிலும் அழைக்கப்பட்டனர்.

மங்களாம்பிகைக்கு பத்து வயதானதும் அவளுடைய பூர்வ ஜென்ம சம்பவங்கள் யாவும் நினைவுக்கு வந்தன. இரவு வேளைகளில் தங்கமாபுரியிலுள்ள சுந்தர மூர்த்தி கோவிலுக்கு தெய்வீகக் குதிரையிலேறிப் பயணம் செய்து திரும்புவாள்.

பருவ வயதினை அடைந்ததும் பிரதிஷ்டாபுரி மன்னர் தன் மகள் மங்களாம்பிகைக்கு திருமணம் முடித்துவைக்க ஆயத்தங்களைச் செய்யலானார். இவ்வேளையில் மங்களாம்பிகை ஒரு நிபந்தனையை விதித்தாள். தனக்கு மணாளனாக வருபவன் தங்கமாபுரி சென்று அங்குள்ள நிலைகளை அறிந்து திரும்பியவனாக இருக்க வேண்டும். அப்பேறபட்டவன் எவனாக இருந்தாலும் அவனையே தான் மணம் முடிக்கப் போவதாக அறிவித்தாள். தன் மகளின் கோரிக்கைக்கு ஏற்ப பிரதிஷ்டாபுரி மன்னன்," தங்கமாபுரிக்குச் சென்று வந்தவர் எவரானாலும் அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருக்கும் ஆராய்ச்சி மணியை அடிக்கலாம். அவ்வாறு மணியை அடிப்பவர் இளவரசி கேட்கும் கேள்விகளுக்கு உரிய சரியான விடையை அளித்தால், அவரையே எனது மகள் மங்களாம்பிகைக்கு மணம் முடித்து வைப்பேன்" என்று நகரமெங்கும் தண்டோரா போடுவித்தார்.

பிராமண வீட்டில் பிள்ளையாகப் பிறந்த ஆதிசேடன் கல்வியிலோ ஏனைய கலைகளிலோ நாட்டம் கொள்ளாதவனாக வீண் பொழுது போக்கிக் கொண்டிருந்தான். மங்களாம்பிகையின் திருமணம் தொடர்பாக பிரதிஷ்டாபுரி மன்னன் நகரெங்கும்அறிவித்ததை ஆதிசேடனும் கேட்டான். தங்கமாபுரி என்ற வார்த்தையைக் கேட்டதும், குழப்பமடைந்தான், அப்பெயரும்அவனுக்கு அறிமுகமானதாக இருப்பதையும் உணர்ந்தான். ஏதோ தங்கமாபுரி அவனுடைய கனவில் அடிக்கடி காட்சி அளிப்பதுபோலக் கருதினான். எப் போதோ அந்த நகரத்தில் சுற்றித் திரிந்தது போன்ற கற்பனைகள் எழுந்தன. அந்நகரம் தனக்கு நன்கு பரிச்சியமான இடம் என்று கருதினான். எனினும் சொர்ணாபுரி அரசியாகவிருந்து இப் பிறப்பில் மங்களாம்பிகை என்ற பெயரில் மறுபிறவி எடுத்திருக்கும் சொர்ணகாந்த ரூபிக்கு முற்பிறப்பு நினைவுகள் திரும்ப வந்ததைப் போல் அவனுக்கு வரவில்லை.

ஆதிசேடன் தங்கமாபுரி என்ற வார்த்தையைக் கேட்டது முதல், தனது நண்பர்களிடமெல்லாம் தான் அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருக்கும் மணியை அடிக்கப்போவதாகச் சொல்லத் தலைப்பட்டான். அரசருடைய அறிவித்தல் போன்று தங்கமாபுரி போய்ப் பார்க்காத எவரும் போய் அந்த மணியை அடித்தால், அரசரை ஏமாற்றத் துணிந்த எத்தன் என்று அரசர் தண்டனை கொடுப்பார் என்று அவனுடைய நண்பர்கள் பயமுறுத்தினர். அவனுடைய பெற்றாரிடமும் சென்று முறையிட்டனர். அவர்களும் எவ்வளவோ புத்திமதிகளைக் கூறியும் ஆதிசேடனைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஒரு நாள் எவருக்கும் சொல்லாமல், ஆதிசேடன் நேராக அரண்மனை வாயில் சென்று ஆராய்ச்சி மணியை அடித்துவிட்டான். அந்த மணி கட்டப்பட்ட நாள் முதல் எவரும் அதனை அடிக்காமையினால் மன்னன் மிகுந்த வேதனை அடைந்திருந்தான். மணியோசை கேட்டதும் மன்னன் பெருமகிழ்ச்சியடைந்தான். தன் மகளுக்கேற்ற மணாளன் கிடைத்துவிட்டதாகவே கருதிய மன்னன், காவலர்களை அனுப்பி, மணி அடித்தவரை தக்க மரியாதையுடன் அழைத்து வருமாறு சொன்னார்.

## ஆதிசேடனின் அங்கலாய்ப்பு

அரண்மனை வாயிற்புறம் சென்ற காவலர்கள் அங்கு ஒரு பிராமண இளைஞன் நிற்பதைக் கண்டு ஏமாற்றமடைந்தனர். மணியை அடித்தது யார் என்று ஆதி சேடனிடம் வினவியபோது, தான்தான் மணி அடித்தாக ஒப்புக் கொண்டான். "நீ தங்கமாபுரி சென்றிருக்கிறாயா"? என்று கேட்டனர். "ஆமாம்" என்று தைரியமாகவே ஆதிசேடன் கூறியதும், அவனை அரண்மனைக்கு வருமாறு அழைத்துச் சென்றனர். அரசவையில் இருந்த மன்னர் ஆதிசேடனை விசாரித்த போதும் தான் நிச்சயமாக தங்கமாபுரி சென்று வந்ததாகக் கூறினான்.

பார்ப்பதற்கு எதுவிதமான நற்தோற்றமும் இல்லாத இந்த இளைஞன் தனது மகளான இளவரசி சஞ்சீவி மடந்தைக்கு ஏற்ற கணவனாக இருக்க முடியாது என்று மனம் வருந்தினார் இருப்பினும் தன்னுடைய மகளுடைய கோரிக்கைக்கு ஏற்றாப்போல் ஆராச்சி மணியை அடித்த இளைஞனை விசாரிப்பதற்கு அந்தப் புறத்திலுள்ள தன் மகளிடமே அனுப்பி வைத்தார்.



ஆதி சேடனைக் கண்டதும் இளவரசி சஞ்சீவி மடந்தை குழப்பமடைந்தாள் அவளை அறியாமல் அந்த இளைஞன் மீது ஒரு வகையான பற்றுதல் ஏற்படுவதை உணர்ந்தாள். இளைஞனிடம் "தங்கமாபுரியை நீர் போய்ப் பார்த்து வந்திருக்கிறீரா"? என்று கேட்டாள். ஆதிசேடன் "ஆம் நான் அந்த நகரத்தை முழுமையாகப் போய்ப் பார்த்து வந்திருக்கிறேன்" என்று தைரியமாக பதிலளித்தான். மீண்டும் மீண்டும் தங்கமாபுரி நகரத்தைப் பற்றி பலதரப்பட்ட வினாக்களையும் "அந்த நகரம் எவ்வாறு இருக்கிறது; குடிமக்கள் எப்படி இருக்கிறார்கள்"? என்று கேட்டாள்.

**இராஜகுமாரன்**

இளவரசியின் கேள்விகளுக்கு பதிலளித்த ஆதிசேடன், தங்கமாபுரி நகரம் மிக உன்னதமான நிலையில் இருப்பதாகவும் குடிமக்கள் எக் குறையுமில்லாமல் கவலைகள் எதுவுமில்லாமல் வாழ்ந்து வருவதாகவும் கூறினான்.

ஆதிசடேனின் பதில்களைக் கேட்ட சஞ்சீவி மடந்தைக்குச் சிரிப்புத்தான் வந்தது. அரண்மனையில் பொய்கூறுவோர் அரச தண்டனைக்கு உள்ளாவார்கள் ஆனால் ஏனோ ஆதிசேடனை தண்டனைக்கு உட்படுத்தி துன்புறுத்துவதற்கு இளவரசி விரும்பவில்லை. ஆதிசேடனை அரண்மனைக்கு அப்பால் கொண்டுபோய் விட்டுவரும் படி காவலர்களுக்கு கட்டளை பிறப்பித்தாள்.

பொய் கூறி விட்டான் என்ற குற்றச் சாட்டுடன் வெளியேற்றப்பட்ட ஆதிசேடன், தான் நிட்சயமாக தங்கமாபுரி சென்று வந்ததாக எல்லோருடமும் சொல்லித் திரிந்தான் அதே நம்பிக்கையுடன் மீண்டும் மீண்டும் அரண்மனை வாயிலில் இருக்கும் மணியை அடித்து இளவரசியின் முன்னிலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மீண்டும் மீண்டும் துரத்தியடிக்கப்பட்டான்.

இவ்வாறு பல தடவைகள் ஆதிசேடன் விரட்டியடிக்கப்பட்டும் மீண்டும் மீண்டும்அரண்மனையிலுள்ளவர்களையும் இளவரசியையும் ஏமாற்றி வருவதனால் அவனை கோட்டைக்கு வெளியே வெகு தூரம் வரை கொண்டு போய் விட்டுவிட்டு வரும்படி இளவரசி காவலர்களுக்கு கட்டளையிட்டாள்.

தங்கமாபுரி அரசன் தங்கேஸ்வரனாக அவன் இருந்து திடீரென மரணமடைந்தமையினால் மறு பிறவியில் தான் முற்பிறவியில் வாழ்ந்த இடத்தின் நினைவுகள் அடிக்கடி எழுந்தமையினால், இப்பிறவியிலேயே தான் அந்த நகரத்தை போய்ப் பார்த்து வந்ததாக கருதத்தொடங்கி இருந்தான். தான் கூறுவது பொய் என்று நிரூபிக்கப்பட்டு கோட்டைக்கு வெளியே துரத்தி அடிக்கப்பட்டமையினால் வேதனையுடனும் அவமானத்துடனும் மனம் போன போக்கில் அங்குமிங்கும் அலைந்து திரிந்தான். 'எப்பபடியாவது தங்கமாபுரிக்கு மீண்டும் சென்று வர வேண்டும்; பிரதிஸ்டாபுரி இளவரசியை தன் கூற்றை நம்பும்படி செய்து அவளை மணம் முடிக்க வேண்டும்' என்று மனதை திடப்படுத்திக் கொண்டாள் இவ்வாறு நான்கு மாதங்கள் வரை அலைந்து திரிந்துவிட்டு மீண்டும் பிரதிஸ்டாபுரம் வந்து சேர்ந்தான்.

ஊர்வந்து சேர்ந்த பின்னும் தங்கமாபுரி செல்ல வேண்டும் என்ற அவா அவனைவிட்டு அகலவில்லை காண்பவர் எல்லோரிடமும் தங்கமாபுரிக்குச் செல்லும் வழி கேட்பான். எவரும் அவனுக்கு தக்க பதில் கூற முடியவில்லை.

ஒரு நாள் ஆதிசேடன் ஆற்றங்கரையிலுள்ள ஆலமர நிழலின் கீழ் அமர்ந்த வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அப்போது அவ்வழியே வந்த வழிப்போக்கன் ஒருவனிடம் தங்கமாபுரி செல்லும் வழி கேட்டான். அந்த நகரைப் பற்றி தனக்கு எதுவமே தெரியாது என்று கூறிய வழிப்போக்கன் "தங்கமாபுரி செல்வதற்கு உரிய வழியை நீ அறிய வேண்டுமானால், அதற்கு ஒரே ஒருவன் தான் இருக்கிறது உச்ஜயனி மாகாளி பட்டணத்தை ஆட்சி புரியும் வல்லமை பொருந்திய மாமன்னன் விக்கிரமாதித்தனை அணுகி அவருடைய உதவியைக் கோரினால் அவர் உனக்கு நிட்சயமாக நீ தேடும் நயத்தை உனக்கு காட்டுவார். அவர் காடாறு மாதம் செல்லும் வதுக்கம் உடையவர். அக்காலங்களில் அம்மன்னர் பல நாடு நகரங்களையும் சென்று பார்த்துத் திரும்புவார். அவரைத் தவிர வேறு எவராலும் கண்டு பிடிக்க முடியாது எனவே உடனே அவரிடம் சென்று வேண்டுகோள் விடுத்தால் அவரே உன்னை தங்கமாபுரிக்கு அழைத்துச் செல்வார்" என்று கூறினார்.

வழிப்போக்கன் கூறிய வார்த்தைகளில் நம்பிக்கை வைத்த ஆதிசேடன் உடனடியாகவே 'உச்ஜயனி மாகாளி பட்டணத்தை நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்தான்.

(மன்னன் வருவான்...)

# கேள்வித் தீயில்... விநாயகர்

கடந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றி வாகை சூடி பாராளுமன்றத்தினை அலங்கரித்துக் கொண்டிருக்கும் திருவாளர் விநாயகரை கேள்விகளால் துளைத்தெடுப்பதற்காக அவரது அரசியல் காரியாலயங்கள், பிரத்தியேக காரியாலயங்கள் எல்லாவற்றிற்கும் காதிலை பூ கந்தசாமியார் வலைவீசினார். ஆனால், அனைத்து வரவேற்பறை வாசல்களும் மூடியிருந்ததால் அவரது படுக்கை அறையில் வைத்து பேட்டி காண நேரிட்டது.



படுக்கை அறையின் வாசல் அருகே சென்ற கந்தசாமியருக்கு கரகரத்த குரலில் பாடல் ஒன்ற கேட்டது..

**வெற்றி மீது வெற்றி-வந்து**
**என்னைச் சேரும்-அதை**
**வாங்கித் தந்த பெருமை-எல்லாம்**
**புலியைச் சேரும்...**

(சுதாகரித்துக்கொண்ட கந்தசாமியார் கதவை தட்டுகிறார்.) கதவு திறக்கப்படுகிறது.

**கந்தசாமி:-** வணக்கம் ஐயா

**விநாயகர்:-** வணக்கம்! வணக்கம் (ஆச்சரியத்துடன்)

**கந்தசாமி:-** உங்கள் தூக்கத்தை தொந்தரவு செய்ததற்கு மன்னிக்கவும்.

**விநாயகர்:-** இல்லை, பரவாயில்லை, இன்று பகல் முழுவதும் பாராளுமன்ற ஆசனத்தில் தூங்கியதால் தூக்கம் வராத அவஸ்தையில்தான் பாடிக் கொண்டிருந்தேன். எந்த பத் திரிகைக்கு அறிக்கை கொடுக்கலாம் என சிந்திக்கிறேன். நல்லதாக போய் விட்டது நீங்களே வந்து விட்டீர்கள்.

**கந்தசாமி:-** நன்றி முதலாவதாக உங்கள் கொள்கைகளை எமது மக்களுக்கு கொஞ்சம் விளக்குவீர்களா...?

**விநாயகர்:** ஹி...ஹி... கொள்கைகளா...? அப்படி எதனையும் வைத்துக் கொள்ள நாம் என்ன கொள்கை வீரர்களா? நாம் வக்கீல்கள் நாம் வாதடப்போகும் வாதத்தின் சந்தர்பப்ப சூழ்நிலைகளிற்கும், சாட்சியங்களுக்கும் ஏற்ப. எமது வாதங்களை மாற்றிக் கொள்வது போல, தேர்தல் காலங்களில் இருக்கும் அரசியல் சூழலுக்கு ஏற்பதான் எமது அரசியல் கொள்கைகளை தீர்மானித்துக் கொள்ளுவோம். (சுற்றி சுற்றி எதையோ தேடுகிறார்)

**கந்தசாமி:-** எதையோ தேடுகிறீர்கள் போல் உள்ளதே...?

**விநாயகர்:-** ஆம், கடந்த பொது தேர்தல் விஞ்ஞாபனத்தையாவது தருவோம் எனத் தேடினேன். அதையும் எமது தொண்டர்கள் கச்சான் காரியிடம் விற்றுவிட்டார்கள் போல் உள்ளது.

**கந்தசாமி:-** பரவாயில்லை, நீங்கள் உங்கள் அரசியல் பயணத்தில் யார் வழியை பின்பற்றி செல்கிறீர்கள் என்று கூற முடியுமா?

**விநாயகர்:-** ஓ...அதுதான்,தம்பி பிரபாவிற்கு கோபத்தை ஏற்படுத்தாத வழிப்பயணம், அம்மையாருக்கு முகத்தை சுழிக்க வைக்கும் பயணம், கதிர்காமருக்கு கோபத்தை ஏற்படுத்தும் வழிப்பயணம்.. அதாவது, தமிழர்களின் நாடி நரம்புகளை பிடித்துப் பார்த்த எமது தலைவர் மாமனிதர் குமாரண்ணர் வகுத்துக் கொண்ட வழிப்பயணம். ஒட்டு மொத்தமாக சொல்வதானால் பாராளுமன்றம் செல்ல இலகுவான வழி எதுவோ அதுவே எமது அரசியல் பயணம்...

**கந்தசாமி:-** சூப்பர்... கொள்கை... தலைவர் குமாரின் வழியிலேயே செல்வதாக வார்தைக்கு வார்த்தை கூறிக்கொள்ளுகிறீர்கள் அப்படியானால் தமிழ் மக்களுக்காக, குறிப்பாக வடக்கு வாழ் தமிழர்கள் சார்பாக நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்த மனுக்கள் அவர் இறந்ததன் பிற்பாடு மனுதாரர் இல்லை என்ற காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட போது நீங்கள் எங்கே போனீர்கள்?

**விநாயகர்:-**(சற்றுக் கோபமாக) யார் சொன்னது உங்களுக்கு? அவரது வழியில் அரசியல் பயணம் செய்வதாக வார்த்தைக்கு வார்த்தை கூறினேனே தவிர, ஒரு சந்தர்ப்பத்திலாவது அவர் தாக்கல் செய்த மனுக்களை பாரமெடுப்பேன் என்று உங்களுக்கு சொல்லியிருக்கிறேனா..? அப்படி இருக்கையில் வீணாக மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு, என்னையும் குழப்பி, நீங்களும் குழம்பி மக்களையும் குழப்புவதை இத்துடன் நிப்பாட்டிக் கொள்ளுங்கள்.

**கந்தசாமி:-** "சொறி" நான் இப்போது சொன்ன வார்த்தையை தயவு செய்து மறந்து விடுங்கள். (அண்ணாச்சி கூட்டமைப்பு எம்.பி என்கிறதை மறந்து 'சொறி' என்று சொல்லி விட்டேன். பாராளுமன்றத்தில் இதை வைத்தே வெளுத்து வாங்கிவிடுவார்.

**விநாயகர்:-** சரி பரவாயில்லை, அடுத்தது..?

**கந்தசாமி:-** உங்கள் தலைவர் குமாரின் கொலை தொடர்பான விசாரணைகளில் சில திருப்பங்கள் வந்திருக்கின்றனவே...?

**விநாயகர்-**ஆம்,சில திருப்பங்கள் ஏற்பட்டுள்ளதாக பத்திரிகை ஒன்றில் பார்த்த ஞாபகம் இருக்கிறது. என்ன அவசரம் அடுத்த தேர்தல் நெருங்கும் போது, இருக்கும் அரசியல் சூழ்நிலைகளை ஆராய்ந்து அறிக்கை விடலாம் என எண்ணியுள்ளேன்.

**கந்தசாமி:-** தலைவர் குமாரண்ணாவின் இலட்சியங்கள் எதையாவது நீங்கள் எட்டிப் பிடித்து விட்டதாக நினைக்கின்றீர்களா?

**விநாயகர்:-** நிச்சயமாக, தலைவர் அவர்கள் எத்தனையோ வருடம் முயன்றும்,எட்டிப்பிடிக்க முடியாத பாராளுமன்ற ஆசனத்தை அவரின் பெயரை சொல்லி நாம் எட்டிப் பிடித்துள்ளோமே...? எமது தலைவர் என்னதான் வீறாப்பாக பேசிய போதும் அவரது பேச்சு ஹன்சாட் அறிக்கையில் இடம்பெற முடியவில்லை. ஆனால் நாம் சாதித்து விட்டோமே... அது போதாதா...?

**கந்தசாமி:-** சரி நீங்கள் யாழ். மாவட்ட பா.உறுப்பினராக இருக்கிறீர்கள் எப்போது யாழ்ப்பாணம் போகப் போகின்றீர்கள்?

**விநாயகர்:-** யாழ்ப்பாணத்தில் சம்பளத்திற்கு பிடித்த தொண்டர்களிடம் சொல்லி இருக்கின்றேன். நான் பொதுத் தேர்தல் காலத்தில் ஓடித் திரிந்த காரை 'சேர்விஸ்' பண்ணி வைப்பார்கள், எமது கட்சிக் கொடிகளை சலவை பண்ணி வைப்பார்கள், டிசம்பர் 7ம் திகதி பூட்டிவிட்டு வந்த கட்சிக் காரியாலயத்தை தூசி தட்டி வைப்பார்கள். அடுத்த தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் நான் அங்கு ஆஜராகி விடுவேன்.

**கந்தசாமி:-** இறுதியாக மக்களுக்கு எதை சொல்ல விரும்புகிறீர்கள்..?

**விநாயகர்:-** மக்களுக்கு ஒன்றை மாத்திரம் சொல்லி வைக்க வேண்டும் நாம் எப்ப எதை சொல்வோம் என்று எமக்கே தெரியாது. நாம் சொல்வதை உடனடியாக மறந்து விடும்படி கேட்டுக் கொள்கிறேன். மாறாக ஞாபகத்தில் வைத்திருந்து அதனை எமது அடுத்த அறிக்கையோடு ஒப்பிட்டு நீங்கள் குழம்புவீர்களேயானால் நாம் பொறுப்பாளிகள் அல்ல..... நன்றி.

**கந்தசாமி:-** நன்றி வணக்கம்.

ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண் முகக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

# முரட்டுப் பார்வை

புனுகுப்பூனை இனத்தைச் சேர்ந்த ஒரு வகை காட்டுப்பூனையையே படத்தில் காண்கிறீர்கள். இவற்றை வீட்டுப் பிராணிகளாக வளர்க்கமுடியும். ஆனால் தற்போது நமது வீடுகளில் வளரும் சாதரண பூனைகளைப் போன்று இவற்றை கொஞ்சி மகிழ முடியாது இந்த பூனை கடித்தால் சில கொடிய நோய்கள் ஏற்பட வாய்பிருக்கிறது.

இந்தப் பூனை இனம் 10 கிலோ எடைவரை வளரக்கூடியது. சுண்டெலிகள், பூச்சிகள், சிறு பறவைகள், ஊர்வன, பச்சைப் புல் போன்றவற்றை ஆகாரமாக உட்கொள்ளும் இந்தப் பூனை உணவுக்காக வெளியில் செல்லும்போது தனது இருப்பிடத்தில் ஒருவகை திரவத்தை சுரந்து விட்டுச் செல்லும். எந்தனை தூரம் சென்றாலும் இந்த திரவத்தின் வாசத்தை வைத்து தனது வசிப்பிடத்திற்கு மீண்டும் திரும்பி வர இந்தப் பூனையால் முடியும். இந்த வகைப் பூனை வெளியேற்றும் திரவங்கள் பண்டைய மன்னர் காலங்களில் நறுமணப் பொருட்களை உற்பத்தி செய்ய பயன்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இப் பூனை மிகவும் கூர்மையான பார்வையுடையதும்கூட.



அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

# ரயில் பயணங்கள்

நதியோரமாக ஊசியிலை காடுகளைக் கடந்து செல்லும் கனேடியன் பசுபிக் ரயில்வே சேவையின் பயணத்தையே காண்கிறீர்கள். நவீன கனடாவின் குடிமக்கள் பரம்பலுக்கு காரணமாக இந்த ரயில் வீதிகளே விளங்கின. இந்த ரயில் பாதையை அமைக்கும் பூர்வாங்கப் பணிகள் மிகவும் கடினமான சூழநிலையில் நடைபெற்றன. மலைச் சிகரங்கள், பள்ளத்தாக்குகள், கொடிய வனவிலங்குகள் வசிக்கும் காடுகள் என்று பல்வேறு நில அமைப்புக்கள் ஊடாக இந்த ரயில் பாதையை பல்லாயிரம் தொழிலாளர்கள் அமைத்து முடித்தனர். மொன்றியல் நகரிலிருந்து கனடாவின் மேற்குக் கரையிலுள்ள வான்கூவர் வரையிலான 4696 கிலோ மீட்டர் தூரத்திற்குள் பாதை அமைக்கும் வேலை மிகவும் சிரமமாக இருந்ததாம். இந்த ரயில் பாதை அமைக்கும் முயற்சியை ஆரம்பத்தில் பைத்தியக்காரத்தனமான செயல் என்று பலரும் விமர்சித்தனர். எந்தவிதமான விமர்சனத்தையும் பொருட்படுத்தாது பாதை அமைக்கும் பணியைச் செய்துமுடித்தனர். 1867ல் ஆரம்பிக்கப்பட்ட பணி 1885ல் பூர்த்தி செய்யப்பட்டு அதே ஆண்டு நவம்பர் 7ம் திகதி 1வது ரயில் பயணம் நடைபெற்றது.



# உடையாத உறுதி

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் போது கையில் காயத்திற்குள்ளான மேற்கிந்திய தீவுகள் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் பிரயின் லாரா தற்போது தேறி வருகிறார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இந்திய அணியுடனான போட்டிகளில் தன்னால் பங்கு பற்றக்கூடியதாக இருக்குமென்று லாரா நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

தான் அணியில் மீண்டும் இணைந்து கொள்ளக்கூடிய அளவு சுகம் பெற்றிருப்பதாக கூறும் லாரா தனது முழு பங்களிப்பையும் அடுத்து வரும் போட்டிகளில் அணிக்கு வழங்க வுள்ளதாக தெரிவிக்கின்றார்.

டெஸ்ட் போட்டியொன்றில் தனிநபர் பெற்ற அதிகூடிய ஓட்டமென்ற சாதனைக்குச் சொந்தக்காரரான லாரா கடந்த பருவகாலத்தில் முடிவடைந்த இலங்கை அணியுடனான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 100க்கும் மேற்பட்ட சராசரி ஓட்டங்களை குவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.







இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் பெப்.10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.